PERAGATTIYA TIRATTU

WITH ANNOTATIONS

BY

RAO SAHIB S. BAVANANDAM PILLAI

F.R.H.S. (Lond.) and M.R.A.S. (Lond.)

"*Grammar, though a difficult study, is absolutely necessary in the search after philosophical truth . . . and is no less necessary in the most important questions concerning religion and Civil Society.*"—HORNE TOOKE.

Madras

PRINTED AT THE S.P.C.K. PRESS, VEPERY

1912

பேரகத்தியத் திரட்டு

மூலமும் உரையும்.

இவ்வுரை

ச. பவாநந்தம் பிள்ளையவர்கள்

எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்) எப். ஆர். எச். எஸ். (லண்டன்)

எழுதியது.

"வினைதல், வினையவை, விடுத்தல், என்றிவை
கடனுக் கொளினேமடம் நனிஇகக்கும்"

சென்னை:

எஸ். பி. வி. கே. அச்சுக்கூடம்.

1912.

பேரகத்தியத் திரட்டு

1. பேரகத்தியச் சூத்திரம்.
2. பேரிசைச் சூத்திரம்.

ச. பவாநந்தம் பிள்ளை.

PREFACE

No apology is necessary for offering to the Tamil student these excerpts (*Peragattiya Tirattu*) from the *first Grammar of the Tamil Language* ascribed to the great sage *Agasthier*, to whom the commencement of literary activity in the Tamil country is said to be mainly due. Many are the traditions connected with the name of this supposed foster-father of Tamil—'a language which is undoubtedly the oldest, richest, and most highly organized, of the Dravidian languages—in many respects the representative language of the family.' The period of his existence is wrapped up in obscurity. Suffice it to say that he was one of the members of the first *Sangam* (conclave of learned Tamil poets), and that he was well versed in Sanskrit and Tamil and highly skilled in Theology, Metaphysics and Medicine. His works on these subjects were many. His Sanskrit *Ashtagam* shows his mastery in theological lore and disputation. As the first and best grammarian of the time, he wrote a Grammar called after him *Agathiam* in two books, known as *Pèr Agathiam* and *Sit Agathiam*, which embodied canons relating to Poetry and the Drama in twelve thousand *sutrams*. Most of these *sutrams* gradually sank into oblivion and are now lost, the fragments quoted by subsequent authors in their learned works being all that have survived.

Several inferior works are wrongly ascribed to *Agasthier*, of which the chief are *Gunavakadam*, *Vaithia Kummi*, *Vaithiasaram*, *Novinsaram*, *Avilthasaram*, *Senthuramurai*, *Amuthakalaghianam*, *Panchakávia-Nikandu*, *Kanmakandam*, *Purana Suthram* and *Sangu Suthi*.

Agasthier had twelve disciples, viz :—

(1) *Tholcapyan* (தொல்காப்பியன்).

(2) *Athankottasán* (அதங்கோட்டாசான்).

(3) *Dooralinghan* (துராலிங்கன்).

(4) *Sembootchei* (செம்பூட்செய்).

(5) *Vyapikan* (வையாபிகன்).

(6) *Vaippyan* (வாய்ப்பியன்).

(7) *Panambaran* (பணம்பாரன்).

(8) *Kazharamban* (கழாரம்பன்).

(9) *Avinayan* (அவினயன்).

(10) *Kakeipady* (காக்கைபாடி).

(11) *Nattathan* (நற்றத்தன்).

(12) *Vamanan* (வாமனன்).

These were all authors of repute : four of them are known to have written the following works called after their names :—

(1) *Tholcapyan—Tholkappiam.*

(2) *Avinayan—Avinayam.*

(3) *Kakeipady—Kakeipadyniam.*

(4) *Nattathan—Nattatham.*

Most of the works of these twelve disciples were lost during the Muhammadan Invasion. One of their joint works, however, survives, *viz.*, the *Purapporul Panniru-padalam* (புறப்பொருள் பன்னிரு படலம்). The subject of the work is Ancient Hindu Politics and Warfare.

Owing to the absence of reliable historical records, or of internal evidence in ancient and medieval Tamil works, it has become almost impossible to trace the history and epoch of *Agasthier* in spite of the valuable aid derived by

literary scholars and antiquarians from subterranean excavations, and the discoveries and decipherments of lithic and metallic records made by epigraphists and archæologists.

The work in which I am engaged as a Government servant does not allow me to devote much of my time to original research in the vast field of the antiquarian literature of this country. It is to be hoped, however, that those who have the necessary scholarship and can command the leisure and who are also endowed with patience, and literary enthusiasm will conduct their original researches and earn the gratitude of every true lover of India.

NEWTON HOUSE, VEPERY.
Madras, April 1912.

S. B. P.

முகவுரை.

இவ்வுலகின்கண் பற்பல மொழிகள் வழங்கப் பெறுகின்றன. அவற்றுள் சில ஒலிவடிவினைமட்டும் பெற்றிருக்கின்றன. பல ஒலிவடிவோடு வரிவடிவினையும் அடைந்துள்ளன. நம் தமிழ் மொழியோ ஒலிவடிவு, வரிவடிவு இரண்டனையும் பெற்று நிலவுகின்றது. தமிழ் மொழியின் வரலாற்றைக் கூற இரண்டு புராணக்கூற்றுக்கள் உள. அவைதாம்—

(1) அகத்தியமுனிவர் காசியம்பதியி லிருந்த வடமொழி வாணரோடு மாறுபட்டு, அம்மொழிக்கு இணையான மற்றொன்றினை யருளுமாறு முருகக்கடவுளை இரப்ப, அக்கடவுள், இவ்விரக்கம் அறிவின்பாலதாகலின் இவற்கருள் செய்தும் எனத் திருவுளங்கொண்டு, ஓர் இடத்தைச் சுட்டி, "அன்ப! அம்மூலைக்கண் உள்ளது; சென்று கொள்க" எனலும், முனிவர் விரைந்தோடி "தமிழ்! தமிழ்!" எனக் கூவி அவ்வோலைச் சுவடிகளை வாரிக் கொண்டு வெளிப்போந்து, முருகக்கடவுளை வணங்கி விடைபெற்று, தமிழ் மொழியை இவ்வுலகின்கண் நிலவ வைத்தனர் என்ப.

(2) சிவபெருமான் பார்வதியாரைத் திருமணங்கொண்ட காலத்து, முனிவர் அனைவோருந் திரண்டு, வடக்கின்கண்ணுள்ள இமயமலையை யடைதலும், வடதிசை பொறையாற்றாது தாழவும், தென்றிசை பொறையின்றி மேலெழவுங் கண்ட பெருமான் அகத்தியரை நோக்கி, "நீ விரைந்து சென்று, தென்றிசைக்கணுள்ள பொதியையில் தங்குக" எனலும், முனிவர் அவ்வருண்மொழியைச் சிரமேற்கொண்டு, "எம்பெருமானே! தமிழ் மொழி தலைசிறந்து விளங்கும் அத்திசைக்கண் அடியேன் சென்று வாழ்ந்திருத்தல் எங்ஙனம்?" என்று விண்ணப்பஞ்செய்து, அம்மொழியைச் சிவபெருமான் அருளப்பெற்று, சந்தனப்பொதியை யடைய, பூமி சமனுறக் கண்டு மகிழ்ந்து, ஆண்டே வதிந்து, தமிழ் மொழியை நன்கு ஆராய்ந்து இலக்கணமும் செய்து வைத்தனர் என்ப. இவை போல்வன இன்னும் பல.

இக்கூற்றுக்களின் உண்மை எவ்வாறாயினும் தமிழ் மொழி அகத்தியனாருக்கு முன்னரே இந்நாட்டின்கண் நின்று நிலவிற்று என்பது பொய்ம்மையாகாது.

இது நிற்க, அகத்திய முனிவரே தமிழ் மொழியைப் படைத்துத் தந்தனர் என்று கூறி, "அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு"

என்பதுபோன்ற மேற்கோள்களைக் காட்டுவர் ஒரு சாரார். அவர் வடமொழிக்கண்கொண்ட பேரபிமானமும், சரித்திர ஆராய்ச்சியின்மையுமே அதற்குப் போந்த காரணங்களாம். இனி, அவர் கூற்றுப் போலியாமாறு காட்டுதும். அகத்தியனார் வடமொழிவாணரோடு மாறுபட்டு முருகக்கடவுளை வேண்ட, அப்பெருமான் ஓரிடத்தைச் சுட்டி 'அதனை எடுக்க' என்றார் என்பவாகலின், அம்மொழி முன்னரே சேமத்தில் இருந்ததென்பதும், சிவபெருமான் தென்றிசையிற் செல்க என்புழி, அகத்தியனார் ஐய! ஆண்டு வழங்கும் தமிழ் மொழியை அடியேன் சிறிதும் அறியேனே என்றிரந்து, அம்மொழியைச் சிவபெருமான் அருளப் பெற்றனர் என்பவாகலின் அம்மொழி அகத்தியனாருக்கு முன்னரே இந்நாட்டின்கண்வழக்காற்றி லிருந்ததென்பதும் வெள்ளிடைமலைபோல் விளங்குகின்றது. இவையனைத்தும் ஒருவாறாக, அகத்தியனாரே தம் இலக்கணத்துள்,

> "இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
> எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
> எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
> இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்"

என்றாராகலின், அகத்தியனார் தாம் இலக்கணம் செய்வதன் முன்னரே தமிழ் மொழி இந்நிலத்தில் நின்று நிலவியது என்பது போதரும். மற்றும் அகத்தியர் தமிழ் மொழியை அவலோகித முனிவர்பாற் கற்றுணர்ந்தாரென்னும் அருகர் கூற்றும் இதனை வலியுறுத்தும்.

இனி; அகத்தியர் தமிழ் மொழியை நன்கு பயின்று, அம்மொழிக்கு வேண்டிய ஆதரவுகளைப் போதவும் தேடிவைத்தனர் என்பது பொய்ம்மையாகாது. ஆயினும் அகத்தியர் காலத்துக்கு முன்பு இருந்த இலக்கியம் ஒரு சிறிதும் இக்காலத்தே கிடைத்திலது. அகத்தியனாரும் இலக்கணமாத்திரம் செய்தருளினர் என்று கேள்விப்படுகின்றோம். இலக்கியம் யாதும் நமக்குக் கிடைத்திலது. சிற்சில வைத்திய நூல்கள்மட்டும் அகத்தியர் பெயரால் வழங்குகின்றன. அவற்றின் உண்மை அவற்றைக் காணும் நல்லறிவாளர் அகத்திற்கே புலனாகும்.

அகத்தியரது வரலாறு காலம் முதலியவற்றை வரையறுத்துக் கூறும்வகை சிறிதும் இல்லாதொழியினும், கர்ணபரம்பரையாகச் சிற்சில கதைகள் வழங்குகின்றன. அகத்தியர், இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையில் உள்ள ஆரியாவர்த்தம் என்னும் தேசத்தில் இருந்தவர். இவர் விதர்ப்பநாட்டின் மன்னன் மகளாகும் உலோபாமுத்திரை என்பவளை மணந்து சித்தன் என்னும்

ஒரு மைந்தனைப் பெற்றனர் என்ப. இவர் முதற்சங்கத்துப் புலவர்கள் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மரில் ஒருவர் என்பது இறையனு ரகப்பொருளுரையிற் காண்க.

"தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினுர் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்க மிருந்தார் அகத்தியனுருந் திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும், குன்றமெறிந்த முருகவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்பது. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினு ரென்பது. அவர்களாற் பாடப்பட்டன வேத் துணேயோர் பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையுமென இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தா ரென்பது. அவர்களைச் சங்கமிரீஇயினுர் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோ னீருக எண்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவியரங்கேறினுர் எழுவர் பாண்டிய ரென்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல்கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்திய மென்ப.

இனி; இடைச்சங்க மிருந்தார் அகத்தியனுருந் தொல்காப்பியனுரும இருந்தையூர்க்கருங்கோழியும் மோசியும் வெள்ளூர்க்காப்பியனும் சிறுபாண்டரங்கனும் திரையன்மாறனும் துவரைக்கோமானும் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்ம ரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத் தெழுநூற்றுவர் பாடினு ரென்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலை யகவலு மென இத்தொடக்கத்தன என்ப; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமு மென இவை; அவர் மூவாயிரத் தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தா ரென்ப; அவரைச் சங்கமிரீஇயினுர் வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாற னீருக ஐம்பத்தொன்பதின்ம ரென்ப; அவருட் கவியரங்கேறினுர் ஐவர் பாண்டிய ரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத் தென்பது. அக்காலத்துப் போலும் பாண்டியனுட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும் சேந்தம்பூதனுரும் அறிவுடையானுரும் பெருங்குன்றூர்க் கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரியர் நல்லந்துவனுரும் மருதனிளநாகனுரும் கணக்காயனுர்மகனுர் நக்கீரனுரு மென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினு ரென்ப; அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும்

நற்றிணை நானூறும் ஐங்குறு நூறும் பதிற்றுப்பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் பேரிசையும் சிற்றிசையு மென்று இத்தொடக்கத்தன; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமு மென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற் றைம்பதிற்றியாண் டென்ப; அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி யீறாக நாற்பத்தொன்பதின்மரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரையென்ப; அவருட் கவியாங்கேறினார் மூவர் பாண்டிய ரென்ப."

அகத்தியனார்பால் வைத்தியம் கற்றுணர்ந்த மாணவர் பலராயினும், இலக்கணம் கற்றுணர்ந்தவர் பன்னிருவ ரென்பது நன்கு புலப்படுகின்றது. அவர்தாம்—

1. தொல்காப்பியர்
2. அதங்கோட்டாசான்
3. பனம்பாரனார்
4. அவிநயனார்
5. காக்கைபாடினியார்
6. நற்றத்தனார்
7. துராலிங்கர்
8. வையாபிகர்
9. வாய்ப்பியர்
10. கழாரம்பர்
11. செம்பூட்சேய்
12. வாமனர்

என்ற இவராவர். இப்பன்னிருவரும் சேர்ந்து 'புறப்பொருட் பன்னிரு படலம்' என்னும் நூல் ஒன்றினை யாத்தனர் என்று கூறுப. அன்றி இவருள், நால்வர் தத்தம் பெயரானே ஒவ்வோரிலக்கண நூல் செய்தனர். அவை:

1. தொல்காப்பியர் — தொல்காப்பியம்
2. அவிநயனார் — அவிநயம்
3. காக்கைபாடினியார் — காக்கைபாடினீயம்
4. நற்றத்தனார் — நற்றத்தம்

என்பன.

அகத்தியனார் வடமொழியினும் வல்லுநர் என்பது அம்மொழியில் அவர் இயற்றிய அஷ்டகம் என்னும் அரியநூலால் இனிது விளங்கும். அகத்தியர் ஏறக்குறைய இருநூற்றைந்து வைத்திய சாத்திரங்கள் இயற்றின ரென்பவாயினும் இக்காலத்தே அவர்

பெயரான் வழங்குவன:—வைத்தியக் கும்மி, குணவாகடம், வைத்தியசாரம், நயனசாரம், அவிழ்தசாரம், சிந்தூரமஞ்சரி, அமுத கலைக்கியானம், பஞ்சகாவிய நிகண்டு, கன்மகாண்டம், பூரணசூத்திரம், சங்குசுத்தி முதலிய சிலவாம். அகத்தியனார் தம்பெயரானே தமிழ் மொழிக்குப் பன்னீராயிரம் சூத்திரங்கொண்ட இலக்கண நூல் ஒன்றினைச் செய்தனர். அது இரு பகுதியினதாகி—பேரகத்தியம், சிற்றகத்தியம் எனப் பெயர் பெறும்.

அகத்தியமுனிவர் மாணவர் பன்னிருவரில் தலைநின்றவராய தொல்காப்பியர்மீது முனிவர் ஏதோ காரணம்பற்றி முனிவுகொண்டு சபித்தார் எனவும், தொல்காப்பியர் வெகுண்டு தமது ஆசிரியர் அரிதினியற்றிய இலக்கண நூல் அழிந்துபடவென எதிருறச் சபித்தனர் எனவும் கர்ணபரம்பரையாக ஒரு கதை வழங்குகின்றது. அக்காரணம் பற்றியோ வேறு எக்காரணம் பற்றியோ அந்த அகத்தியம் இறந்துபட்டது.

தொல்காப்பியம்:—பின்னர், **தொல்காப்பியர்** இயற்றிய **தொல்காப்பியமே** இந்நாள்காறும் நின்று நிலவுவதாயிற்று. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் முப்பகுதியினை யுடையது. பொருளதிகாரத்தில் அகப்பொருள் புறப்பொருளே யன்றி யாப்பு, அணிகளும் இடம்பெற்றுள்ளன. இத்தொல்காப்பியம் 1612 சூத்திரங்களை யுடையது. தொல்காப்பியர் அகத்தியனார் அடைவுகளை முற்றக் கற்றுணர்ந்ததே யன்றி, அவரோடு மாறுபட்ட பின்னர், வடமொழி வாணரோடு கலந்தும் தம் நூலினை யாத்தனரென்பது * "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்" என்பதனால் விளங்குகின்றது.

---

* வட வேங்கடந் தென் குமரி
யாயிடைத், தமிழ் கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவ
னிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்
தறங்கரை நாவி னான்மறை முற்றிய
வதங்கோட் டாசாற் கரிறபத் தெரிந்து
மயங்கா மரபி னெழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

என்னுமிப் பாயிரச் சூத்திரம், தொல்காப்பியத்தைப் பாண்டியன் அவைக்களத்தில் அதங்கோட் டாசிரியர்கேட்ப அரங்கேற்றிய காலத்தே பனம்பாரனார் கூறியதென்பதைத் தொல்காப்பியப் பாயிரத்துட் காண்க.

தொல்காப்பியத்திற்கு உரையிட்டார் ஐவர். அவருள் இளம் பூரணர் எழுத்ததிகாரத்திற்கும் சொல்லதிகாரத்திற்கும், சேனு வரையர் சொல்லதிகாரத்திற்கும், பேராசிரியர் பொருளதிகாரத் திற்கும் நச்சினார்க்கினியர் நூல் முழுவதற்கும் உரைகண்டனர். கல்லாடரும் தொல்காப்பியத்திற்கு உரை செய்தனர் என்ப. இவருரை சொல்லதிகாரத்திற்குமட்டும் கிடைத்துளது.

வெண்பாமாலை:—இது ஐயனாரிதனார் செய்த புறப்பொருள் இலக்கணநூல். இவர், தொல்காப்பியர் முதலிய பன்னிருவர் செய்த 'பன்னிரு படலம்' என்பதனைத் தம் நூலுக்கு ஆதாரவாகக் கொண்டனர் என்பது, "துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன் முதல், பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த, பன்னிரு படல மும் பழிப்பின் றுணர்ந்தோன்" என்னும் இந்நூற் சிறப்புப்பாயிரத் தான் விளங்கும். இந்நூலுக்குப் பழையவுரை யொன்றுண்டு. அஃது செயங்கொண்ட சோழமண்டலத்து மேற்கானாட்டு மாகற லூர்க்கிழான் சாமுண்டி தேவநாயகன் செய்தது. இக்கூற்று

"ஒப்பரிய மாகற லூரான் கிழாரதிபன்
செப்பரிய தெய்வநாய கன்றெரிந்து—தப்பரிய
வெண்பாமா லைதனக்குத் தக்க விருத்தியினை
நண்பா லுரைத்தா னவின்று"

என்னும் வெண்பாவால் வலியுறு நிற்கும்.

அகப்பொருள் விளக்கம்:—இது நாற்கவிராச நம்பி இயற்றி யது. இது அகப்பொருள் இலக்கணங்களைச் சுருங்கக் கூறுவ தோர் அரிய நூல்.

யாப்பருங்கலம்:—இது குணசாகரர் இயற்றியது. இது நூற் பாவகவல் எனப்படுஞ் சூத்திரயாப்பில் அமைந்து யாப்பிலக்க ணத்தை விளக்கமுற வுணர்த்துவது. யாப்பருங்கலக் காரிகைக்கு முதனூலாயுள்ளது. இதற்குச் சிறந்ததோர் விருத்தியுரை யுண்டு. விரைவில் வெளிவரும்.

யாப்பருங்கலக் காரிகை:—இது அமுதசாகரர் இயற்றியது. இதுவும் யாப்பிலக்கணமுணர்த்துங் கலித்துறைகளான் இயன்றது.

வெண்பாப் பாட்டியல்:—இதனை இயற்றியவர் வச்சணந்தி. இதில் செய்யுளுக்கு வேண்டிய பொருத்தங்கள் பத்தும் தெள்ளி தின் விளங்கக் காணலாகும்.

தண்டியலங்காரம்:—இது அணியிலக்கணத்தை அழகுபெறக் கூறுவது. பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் மூன்று இயல்களையுடையது. இதனை இயற்றியவர் தண்டியாசிரியர்.

நேமிநாதம்:—இது எழுத்தும் சொல்லும் உணர்த்துவதோர் இலக்கணநூல். இது குணவீரபண்டிதர் இயற்றியது.

வீரசோழியம்: — இதன் ஆசிரியர் புத்த மித்திரர். இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக் கணங்களையும் உணர்த்தும் ஒரு சிறு நூல்.

நன்னூல்:—இது பவணந்தி முனிவர் செய்தது. இவர் தொல் காப்பியத்தை முதனூலாகக்கொண்டு தம்காலத்தில் வழங்கிய வட மொழி இலக்கணங்களையும் தழுவி சுருங்கச் செய்தனர். இதில் எழுத்தும் சொல்லுமே காணக் கிடைக்கும். இதற்கு சமணமுனி வர் ஒருவர் உரை செய்தனர். இதனை நூலாசிரியரே செய் தனர் என்றும் கூறுப. பின்னர் சங்கர நமச்சிவாயப் புலவர் என் பார் அந்நன்னூலுக்கு விளக்கமாக ஒரு விருத்தியுரை செய்தனர். அதனைச் சிவஞான யோகிகள் திருத்திச் செப்பஞ்செய்து குன் றின்மேலிட்ட விளக்காக்கினர்.

இலக்கண விளக்கம்:—தொல்காப்பியம் அருகி வழங்குத லும், நன்னூல் சின்னூலா யிருத்தலுங்கண்டு தருமபுர ஆதீனத்து வைத்தியநாத தேசிகர் செய்த இவ்விலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பகுதியினையும் உடையது. இவரும் புதியன கொள்ளும் முறையான் தம்காலத்து வழக்காறு நோக்கி வடமொழி இலக்கணத்தையுந் தழுவிக்கொண்டனர். இவர் தாமே இதற்கோ ருரையுஞ் செய்தனர்.

பிரயோக விவேகம்:—மூலமும் உரையுஞ் செய்தவர் சுப்பிர மணிய தீட்சதர். இது வடமொழி யிலக்கண அமைதிகளை விளங் கக் காட்டுவது.

இலக்கணக் கொத்து: — இது திருவாவடுதுறை சாமிநாத தேசிகர் இயற்றியது. தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களி னும், இலக்கியங்களினும் அருகிவரும் விதிகளைத் தழுவியும், வட நூல் இலக்கணங்களைத் தழுவியும் செய்தது. இந்நூற்கு இவரே உரையுஞ் செய்து போந்தனர்.

இலக்கண விளக்கச் சூறாவளி:—இது ஆசிரியர் சிவஞான யோகிகள் எழுதியது. இது இலக்கண விளக்கம் என்னும் நூலி லுள்ள குற்றங்களைக் காட்டுவதோர் கண்டன நூல்.

மேற்கண்ட அடைவுகளானும் அமைதிகளானும் அகத்தியமே தலை சிறந்தது என்பது விளங்கும். அவ்வகத்தியந்தானும் பேர கத்தியம் சிற்றகத்தியம் என இருவகையதென்று மேற்கூறினும். அது பதினாயிரத்தின் மிக்க சூத்திரமுடையதெனவே இயல், இசை, நாடகமாய முப்பெருந் தமிழுக்கும் இலக்கணம் வகுத்தா ராதல்வேண்டும். அத்தகைய அரிய பெருநூல் இறந்துபட்டது நம் தமிழ் மக்கள் செய்த தவக்குறையே.

இனி, அகத்தியச் சூத்திரங்களெனச் சிதைந்து ஆங்காங்குச் சில வழங்குவனவாயின. அவற்றிற் சில சூத்திரங்களை வித்வான்—

களத்தூர்—வேதகிரி முதலியார் சுமார் அறுபது யாண்டுகளுக்கு முன்னர் வெளியிட்டனர். சில தொல்காப்பியம் நன்னூல் முதலிய இலக்கண உரைகளினும் காணப்படுகின்றன. வேதகிரி முதலியார் தம்மிடத்து மூவாயிரம் சூத்திரங்கள் கிடைத்துள்ளனவென்று சொல்லி நூற்றறுபத்தைந்து சூத்திரங்களே வெளியிட்டனர். மற்றைச் சூத்திரங்களும் கிடைக்குமென்று பலகாலும் பல்வேறிடங்களினும் முயன்றும் கிடைத்தில. பின்னும் பதினாறு சூத்திரங்கள் கிடைத்தன. அவற்றையுங்கொண்டு தொகுத்து வெளியிடலாயினேன்.

கிடைத்தமட்டில் இந்நூலின் சூத்திரங்களின் அமைப்பை உற்றுநோக்குழி இது அகத்தியனார் செய்த தென்பதற்கு மேற்கண்ட வேதகிரி முதலியார் கூற்றேயன்றி வேறு ஆதாரவு கிடைத்திலது. அகத்தியம் என்னும் நூல் ஒன்று நிலவுகின்றது என்று எண்ணியிருப்பார்க்கு மனவமைதி யுண்டாமாறு அதனை வெளியிடத் துணிந்தேன். இச்சூத்திரங்களுக்குத் தெள்ளிதிற்பொருள் விளங்குமாறு உதாரணங்களுடன் ஓர் உரையும் வரைந்துள்ளேன்.

மற்றும் இந்நூலை அச்சிட முயன்றுவருங்காலத்தே வேறு சூத்திரங்கள் அடங்கிய சில பிரதிகள் கிடைத்தன. அவற்றுள் ஒன்றின் தலைப்பில் "அகத்தியத் தருக்க சூத்திரம்" என்று வரையப்பட்டுள்ளது. இப்பிரதியிற் கண்ட இருபது சூத்திரங்களும் தருக்கத்தின் பாற்படுவன. அவ்விருபது சூத்திரங்களுக்கும் பல வடமொழித் தருக்க நியாயங்களை மேற்கோள்காட்டி ஒரு விருத்தியுரை செய்துள்ளேன். அதுவும் விரைவில் வெளிவரும். மற்றவை இன்னவெனத் தேறுதிடர்ப்படுகையில் சிலர் அவை அகத்தியனார் உத்தரவின்படி அவர் மாணவரில் ஒருவராகிய கழாரம்பர் இயற்றியருளிய "பேரிசைச் சூத்திரங்கள்" என்றனர். அதன் உண்மை இவ்வளவிற்றென்று துணிதற்கில்லேனாயினும், அவையனைத்தும் நம் தமிழ்மொழியின் சிறப்புக்களையும் காலங்களையும் வகுத்துக்காட்டலின் அவற்றிற்கும் ஓர் உரை எழுதி இந்நூலின் இறுதியிற் சேர்த்துள்ளேன்.

உத்தியோகமுறையில் அரிதிற் கிடைத்த அவகாச காலங்களில் இதனில் ஈடுபட்டுத் தொகுத்து வரைந்து வெளியிட்டதாமாகலின் பிழைகள் மலிந்திருத்தலுங்கூடும். நல்லறிவாளர் அவற்றை யெமக்குத் தெரிவிப்பாராயின் இரண்டாம் பதிப்பில் திருத்திக்கொள்வேன்.

இந்நூல் இனிது முடியுமாறு தோன்றாத் துணையாக இருந்தருளிய எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளை மனமொழி மெய்களால் வணங்குகின்றேன்.

போகத்தியச் சூத்திரம்

மூலமும் உரையும்.

கடவுள் துணை.

பேரகத்தியம்.

தற்சிறப்புப் பாயிரம்.

இலக்கண மெட்டமை யிறைவற் றொழுதெழுத்
திலக்கணக் காண்ட மியம்புவல் யானே.

இத் தலைச்சூத்திரம் தெய்வவணக்கமும் செயப்படுபொருளும் உணர்த்துகின்றது. ஆகையால், இது தற்சிறப்புப் பாயிரம் எனப் படும். இதற்கு விதி, "தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும், எய்த வுரைப்பது தற்சிறப் பாகும்" என்பது.

(பதவுரை.) எட்டு இலக்கணம் அமை — எண்வகை யிலக்கணம் பொருந்திய, இறைவன் — இறைவனை, தொழுது — வணங்கி. எழுத்து இலக்கணக் காண்டம் — எழுத்திலக்கணக் காண்டத்தை, யான் இயம்புவல் — நான் சொல்லுவேன் எ-று.

(பொழிப்புரை.) எண்வகை யிலக்கணம் பொருந்திய இறைவனை வணங்கி, எழுத்திலக்கணக் காண்டத்தைச் சொல்லுவேன் யான்.

அகத்தியராற் செய்யப்பட்டது அகத்தியம். இது கருத்தாவினால் வந்த பெயர். சிற்றகத்தியம் என மற்றொன்று இவராற் செய்யப்பட்டிருத்தலால் இது பேரகத்தியம் எனப்பட்டது.

காண்டம் — நூலின் பெரும்பிரிவு.

பெரிய வுருவங்களின் பிரதிபிம்பத்தைத் தன்னுள்ளே செவ்வையா யடக்கி இனிதாகக் காட்டுகின்ற சிறிய கண்ணாடிபோல, சிலவெழுத்துக்களாலாகிய செய்யுளில், பலவகைப்பட் டகன்ற பொருள்களைச் செவ்வையாக அடக்கி, நோக்குவார்க்கு இனிதாக அப்பொருள்களை விளங்கச்செய்து, குற்றமின்மையாற் சொல்வன்மை பொருள்வன்மைகளும், ஆழமுடைமையாற் பொருணுணுக்கங்களும் சிறந்துவருகையால் இது சூத்திரம் எனப்படும். "சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைச், செவ்வ னாடியிற்

செறித்தினிது விளக்கித், திட்ப நுட்பஞ் சிறந்தன சூத்திரம்" என்பது விதி.

இலக்கணம்—லக்ஷணம் என்னும் வடசொற் றிரிபு. இலக் கண மெட்டாவன—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற் கையுணர்வினனாதல், முற்று முணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்குதல், வரம்பிலின்பமுடைமை, வரம்பிலாற்றலுடைமை, பேரருளுடைமை என்பனவாம். இறைவன்— (ஈடு மெடுப்பு மில் லாத) தலைமைப்பாடுடையவன்.

இதில் 'இறைவற்றொழுது' எனத் தெய்வ வணக்கமும், 'எழுத் திலக்கணக் காண்ட மியம்புவல்' எனச் செயப்படுபொருளும் கூறியவாறு காண்க.

யான் எழுவாய். இயம்புவல் பயனிலை. எழுத்திலக்கணக் காண்டம் செயப்படுபொருள்.

எல்லாம்வல்ல இறைவனை வணங்கலால் எடுத்துக்கொண்ட நூல் இனிது முடியுமென்பது கருதி 'இலக்கண மெட்டுடைமை யிறைவற் றொழுதெழுத், திலக்கணக்காண்ட மியம்புவல் யானே' என்று தொடங்கியதனால், இது நுதலிப்புகுதல் என்னு முத்தி.

முதலாவது

எழுத்திலக்கணக் காண்டம்.

அஃதாவது—எழுத்திலக்கணத்தை உணர்த்துங் காண்டம்.

க-வது எழுத்துப் படலம்.

அஃதாவது—எழுத்துக்க ளிவையென உணர்த்தும் படலம்.

(படலம்—நூலின் சிறுபிரிவு.)

1. எழுதப் படுதலா லெழுத்தெனப் பெயர்பெறும்.

இஃது எழுத்தென்பது காரணப்பெயராமாறு உணர்த்து கின்றது.

(பதவுரை.) எழுதப்படுதலால்—எழுதப்படுதலினால், (அ—முத லியன) எழுத்து என பெயர் பெறும்—எழுத்தெனப் பெயர் பெறுவன வாயின.

(பொழிப்புரை.) எழுதப்படுதலினால் (அகரமுதலியன) எழுத்தெனப் பெயர் பெறுவனவாயின.

2. எழுத்தொலி வடிவும் வரிவடி வும்பெறும்.

இஃது எழுத்து இன்ன வடிவு பெறுமென்பதுணர்த்துகின்றது.

(பதவுரை.) எழுத்து—மேற் கூறப்பட்ட எழுத்துக்களெல்லாம், ஒலி வடிவும்—ஒலிவடிவினையும், வரி வடிவும்—வரிவடிவினையும், பெறும்—பெற்று வழங்கும்.

(பொழிப்புரை.) மேற் கூறப்பட்ட எழுத்துக்களெல்லாம் ஒலி வடிவினையும் வரிவடிவினையும் பெற்று வழங்கும்.

ஒலி வடிவு—செவிப்புலனறிய உச்சரிக்கப்படுவதோர் குறியீடு. வரி வடிவு—கட்புலனறிய எழுதப்படுவதோர் குறியீடு.

3. அநாதி யொலியெழுத் தாதிவடி வெழுத்தே.

இஃது அநாதியெழுத் தின்ன தென்பதும் ஆதியெழுத் தின்ன தென்பதும் உணர்த்துகின்றது.

(பதவுரை.) ஒலி எழுத்து—ஒலியெழுத்தானது, அநாதி—அநாதி யெழுத்தாகும். வடி வெழுத்து—வடிவெழுத்தானது, ஆதி—ஆதி யெழுத்தாகும்.

(பொழிப்புரை.) ஒலி யெழுத்தானது அநாதி யெழுத்தாகும், வடிவெழுத்தானது ஆதி யெழுத்தாகும்.

அநாதி—முந்தினது: வரிவடிவாதற்கு முன் நினைத்தல் உச்சரித்தன்மட்டில் நின்றதோர் குறியீட்டுக்காலம். ஆதி—அதற்குப் பிந்தினது: வரிவடிவான குறியீட்டுக்காலம்.

4. இரேகை வரிபொறி யிலேகையக் கரப்பெயர்.

இஃது எழுத்தின் பரியாயப்பெயர்களை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) இரேகை—இரேகையென்பதும், வரி—வரியென்பதும், பொறி—பொறியென்பதும், இலேகை—இலேகையென்பதும், அக்கரப்பெயர்—எழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) இரேகையென்பதும் வரியென்பதும் பொறியென்பதும் இலேகையென்பதும் எழுத்தின் பெயர்களாம்.

5. எழுத்து முதல்சார் பிருவகை யென்க.

இஃது எழுத்து இத்தனைவகைத்தென்று உணர்த்துகின்றது.

(பதவுரை.) எழுத்து—எழுத்துக்கள். முதல்—முதலும், சார்பு—சார்பும் (ஆகிய), இருவகை என்க—இரண்டு வகையினையுடைய வென்க.

(பொழிப்புரை.) எழுத்துக்கள் முதலும் சார்பும் ஆகிய இரு வகையவென்று சொல்லுக.

முதல் சார்பு என்பவற்றினீற்றில் எண்ணும்மைகள் தொக்கன. ஆகிய வென்பது வருவிக்கப்பட்டது. 'என்க' என்றார், எல்லார்க்கு மொப்ப முடிந்ததாகலின்.

முதலெழுத்து.

6. முதலெழுத் திருவகை யாகியெண் வகையாம்.

இஃது முதலெழுத்தின் வகையும் விரியும் உணர்த்துகின்றது.

(பதவுரை.) முதல் எழுத்து—முதலெழுத்துக்கள், இருவகை ஆகி—உயிரெழுத்து மெய்யெழுத்தென் றிருவகையவாகி, (அவையே). எண்வகை ஆம்—(உயிர் நான்கு வகையும், மெய் நான்கு வகையு மாக) எண்வகையாய் விரியும்.

(பொழிப்புரை.) முதலெழுத்துக்கள் உயிரெழுத்து மெய்யெழுத்து என் றிருவகையவாகி, (அவையே உயிர் நான்கு வகையும் மெய் நான்கு வகையுமாக) எண்வகையாய் விரியும்.

(அ—முதலியன) உயிர்மெய் முதலிய ஏனைய வெழுத்துக்களுக்குக் காரணமாதலால் முதலெழுத் தெனப்பட்டன.

7. முதலுயிர் மெய்யாய்த முப்பா னொன்றே.

இஃது முதலெழுத்துக்கள் இத்தனை யென்பதும், இன்னவை யென்பதும் உணர்த்துகின்றது.

(பதவுரை.) முதல்—முதலெழுத்துக்கள், உயிர்—உயிர் பன்னிரண்டும், மெய்—மெய் பதினெட்டும், ஆய்தம்—ஆய்தமொன்றும் ஆக, முப்பான் ஒன்று—முப்பத்தொன்றாகும்.

(பொழிப்புரை.) முதலெழுத்துக்கள் உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டும் ஆய்த மொன்றுமாக முப்பத்தொன்றாம்.

உயிரும் மெய்யும் ஆகிய இவற்றிடையே கிடந்து "இருசிறை யெழுப்ப வெழுமுட லதுபோல்" இவற்றின் உதவியானே இயங்குவதாதல்பற்றி மேற் சார்பெழுத்துகளின்பாற் சேர்க்கப்படும் ஆய்தத்தை இங்கு முதலெழுத்துக்களின்பாலுஞ் சேர்த்து முதலெழுத்து முப்பத்தொன்றெனத் தொகை செய்தது, ஆய்தம் சிறுபான்மை உயிர்க்குறில்போல ஒருமாத்திரை யுடையதாய் அலகு

பெற்றும். பெரும்பான்மை மெய்போல அரைமாத்திரையுடைய தாய் அலகுபெறுமலும் உயிரெழுத்து மெய்யெழுத்துக்களை ஒரு புடை யொத்தல்பற்றி யென்க; உயிர்மெய் முதலிய மற்றைச் சார் பெழுத்துக்கள்போல உயிரெழுத்து மெய்யெழுத்துக்களின் கலப் பினாலும் திரிபு விகாரத்தாலும் பிறத்தலின்றி ஆய்தம் ஓசை வேறு பாடுடையதாய்த் தனியே பிறக்கு மெழுத்தாதல் பற்றியுமாம். வேறொரு முதலெழுத்தினின்று பிறந்ததன்றாதலால், ஆய்தம் முதலெழுத் தெனப்பட்ட தென்க. "அகர முதலாக வாய்த மிடையா, னகரமீ ருகு முதல்" என்றார் பிறரும்.

8. அடிதலை தாளாதி யாமுத லின்பெயர்.

இஃது முதலெழுத்துக்களின் பரியாயப்பெயர்களை யுணர்த்து கின்றது.

(பதவுரை.) அடி—அடியெழுத்தென்பதும், தலை—தலையெழுத் தென்பதும், தாள்—தாளெழுத்தென்பதும், ஆதி—ஆதியெழுத் தென்பதும், முதலின் பெயர் ஆம்—முதலெழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) அடியெழுத்தென்பதும், தலையெழுத்தென்ப தும், தாளெழுத்தென்பதும், ஆதியெழுத்தென்பதும் முதலெழுத் தின் பெயர்களாம்.

பரியாயப் பெயர்—ஒருபொருள் குறித்த பல பெயர்கள்.

உயிர் வருக்கம்.

9. அகரமுத லௌகார வந்தமா முயிரே.

இஃது உயிரெழுத்துக்கள் இவை யென்பது உணர்த்துகின்றது.

(பதவுரை.) அகரம் முதல்—அகர முதலாக, ஔகார அந்தம்—ஔகார மிறுதியாக (உள்ள பன்னிரண்டெழுத்துக்களும்), உயிர் ஆம்—உயிரெழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) அகர முதலாக ஔகார மிறுதியாக வுள்ள பன்னிரண்டெழுத்துக்களும் உயிரெழுத்துக்களாம்.

உதாரணம். அ—ஆ, இ—ஈ, உ—ஊ, எ—ஏ, ஐ, ஒ—ஓ, ஔ என்பனவாம்.

அந்தம்—வடசொல்.

10. அச்சாவி சுரம்பூத மாமுயி ரின்பெயர்.

இஃது உயிரெழுத்துக்களின் பரியாயப்பெயர்களை யுணர்த்து கின்றது.

(பதவுரை.) அச்சு — அச்சும், ஆவி — ஆவியும், சுரம் — சுரமும், பூதம்—பூதமும் (ஆகிய நான்கும்), உயிரின் பெயர் ஆம்—உயிரெழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) அச்சும் ஆவியும் ஸ்வரமும் பூதமும் ஆகிய நான்கும் உயிரெழுத்தின் பெயர்களாம்.

ஆவி என்பதொழிந்த ஏனை மூன்றும் வடசொற்கள்.

11. உயிரே,
குறினெடில் சுட்டு வினாவென நான்காம்.

இஃது மேல் 'முதலெழுத் திருவகை யாகியெண் வகையாம்' என்றதற் கிணங்க உயிரெழுத்தின் நால்வகையினையும் உணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர்—உயிரெழுத்துக்கள், குறில் என — குறிலென்றும், நெடில் என—நெடிலென்றும், சுட்டு என—சுட்டென்றும், வினா என—வினாவென்றும், நான்கு ஆம்—நான்கு வகையாகும்.

(பொழிப்புரை.) உயிரெழுத்துக்கள் குறிலென்றும் நெடிலென்றும் சுட்டென்றும் வினாவென்றும் நான்கு வகையாகும்.

குறில்—குறுகிய ஒலியுள்ளது, நெடில்—நெடுகிய ஒலியுள்ளது.

12. அ இ உ எ ஒக்குறி லாகும்.

இஃது குற்றெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அ இ உ எ ஒ—அகர இகர உகர எகர ஒகாரங்களாகிய ஐந்தும், குறில் ஆகும்—குற்றெழுத்துக்களாகும்.

(பொழிப்புரை.) அகர இகர உகர எகர ஒகாரங்களாகிய ஐந்தும் குற்றெழுத்துக்களாகும்.

13. குறிலுங் குறுமையு மிரச்சுவமுங் குறிற்பெயர்.

இஃது குற்றெழுத்தின் பரியாயப் பெயர்களை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) குறிலும் — குறிலென்பதும், குறுமையும் — குறுமையென்பதும், இரச்சுவமும்—இரச்சுவமென்பதும், குறில் பெயர்—குற்றெழுத்துக்களின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) குறிலென்பதும் குறுமையென்பதும் இரச்சுவமென்பதும் குற்றெழுத்துக்களின் பெயர்களாம்.

ஹ்ரஸ்வம்என்னும்வடசொல்தமிழில் இரச்சுவமெனத்திரிந்தது.

14. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔநெடி லாகும்.

இஃது நெட்டெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ—ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழும், நெடில் ஆகும்—நெட்டெழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும் ஏழும் நெட்டெழுத்துக்களாம்.

15. நெடிலு நெடுமையுந் தீர்க்கமு நெடிற்பெயர்.

இஃது நெட்டெழுத்துக்களின் பரியாயப் பெயர்களை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) நெடிலும்—நெடிலென்பதும், நெடுமையும்—நெடுமை யென்பதும், தீர்க்கமும்—தீர்க்கமென்பதும், நெடில் பெயர்—நெட்டெழுத்துக்களின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) நெடிலென்பதும் நெடுமை யென்பதும் தீர்க்க மென்பதும் நெட்டெழுத்துக்களின் பெயர்களாம்.

தீர்க்கம் என்பது வடசொல்.

16. அ இ உ ம் மூன்றுஞ் சுட்டிற் சுட்டே.

இஃது சுட்டெழுத்துக்க ளிவையென்பது உணர்த்துகின்றது.

(பதவுரை.) அ இ உ மூன்றும்—அகர இகர உகரங்களாகிய இம் மூன்றும், சுட்டின்—ஒரு பொருளைச் சுட்டுமாயின், சுட்டு—சுட்டெழுத்துக்களாகும்.

(பொழிப்புரை.) அகர இகர உகரங்களாகிய இம்மூன்றும் ஒரு பொருளைச் சுட்டுமாயின் சுட்டெழுத்துக்களாம்.

சுட்டு—குறித்துக்காட்டுவது. சுட்டிற் சுட்டே என்றமையால், சுட்டாவிடிற் சுட்டன்றென்பது பெறப்படும்.

17. சுட்டல் குறித்தல் காட்டல்சுட் டின்பெயர்.

இஃது சுட்டெழுத்துக்களின் பரியாயப்பெயர்களை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) சுட்டல்—சுட்டலும், குறித்தல்—குறித்தலும், காட்டல்—காட்டலும், சுட்டின் பெயர்—சுட்டின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) சுட்டலும் குறித்தலும் காட்டலும் சுட்டின் பெயர்களாம்.

18. அவையே,
அகம்புற மண்மை சேய்மைபொது மைக்கணும்.

இஃது மேல் 'சுட்டிற் சுட்டே' என்றவை மொழிகளில் இன்ன வாறு வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அவை—அச்சுட்டெழுத்துக்கள், அகம்—மொழியினகத்திடத்தும், புறம்—மொழியின் புறத்திடத்தும் நின்று, அண்மை சேய்மை பொதுமைக்கண்—அண்மையிடத்தும் சேய்மையிடத்தும் பொதுமையிடத்தும், ஆம்—சுட்டி வரும்.

(பொழிப்புரை.) அச்சுட்டெழுத்துக்கள் மொழியினகத்திலும் மொழியின் புறத்திலும் நின்று அண்மையிடத்தும் சேய்மையிடத்தும் அண்மைக்கும் சேய்மைக்கும் பொதுமையிடத்தும் சுட்டி வரும்.

உதாரணம்.

	அகச்சுட்டு.	புறச்சுட்டு.
சேய்மை ——	அவன்	அப்பலகை
அண்மை ——	இவன்	இம்மனிதன்
பொதுமை——	உவன்	உவ்வீடு.

அகரம் — தூரத்திலுள்ள பொருளையும், இகரம் — சமீபத்திலுள்ள பொருளையும், உகரம்—நடுவிலுள்ள பொருளையும் பின் நிற்கும் பொருளையும் மேல்நிற்கும் பொருளையும் சுட்டுதற்கு வரும். 'அவன் இவன் உவன்', 'உப்பக்கம்', 'உம்பன்' என்பன காண்க.

அவன் இவன் உவன் என்பவற்றிலுள்ள அகர இகர உகரங்கள்—அடை இடை உடை என்பவற்றின் முதலெழுத்துக்கள் போலப் பின்னெழுத்துக்களோடு தொடர்ந்துநின்று ஒரு பொருளை யுணர்த்தாமல், பொன்னன் முதலிய சொற்களின் பகுதிபோல வேறு நின்று சுட்டுப்பொருளுணர்த்தல் காண்க. இதனை வினாவிற்குங் கொள்க.

19. ஐம்பாற் சுட்டும் வினாவுத் தரமுமாம்.

இஃது ஐம்பாலிலும் வரும் சுட்டெழுத்துக்கள் வினாவுத்தரமுமாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஐம்பால் சுட்டும்—ஐம்பாலில் வரும் சுட்டெழுத்துக்களும், வினா—வினாவுக்கு, உத்தரமும் ஆம்—விடை யுமாகும்.

(பொழிப்புரை.) ஐம்பாலில் வருஞ் சுட்டெழுத்துக்களும் வினாவுக்கு விடையுமாகும்.

உதாரணம்.

எவன்? எவள்? எவர்? எது? எவை? என வினவின் முறையே இவன், இவள், இவர், இது, இவை எனச் சுட்டல் விஞவுத்தரமாம் என்க.

20. ஆ ஏ ஓ வீற்றும் எ ஏ முத லும்விஞ.

இஃது மொழிகளின் ஈற்றினும் முதலினும் வரும் விஞவெழுத்துக்கள் இவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆ ஏ ஓ—ஆ ஏ ஓ என்னும் இம்மூன்றும், ஈற்றும்—மொழியீற்றினும், எ ஏ—எ ஏ என்னு மிவ்விரண்டும், முதலும்—மொழி முதலினும், விஞ—விஞப்பொருளை யுணர்த்திவரின் விஞவெழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) ஆ ஏ ஓ என்னும் இம்மூன்றும் மொழியீற்றினும், எ ஏ என்னும் இவ்விரண்டும் மொழிமுதலினும் விஞப்பொருளை யுணர்த்திவரின் விஞவெழுத்துக்களாம்.

ஆ முதலியன விஞ எனப் பொதுப்படக் கூறிஞரேனும், அவையுஞ் சுட்டேபோல மொழியினகத்தும் புறத்தும் வருமெனவுங் கொள்க. விஞப்பொருளை யுணர்த்திவரின் என்பது வருவித் துரைக்கப்பட்டது.

உதாரணம்.

மொழியீற்றுப் புறவிஞ.	மொழிமுதல் அகவிஞ.
தங்கமா	எது
தங்கமே	ஏது
தங்கமோ	

மொழிமுதற் புறவிஞ—எப் பொருள்.

21. யாவென் விஞவே யஃறிணைப் பன்மை
விகுதிபெறுங் காலைம் பாலினும் விஞவாம்.

இஃது யாவென் விஞவை உணர்த்துகின்றது.

(பதவுரை.) யா என் விஞ—யாவென்னும் விஞ, அஃறிணைப் பன்மை—அஃறிணைப் பன்மையில் வரும்; (அது) விகுதிபெறுங் கால்—விகுதி பெறுமிடத்து, ஐம்பாலினும்—ஐம்பாலிடத்தும், விஞ ஆம்—விஞவாகும்.

(பொழிப்புரை.) யாவென்னும் விஞ அஃறிணைப் பன்மையில் வரும். அது விகுதி பெறுமிடத்து ஐம்பாலிடத்தும் விஞவாகும்.

உதாரணம்.

யாகுறிய } இவை அஃறிணைப் பன்மை வினா.
யாசிறிய

யாவன்
யாவள்
யாவர் } இவை இருதிணை யைம்பாலினும் வந்த வினா.
யாது
யாவை

யாவென்னும் உயிர்மெய்யும் வினாவெழுத்தாகையால் இனம் பற்றி இங்குச் சேர்க்கப்பட்டது.

22. வினவல் கடாவல் கேள்வியுசா வல்வினா.

இஃது வினாவின் பரியாயப்பெயர்களை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) வினவல் — வினாவலும், கடாவல் — கடாவலும், கேள்வி — கேள்வியும், உசாவல் — உசாவலும், வினா — வினாவின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) வினவலும் கடாவலும் கேள்வியும் உசாவலும் (ஆகிய இந்நான்கும்) வினாவின் பெயர்களாம்.

மெய் வருக்கம்.

23. தனித்துமெய்த் தன்மையாய்த் தயங்கு மாய்தம்.

இஃது ஆய்தம் தனித்தும் மெய்த்தன்மையதாயும் விளங்குமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆய்தம் — ஆய்தவெழுத்தானது, தனித்து — தனிமையாயும், மெய் தன்மை ஆய் — மெய்யெழுத்தின் தன்மையுடையதாயும், தயங்கும் — (உயிர்க்கும் மெய்க்கும் இடையே) விளங்கும்.

(பொழிப்புரை.) ஆய்தவெழுத்தானது தனித்தும் மெய்யெழுத்தின் தன்மையையுடையதாயும் உயிர்க்கும் மெய்க்கும் இடையே விளங்கும்.

ஆய்தம் மூன்று புள்ளி வடிவினது — ஃ.

உயிரும் மெய்யும் தம்மிற் கலத்தல்போல ஆய்தம் ஓரெழுத்தோடுங் கலத்தலின்றித் தனியே நிற்றலால் 'தனித்து' என்றும், அரைமாத்திரை கொள்ளுதல் அலகுபெறுமை உச்சரிப்பு ஊன்றிச் சொல்ல அளபெடுத்தல் புள்ளிபெனப் பெயர்பெறுதல் என்னு

மிவற்றுல் மெய்யெழுத்துப் போலுதலால் 'மெய்த்தன்மையாய்' என்றுங் கூறினர்.

24. அஃகேனந் தனிநிலை முப்புள்ளி யாய்தம்.

இஃது ஆய்த வெழுத்தின் பரியாயப் பெயர்க ளுணர்த்து கின்றது.

(பதவுரை.) அஃகேனம்—அஃகேனமும், தனிநிலை—தனிநிலை யும், முப்புள்ளி—முப்புள்ளியும் (ஆகிய விம்மூன்றும்), ஆய்தம்—ஆய்தவெழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) அஃகேனமும் தனிநிலையும் முப்புள்ளியும் (ஆகிய விம்மூன்றும்), ஆய்த வெழுத்தின் பெயர்களாம்.

அஃகேனம் என்பது கேனச் சாரியை பெற்று வந்தது. உயிரும் மெய்யும் தம்மிற் கலத்தல்போல ஆய்தம் ஒரெழுத்தோடுங் கலத்த லின்றித் தனித்து நிற்றலால் 'தனிநிலை' எனவும், மூன்று புள்ளி வடிவாயிருத்தலால் 'முப்புள்ளி' எனவும் பெயர்பெறுவதாயிற்று.

25. ஆய்த மெய்போ லுயிர்பெற் றிலதாம்.

இஃது ஆய்தவெழுத்து மெய்யெழுத்துப்போல உயிரேறப் பெருதென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆய்தம் — ஆய்தவெழுத்தானது, மெய்போல் — மெய்யெழுத்துப்போல, உயிர்பெற்றிலது ஆம்—உயிரேறப் பெரு தாம்.

(பொழிப்புரை.) ஆய்தவெழுத்தானது மெய்யெழுத்துப்போல உயிரேறப் பெருதாம்.

26. ககரமுதன் மூவாறுங் காட்டுமாய் தமுமெய்.

இஃது மெய்யெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ககரமுதல் — ககரமுதலாகிய, மூவாறும் — பதி னெட்டும், காட்டும் ஆய்தமும்—அவைபோலக் காட்டு மாய்த மொன்றும், மெய்—மெய்யெழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) ககர முதலாகிய பதினெட்டும் அவைபோலக் காட்டும் ஆய்த மொன்றும் மெய்யெழுத்துக்களாம்.

அவை, க்–ங், ச்–ஞ், ட்–ண், த்–ந், ப்–ம், ய்–ர்–ல்–வ்–ழ்–ள், ற்–ன்; ஃ என்பனவாம்.

ஆய்தம் ஒரோவிடத்து உயிர்போல வருதலன்றிப் பெரும் பாலும் மெய்போல வருதல்பற்றி அதனை மெய்யோடு கூட்டினர்.

27. உடலுடம் பொற்றல் லூமைவியஞ் சனமெய்.

இஃது மெய்யெழுத்தின் பரியாயப்பெயர்களை யுணர்த்து கின்றது.

(பதவுரை.) உடல்—உடலும், உடம்பு—உடம்பும், ஒற்று—ஒற்றும், அல்—அல்லும், ஊமை—ஊமையும், வியஞ்சனம்—வியஞ்சனமும், மெய்—மெய்யெழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) உடலும் உடம்பும் ஒற்றும் அல்லும் ஊமையும் வியஞ்சனமும் மெய்யெழுத்தின் பெயர்களாம்.

ஹல்லென்பதும் வ்யஞ்சநமென்பதும் வடசொற்கள்.

28. தனிநிலையு மெய்யுந் தனித்தொலி யாவே.

இஃது தனித்தொலியா வெழுத்துக்களிவையென்ப துணர்த்து கின்றது.

(பதவுரை.) தனிநிலையும்—ஆய்தமும், மெய்யும்—மெய்யெழுத்துக்களும், தனித்து ஒலியா—தனித்து நின்று சத்தியா.

(பொழிப்புரை.) ஆய்தமும் மெய்யெழுத்துக்களும் தனித்து நின்று சத்தியா.

தனித்துச் சத்தியாவெனவே உயிரெழுத்துக்களின் உதவி பெற்றே ஒலிக்கு மென்பதாயிற்று.

29. மெய்வலி மெலியிடை விரியுமூ வினமாய்.

இஃது மெய்யெழுத்துக்களின் விரியை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) மெய்—மெய்யெழுத்துக்கள், வலி மெலி இடை—வல்லினம் மெல்லினம் இடையினம் என, மூவினம் ஆய் விரியும்—மூவினமாக விரியும்.

(பொழிப்புரை.) மெய்யெழுத்துக்கள் வல்லினம் மெல்லினம் இடையினம் என மூவினமாக விரியும்.

'விரியும் மூவினமாய்' என்றாரேனும் ஆய்தம் சேர்ந்து நால் வகையா மென்பது கொள்க.

30. வல்லெழுத் தாவன கசட தபற.

இஃது வல்லெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) வல் எழுத்து ஆவன—வல்லெழுத்துக்களாவன, கசட தபற—க் ச் ட் த் ப் ற் என்னும் இவ்வாறுமாம்.

(பொழிப்புரை.) வல்லெழுத்துக்களாவன, க் ச் ட் த் ப் ற் என்னு மிவ்வாறுமாம்.

வல்லெழுத்து—வன்மையா யொலிக்கு மெழுத்து.

31. வலிவன்மை வன்கணம் பரிசம்வல் லினப்பெயர்.

இஃது வல்லெழுத்தின் பரியாயப்பெயர்க ளுணர்த்துகின்றது.

(பதவுரை.) வலி—வலியென்பதும், வன்மை—வன்மையென்பதும், வன்கணம்—வன்கணமென்பதும், பரிசம்—பரிசம் என்பதும், வல்லினப்பெயர்—வல்லெழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) வலியென்பதும் வன்மையென்பதும் வன்கணமென்பதும் பரிசமென்பதும் வல்லெழுத்தின் பெயர்களாம்.

32. மெல்லெழுத் தாவன ஙஞண நமன.

இஃது மெல்லெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) மெல் எழுத்து ஆவன—மெல்லெழுத்துக்களாவன, ஙஞண நமன—ங் ஞ் ண் ந் ம் ன் என்னும் இவ்வாறுமாம்.

(பொழிப்புரை.) மெல்லெழுத்துக்களாவன, ங் ஞ் ண் ந் ம் ன் என்னு மிவ்வாறுமாம்.

மெல்லெழுத்து—மென்மையா யொலிக்கு மெழுத்து.

33. மெலிமென்மை மென்கண மெல்லினப் பெயரே.

இஃது மெல்லெழுத்தின் பரியாயப்பெயர்க ளுணர்த்துகின்றது.

(பதவுரை.) மெலி—மெலியென்பதும், மென்மை—மென்மையென்பதும், மென்கணம்—மென்கண மென்பதும், மெல்லினப்பெயர்—மெல்லெழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) மெலி மென்மை மென்கணம் என்பன மெல்லெழுத்தின் பெயர்களாம்.

34. இடையெழுத் தாவன யரல வழள.

இஃது இடையெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) இடை எழுத்து ஆவன—இடையெழுத்துக்களாவன, யரல வழள—ய் ர் ல் வ் ழ் ள் என்னும் இவ்வாறுமாம்.

(பொழிப்புரை.) இடையெழுத்துக்களாவன, ய் ர் ல் வ் ழ் ள் என்னும் இவ்வாறுமாம்.

இடையெழுத்து—வன்மைக்கும் மென்மைக்கும் இடையாய் ஒலிக்கு மெழுத்து.

35. இடையிடைமை யிடைக்கண மிடையினப் பெயரே.

இஃது இடையெழுத்தின் பரியாயப்பெயர்க ளுணர்த்து கின்றது.

(பதவுரை.) இடை—இடையென்பதும், இடைமை—இடைமை யென்பதும், இடைக்கணம்—இடைக்கண மென்பதும், இடையினப் பெயர்—இடையெழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) இடை இடைமை இடைக்கணம் என்பன இடையெழுத்தின் பெயர்களாம்.

இனவெழுத்து.

36. உயிர்முதன் முப்பது மொன்றற் கொன்றினம்.

இஃது இனவெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர் முதல் முப்பதும்—உயிர் முதலாகிய முப்ப தெழுத்துக்களும், ஒன்றற்கு ஒன்று இனம்—ஒன்றற்கு ஒன்று இன வெழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) உயிர் முதலாகிய முப்பதெழுத்துக்களும் ஒன் றற்கு ஒன்று இனவெழுத்துக்களாம்.

உதாரணம்.

அ—ஆ, இ—ஈ, உ—ஊ, எ—ஏ, ஐ—இ, ஒ—ஓ, ஔ—உ, க்—ங், ச்—ஞ், ட்—ண், த்—ந், ப்—ம், ய்ர்ல்வ்ழ்ள், ற்—ன் இவை ஒன்றற்கொன்று இனம்.

'முப்பதும் ஒன்றற்கொன்று இனம்' என்றாரேனும், உயிரெழுத் துக்களுள் குறிலுக்கு நெடிலும், மெய்யெழுத்துக்களுள் வல்லினத் திற்கு மெல்லினமும் இனமெனக் கொள்க. இடையினம் ஆறும் ஓரினம்.

37. இ உ இரண்டும் ஐ ஔக் கினமே.

இஃது ஐகார ஔகாரங்களுக்கு இனவெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) இ உ இரண்டுமே—ஈகார ஊகாரங்களுக்கு இன மாகிய இகர வுகரங்களாகிய விரண்டுமே, ஐ ஔக்கு—ஐகார ஔ காரங்களுக்கும், இனம்—முறையே இன வெழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களாகிய இரண்டுமே ஐகார ஔகாரங்களுக்கும் முறையே இனவெழுத்துக்களாம்.

ஐகார ஔகாரங்களுக்கு வேறு இனமின்மையால் இகர உகரங்கள் அவற்றிற்கும் இனமாகக் கொள்ளப்பட்டன. ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

சார்பெழுத்து.

38. உயிர்மெய்,
அளபெடை யிரண்டாய்த மறுகுறுக்கஞ் சார்பாம்.

இஃது சார்பெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர் மெய்—உயிர் மெய்யும், அளபெடை இரண்டு—அளபெடைக ளிரண்டும், ஆய்தம்—ஆய்தமும், அறுகுறுக்கம்—அறுவகைக் குறுக்கங்களும் (ஆகிய இப்பத்தும்), சார்பு ஆம்—சார்பெழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) உயிர்மெய்யும் அளபெடைக ளிரண்டும் ஆய்தமும் அறுவகைக் குறுக்கங்களும் ஆகிய இப்பத்தும் சார்பெழுத்துக்களாம்.

உயிர்மெய்—உயிரும் மெய்யுங்கூடி உண்டாதலாலும், ஆய்தம்—உயிர்மெய்களினிடையே அவற்றைச் சார்ந்து வருதலாலும், மற்றை உயிரளபெடை முதலிய எட்டும் தத்தம் முதலெழுத்தின் திரிபு விகாரத்தாற் பிறத்தலாலும், இவை யெல்லாம் சார்பெழுத்தெனப்பட்டன. ஒரு மொழியைச் சார்ந்துவரு மியல்பன்றித் தனித்தியங்கு மியல்பு தனக்கு இல்லாமைபற்றி ஆய்தத்தைச் சார்பெழுத்தின்பாலுஞ் சேர்த்தன ரென்னலாம்.

39. புல்லல் சார்தல் புணர்தல்சார் பின்பெயர்.

இஃது சார்பெழுத்தின் பரியாயப்பெயர்களை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) புல்லல்—புல்லலென்பதும், சார்தல்—சார்தலென்பதும், புணர்தல்—புணர்தலென்பதும், சார்பின் பெயர்—சார்பெழுத்தின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) புல்லல் சார்தல் புணர்தல் என்பன சார்பெழுத்தின் பெயர்களாம்.

40. உயிரே மெய்யூர்ந் துயிர்மெய் யாகும்.

இஃது உயிர்மெய்யாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர்—உயிரெழுத்துக்கள், மெய் ஊர்ந்து—மெய் யெழுத்துக்களின்மே லேறுதலால், உயிர் மெய் ஆகும்—உயிர்மெய் யெழுத்துக்கள் உண்டாகும்.

(பொழிப்புரை.) உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களின் மே லேறுதலால் உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகும்.

உதாரணம்.

க் + அ = க	த் + அ = த	ல் + அ = ல
ங் + அ = ங	ந் + அ = ந	வ் + அ = வ
ச் + அ = ச	ப் + அ = ப	ழ் + அ = ழ
ஞ் + அ = ஞ	ம் + அ = ம	ள் + அ = ள
ட் + அ = ட	ய் + அ = ய	ற் + அ = ற
ண் + அ = ண	ர் + அ = ர	ன் + அ = ன

இவ்வாறு பதினெட்டு மெய்களின் மீதும் பன்னிரண்டு உயிர் களும் ஏறுவதனுல் இருநூற்றுப் பதினுறு உயிர்மெய்யெழுத்துக் கள் உண்டாகும். இவற்றுள், தொண்ணூறு உயிர்மெய்க்குறில்; நூற்றிருபத்தாறு உயிர்மெய்நெடில்.

41. உயிர்நெடி லினக்குறி லுற்றள பெடுக்கும்.

இஃது உயிரளபெடையாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர் நெடில்—உயிர்நெட்டெழுத்துக்க ளேழும், இனக்குறில் உற்று—தமக்கினமாகிய குற்றெழுத்துக்களைப் பெற்று, அளபு எடுக்கும்—அளபெடுக்கும்.

(பொழிப்புரை.) உயிர்நெட்டெழுத்துக்க ளேழும் தமக்கினமா கிய குற்றெழுத்துக்களைப் பெற்று அளபு எடுக்கும்.

'உயிர் நெடில்' என்றுரேனும் மெய்ம்மேலேறிய நெடிலும் அள பெடுக்குமெனக் கொள்க.

உதாரணம்.

முதனிலை யளபெடை.	இடைநிலை யளபெடை.	கடைநிலை யளபெடை.
ஆஅரிடம்	படாஅகை	கடாஅ
ஈஇரிலை	பரீஇயம்	குரீஇ
ஊஉரிடம்	கழூஉமணி	கழூஉ
ஏஎரிகள்	பரேஎரம்	மிலேஎ
ஐஇயவி	வளைஇயம்	கடைஇ
ஓஒரிகள்	புரோஒசை	அரோஒ
ஔஉவியம்	அநௌஉகம்	அநௌஉ

42. நஞண நமன வயலள வாய்தங்
குறிலிணை குறிற்கீ ழிடைகடை யளபெழும்.

இஃது ஒற்றளபெடையாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) நஞண நமன வயலள—ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள் என்னு மிப்பத்து மெய்யெழுத்துக்களும், ஆய்தம்—ஆய்தவெழுத்தும், குறிலிணை இடை கடை — குறிலிணை (கீழ்) இடையிலும் கடையிலும், குறில்கீழ் இடை கடை—குறிற்கீழ் இடையிலும் கடையிலும், அளபெழும்—அளபெடுக்கும்.

(பொழிப்புரை.) ங் ஞ் ண் ந் ம் ன் வ் ய் ல் ள் என்னு மிப்பத்து மெய்யெழுத்துக்களும், குறிலிணை (கீழ்) இடையிலும் கடையிலும், குறிற்கீ ழிடையிலும் கடையிலும் அளபெடுக்கும்; ஆய்தம், (உயிரொடுபுணர்ந்த வல்லாறன்மேல்) குறிலிணை (கீழ்) இடையிலும் குறிற்கீ ழிடையிலும் அளபெடுக்கும்.

உதாரணம்.

குறிலிணைக்கீழிடை.	குறிற்கீழிடை.
அரங்ங்கம்	மங்ங்கலம்
முரஞ்ஞ்சு	மஞ்ஞ்சு
முரண்ண்டு	மண்ண்ணு
பருந்ந்து	பந்ந்து
அரும்ம்பு	அம்ம்பு
முரன்ன்று	மின்ன்னு
குரவ்வ்வை	தெவ்வ்வர்
அரைய்ய்யர்	வெய்ய்யர்
குரல்ல்கள்	செல்ல்க
திரள்ள்கள்	கொள்ள்க
வரஃஃகு	எஃஃகு

குறிலிணைக்கீழ்க் கடை.	குறிற்கீழ்க் கடை.
மடங்ங்	நங்ங்
உரிஞ்ஞ்	நஞ்ஞ்
அரண்ண்	கண்ண்
பொருந்ந்	நந்ந்
கனம்ம்	அம்ம்
பரன்ன்	பொன்ன்
பகல்ல்	தெவ்வ்
திரள்ள்	செய்ய்
	கல்ல்
	வள்ள்

ஆய்தம் மொழியின் முதலிலும் கடையிலும் வருதலின்மையின்; அது குறிலிணைக்கீழ்க் கடையிலும் குறிற்கீழ்க் கடையிலும் அளபெடுத்து வருவதில்லை. குறிலிணைக்கீழ்க் கடையில் வகரவொற்று வருவதேயில்லை. யகரவொற்று குறிலிணைக்கீழ்க் கடையில் அளபெடுத்து வரற்கு உதாரணம் வந்தவிடத்திற் காண்க.

43. அளபும் புலுதமும் அளபெ டைப்பெயர்.

இஃது அளபெடையின் பரியாயப்பெயர்க ளுணர்த்துகின்றது.

(பதவுரை.) அளபும்—அளபென்பதும், புலுதமும்—புலுதமென்பதும், அளபெடைப் பெயர்—அளபெடையின் பெயர்களாம்.

(பொழிப்புரை.) அளபு புலுதம் என்பன அளபெடையின் பெயர்களாம்.

புலுதம்—ப்லுதம் என்னும் வடசொற் றிரிபு.

44. அவையே,
இயற்கை செயற்கை யின்னிசை சொல்லிசை
நெடில்குறி லொற்றுயி ரெழுத்துப்பே றளபெண்.

இஃது அளபெடை யித்தனை வகைய தென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அவையே—அவ்வளபெடைகள்தான், இயற்கை—இயற்கை யளபெடை, செயற்கை—செயற்கை யளபெடை, இன்னிசை — இன்னிசையளபெடை, சொல்லிசை—சொல்லிசையளபெடை, நெடில் — நெடிலளபெடை, குறில்—குறிலளபெடை, ஒற்று—ஒற்றளபெடை, உயிரெழுத்துப்பேறளபு — உயிரெழுத்துப்பேறளபெடை என, எண்—எண்வகையாம்.

(பொழிப்புரை.) அவ்வளபெடைகள் இயற்கையளபெடை செயற்கையளபெடை இன்னிசையளபெடை சொல்லிசையளபெடை நெடிலளபெடை குறிலளபெடை ஒற்றளபெடை உயிரெழுத்துப்பேறளபெடை என எண்வகையாம். அளபை மற்றவற்றோடுங் கூட்டுக.

அழைத்தல், விலைகூறல், புலம்பல் முதலியவற்றுள் வரும் அளபெடை எழுத்துச் செயற்கையின்றிப் பிறந்த இயற்கை யளபெடை.

செய்யுளிற் சீர்தளை வேண்டுமிடத்துப் புலவன் கொள்ளுமளபெடை செயற்கையளபெடை.

உதாரணம்.

விடுப்பதூஉம்—குற்றுகர மளபெடுத்த இன்னிசையளபெடை.

தளைஇ—ஐகாரக்குறுக்க மளபெடுத்த சொல்லிசையளபெடை.

ஆஅ—நெடிலளபெடை.

மணீஇ—குற்றெழுத்து.நெட்டெழுத்தாகி யளபெடுத்த குறிலளபெடை.

சிங்ங்து—ஒற்றளபெடை.

சந்திரனை யராஅப் பற்றிற்று. விகாரத்தெழுந்த உயிரெழுத்துப்பேறளபெடை.

45. ஆய்தங் குறில்வலிக் காகு மிடையே.

இஃது ஆய்தம் வருமிட முணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆய்தம்—ஆய்தவெழுத்து, குறில்—குறிலுக்கும், வலிக்கு—வல்லெழுத்திற்கும், இடையே ஆகும்—இடையே வரும்.

(பொழிப்புரை.) ஆய்தம் குற்றெழுத்திற்கு முன்னும் உயிர்மெய் வல்லெழுத்திற்குப் பின்னும் வரும்.

குறில் என வாளா கூறினரேனும் தனிக்குறில் இணைக்குறில் இரண்டும் எனவும், வலியென வாளா கூறினரேனும் உயிர்மெய் வல்லெழுத்து எனவும் கொள்க.

உதாரணம்.

எஃகு, கஃசு இவை தனிக்குற்றெழுத்தின் பின் வந்தன.

விலஃகி, இலஃகி இவை இணைக்குற்றெழுத்தின் பின் வந்தன.

இடையே என்றமையால் மொழி முதலினும் ஈற்றினும் ஆய்தம் வாராதென்பது வெளிப்படை.

46. உத்திரி யிகரமவ்வூ ரிகரங் குறிய.

இஃது குற்றியலிகரமாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) உத்திரி இகரம்—யவ்வரில் குற்றியலுகரந் திரிந்த இகரமும், ம ஊர் இகரம்—அசைச்சொல் மகரமெய்யின்மே லேறிய இகரமும், குறிய—குற்றிய லிகரங்களாம்.

(பொழிப்புரை.) யவ்வரில் குற்றிய லுகரந் திரிந்த இகரமும் அசைச்சொன் மகரமெய்யின்மே லேறிய இகரமும் குற்றிய லிகரங்களாம்.

உத்திரியிகரம், மவ்வூரிகரம் என்றாரேனும், ஈண்டைக் கேற்ப யவ்வரில் குற்றியலுகரந் திரிந்த இகரம் எனவும், மியா வென்னும் அசைச்சொல் மகரமெய்யின்மே லேறிய இகரம் எனவும் கொள்க.

உதாரணம்.

வீடியாது, சென்மியா, கேண்மியா என வரும்.

47. குறிலல்லன தொடர்வலிக் கூடுகரங் குறிய.

இஃது குற்றியலுகரமாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) குறில் அல்லன தொடர்—தனிக்குறி லல்லாதன வாகிய உயிர் தனிநெடில் ஆய்தம் வலி மெலி இடை இவைகளைத் தொடர்ந்து, வலி—ஈற்றிலே வல்லெழுத்துக்கள் நிற்க, கூடு உகரம்—அவற்றின் மேலேறிய உகரங்கள், குறிய—குற்றிய லுகரங்களாம்.

(பொழிப்புரை.) தனிக் குறிலல்லாதனவாகிய உயிர் தனி நெடில் ஆய்தம் வலி மெலி இடை இவைகளைத் தொடர்ந்து ஈற்றிலே வல்லெழுத்துக்கள் நிற்க அவற்றின்மே லேறிய உகரங்கள் குற்றிய லுகரங்களாம்.

உதாரணம்.

விறகு, பலாசு—உயிர்த்தொடர்.

நீறு, யாறு—நெடிற்றொடர்.

அஃது, இஃது—ஆய்தத்தொடர்.

தேக்கு, வாக்கு—வன்றொடர்.

நெஞ்சு, மஞ்சு—மென்றொடர்.

மார்பு, சார்பு—இடைத்தொடர் என வரும்.

48. மூன்றிடத் தையஃகு முதலிடத் தௌவஃகும்.

இஃது ஐகார ஔகாரக் குறுக்கங்களாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) ஐ—ஐகாரம், மூன்று இடத்து—மொழி முத லிடை கடை யென்னும் மூன்றிடத்தினும், அஃகும்—குறுகும். ஔ—ஔகாரம், முதல் இடத்து—மொழிமுதலிடத்தில், அஃகும்—குறுகும்.

(பொழிப்புரை.) ஐகாரம் மொழிமுத லிடை கடை யென்னும் மூன்றிடத்தினும் குறுகும். ஔகாரம் மொழிமுத லிடத்தில் மாத்திரம் குறுகும்.

உதாரணம்.

ஐயர், இறைவர், அளை என வரும்.

தௌவை என ஔகாரம் மொழிமுத லிடத்துமட்டும் குறுகு மாறு காண்க.

49. மகரம் ணனக்கீழ் வம்மேற் குறுகும்.

இஃது மகரக்குறுக்கமாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) மகரம்—மகரமெய்யானது, ணனகீழ்—ளகர லகரங்கள் திரிந்த ணகர னகரங்களின் முன்னும், வ மேல்—வகரத்தின் பின்னும், குறுகும்—குறுகும்.

(பொழிப்புரை.) மகரமெய்யானது ளகர லகரங்கள் திரிந்த ணகர னகரங்களின் முன்னும், வகரத்தின் பின்னும் குறுகும்.

உதாரணம்.

மருண்ம், போன்ம், தரும்வளவன் என வரும்.

50. லளவிறு புணர்ச்சியா மாய்தங் குறையும்.

இஃது ஆய்தக்குறுக்கமாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) லள இறு புணர்ச்சி ஆம்—லளவீற்றுப் புணர்ச்சியிலுண்டாகும், ஆய்தம்—ஆய்தமானது, குறையும்—குறையும்.

(பொழிப்புரை.) லளவீற்றுப்புணர்ச்சியிலுண்டாகும் ஆய்தமானது குறையும்.

உதாரணம்.

கஃறீது, முஃடீது என வரும்.

ஒழிபு.

51. குறிலாண் பாலு நெடில்பெண் பாலுமாம்.

இஃது ஆண் பெண் எழுத்துக்கள் இவையென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) குறில்—குற்றெழுத்துக்களெல்லாம், ஆண்பாலும்—ஆண்பாலும், நெடில் — நெட்டெழுத்துக்களெல்லாம், பெண்பாலும்—பெண்பாலும், ஆம்—ஆகும்.

(பொழிப்புரை.) குற்றெழுத்துக்களெல்லாம் ஆண்பாலும், நெட்டெழுத்துக்களெல்லாம் பெண்பாலுமாகும்.

'குறில் முன்னிற்றற் சிறப்பு நோக்கி ஆண்பால் எனவும், நெடில் அவற்றின் பின்னிற்றற் சிறப்பின்மை நோக்கிப் பெண்பால் எனவும் கூறினர்.

52. ஆய்தமு மெய்யு மலியெனப் படுமே.

இஃது அலியெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆய்தமும்—ஆய்தவெழுத்தும், மெய்யும்—மெய்யெழுத்துக்களும், அலி எனப்படும் — அலியெழுத்துக்களென்று சொல்லப்படும்.

(பொழிப்புரை.) ஆய்தவெழுத்தும் மெய்யெழுத்துக்களும் அலியெழுத்துக்களென்று சொல்லப்படும்.

அலி—ஆணும் பெண்ணும் அல்லாதது.

53. எகர வொகரமெய் யெய்தும் புள்ளியே.

இஃது புள்ளி பெறு மெழுத்துக்கள் இவையென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) எகர ஒகரம்—எகர ஒகரங்களாகிய உயிரெழுத்துக்களும், மெய்—மெய்யெழுத்துக்களும், புள்ளி எய்தும்—புள்ளி பெறும்.

(பொழிப்புரை.) எகர ஒகரங்களும் மெய்யெழுத்துக்களும் புள்ளி பெறும்.

எ் ஒ். எகர ஒகரங்கள் புள்ளிபெறுவது முற்கால வழக்கு.

54. எ ஒவ்வும் ழறனவுந் தமிழெழுத் தென்க.

இஃது தமிழ்க்கே யுரிய சிறப்பெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) எ ஒவ்வும்—எகர ஒகரங்களும், ழறனவும்—ழகர றகர னகரங்களும் (ஆகிய விவ்வைந்தும்), தமிழ் எழுத்து என்க—தமிழெழுத்தென்று சொல்லுக.

(பொழிப்புரை.) எகர ஒகர உயிர்களும் ழகர றகர னகர மெய்களும் ஆகிய இவ்வைந்தும் தமிழெழுத்துக்களென்று சொல்லுக. எ ஒ விரண்டும் வடமொழித் தீர்க்கத்தின் குறுக்கமென்னும் ஒரு சாரார் மதமுணர்த்துதற்கு அவ்விரண்டையும் ஒருபாற்படுத்தி யும்மை கொடுத்துப் பிரித்தோதினார்.

தமிழெழுத்து—தமிழ்க்கேயுரிய சிறப்பெழுத்து.

55. ஐந்தொழி யெழுத்தெலாம் வடவெழுத் தாகும்.

இஃது முதலெழுத்துக்களுள் வடவெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஐந்து ஒழி—(மேற் சொல்லப்பட்ட) ஐந்தெழுத் தொழிந்த, எழுத்து எல்லாம்—எழுத்துக்களெல்லாம், வட எழுத்து ஆகும்—வடவெழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) மேற்சொல்லப்பட்ட ஐந்தெழுத் தொழிந்த எழுத்துக்களெல்லாம் வடவெழுத்துக்களாம்.

ஐந்தொழி யெழுத்து என்றது, உயிரிரண்டும் மெய்ம் மூன்றும் ஒழிய நின்ற உயிர் பத்தும் மெய் பதினைந்தும் ஆகிய இருபத்தைந் தெழுத்துக்களை. வட எழுத்து-வடமொழியிலும் உள்ள எழுத்து.

56. எழுத்தே,
இடுகுறி காரணம் பொதுச்சிறப் பெய்தும்.

இஃது எழுத்துக்களின் பெயர்வகை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) எழுத்து — எழுத்துக்கள், இடுகுறி — இடுகுறிப் பெயரையும், காரணம்—காரணப் பெயரையும், பொது-பொதுப் பெயரையும், சிறப்பு-சிறப்புப் பெயரையும், எய்தும்—பெறும்.

(பொழிப்புரை.) எழுத்துக்கள் இடுகுறிப் பெயரையும் காரணப் பெயரையும் பொதுப் பெயரையும் சிறப்புப் பெயரையும் பெறும்.

உதாரணம்.

(1) உயிர், மெய் இவை இடுகுறிப் பொதுப்பெயர்.

(2) அ, ஆ, க், ங் இவை இடுகுறிச் சிறப்புப் பெயர்.

(3) குறில், நெடில், வலி, மெலி, இடை, உயிர்மெய் இவை காரணப் பொதுப்பெயர்.

(4) குற்றுகரம், குற்றிகரம் இவை காரணச் சிறப்புப்பெயர்.

57. ஒவ்வல், குறில்கச தநபமவ வமிர்த வெழுத்தே.

இஃது அமிர்தவெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின் றது.

(பதவுரை.) ஒ அல்—ஒகரமல்லாத, குறில்—குற்றெழுத்துக் கள் நான்கும், கசதநபமவ—கசதநபமவ ஆகிய இவ்வேழு உயிர் மெய் யெழுத்துக்களும், அமிர்த எழுத்து—அமிர்தவெழுத்துக்க ளாம்.

(பொழிப்புரை.) ஒகரமல்லாத குற்றெழுத்துக்க ணான்கும் கசத நபமவ என்னு மிவ் வுயிர்மெய் யெழுத்துக்களேழும் அமிர்த வெழுத்துக்களாம்.

அமிர்த எழுத்துக்கள் சுபத்திற் காவன.

58. அளபெடை மக்குற ளாய்தநஞ் செழுத்தே.

இஃது நச்செழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அளபெடை — உயிரளபெடையும் ஒற்றளபெடையும், ம குறள்—மகரக்குறுக்கமும், ஆய்தம்—ஆய்தக் குறுக்கமும் (ஆகிய இவை), நஞ்சு எழுத்து—நச்செழுத்துக்களாம்.

(பொழிப்புரை.) உயிரளபெடையும் ஒற்றளபெடையும் மகரக் குறுக்கமும் ஆய்தக் குறுக்கமும் ஆகிய இவை நச்செழுத்துக்களாம்.

நஞ்செழுத்துக்கள் அசுபத்திற் காவன.

59. பொதுவெழுத் துத்தமிழ்ப் பொருந்துதல் சிறப்பே.

இஃது சிறப்புடைய எழுத் திவையென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) பொது எழுத்து தமிழ் பொருந்துதல்—வடமொழி தமிழிற் பொருந்துமாயின் பொது வெழுத்தான் வரும் பதமே, சிறப்பு — சிறப்புடைத்து (அல்லன வருதல் அச்சிறப்புடைத் தன்று).

(பொழிப்புரை.) வடமொழி தமிழிற் பொருந்துமாயின் பொது வெழுத்தான் வரும் பதமே சிறப்புடைத்து; அல்லன வருதல் சிறப் புடைத்தன்று.

தமிழிற் பொருந்துத லென்றதனுல் பொதுவெழுத் தென்றது வடமொழியெனப்படும். பொதுவெழுத்துத் தமிழ்ப் பொருந்துதல் சிறப்பு என்றதனுல், அல்லன வருதல் அத்துணைச் சிறப்புடைத் தன்று என்பதாயிற்று. பொதுவெழுத்து—வடமொழிக்கும் தென் மொழிக்கும் பொதுவான எழுத்து.

60. உயிர்மெய் யுயிரள பலாச்சார்பு தமிழ்க்குரிய.

இஃது தமிழ்க்கே யுரிய சார்பெழுத்துக்க ளிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர்மெய்—உயிர்மெய்யும், உயிரளபு—உயிரள பெடையும், அல்லா—அல்லாத, சார்பு—சார்பெழுத்தெல்லாம், தமிழ்க்கு உரிய—தமிழ்க்கே யுரியன.

(பொழிப்புரை.) உயிர்மெய்யும் உயிரளபெடையும் அல்லாத சார்பெழுத்தெல்லாம் தமிழ்க்கே யுரியன.

தமிழ்க்கு என்பத னீற்றில் ஏகாரந் தொகுத்தல்.

எழுத்துப் படலம் முற்றிற்று.

உ–வது எழுத்துற்பத்திப் படலம்.

அஃதாவது—எழுத்தினது பிறத்தலை உணர்த்தும் படலம்.

61. ஆத னநாதியு முதாநனு தியுமா
நாதமுரங் கண்டந் தலையிட முற்றுப்
பல்லிதழ் நாமூக் கணமைந் தொழிலா
லெல்லா வெழுத்தும் பிறக்கு மென்ப.

இஃது எல்லா வெழுத்துக்களும் பிறக்குமா றிதுவென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆதன்—உயிர், அநாதியும்—அநாதியாகவும், உதாநன்—உதாநவாயு, ஆதியும் ஆ—ஆதியாகவும் (நின்றெழுகின்ற), நாதம்—நாதமானது, உரம்—மார்பு, கண்டம்—கண்டம், தலை—தலை, இடம்–(ஆகிய) இம்மூவிடங்களையும், உற்று–பொருந்த, பல்–பல், இதழ்—இதழ், நா—நா, மூக்கு—மூக்கு, அண்ணம்—அண்ணம், ஐந்தொழிலால்—(ஆகிய) இவ்வைந்தின் தொழில்களால், எல்லா எழுத்தும்—எழுத்துக்களெல்லாம், பிறக்கும் என்ப—பிறக்குமென்று சொல்லுவர் (அறிஞர்).

(பொழிப்புரை.) உயிர் அநாதியாகவும் உதாநவாயு ஆதியாகவும் நின்று எழுகின்ற நாதமானது, மார்பு கண்டம் தலை ஆகிய இம்மூவிடங்களையும் பொருந்த, பல் இதழ் நா மூக்கு அண்ணம் ஆகிய இவ்வைந்தின் தொழில்களால் எழுத்துக்களெல்லாம் பிறக்கும் என்று சொல்லுவர் அறிஞர்.

நாதம்–ஒலி; அண்ணம்—மேல்வாய். உற்று–செயவெனெச்சத் திரிபு: காரணப்பொருட்டு.

62. ஆவி யிடைமை யிடமிட றாகு
மேவு முரம்வலி மெல்லின மூக்காம்.

இஃது உயிர் முதலிய எழுத்துக்கள் இவ்விவ்விடத்திற் பிறக்கு மென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆவி–உயிரும், இடைமை–இடையின மெய்களும், இடம்–(ஆகிய இவற்றிற்குப்) பிறப்பிடம், மிடறு ஆகும்—கண்டமாகும்; வலி—வல்லின மெய்கள், உரம் மேவும்—மார்பைத் தமக்குப் பிறப்பிடமாகப் பெறும்; மெல்லினம் — மெல்லின மெய்களுக்கு, மூக்கு—மூக்கு, ஆம்—பிறப்பிடமாகும்.

(பொழிப்புரை.) உயிரும் இடையின மெய்களும் ஆகிய இவற்றிற்குப் பிறப்பிடம் கண்டமாகும்; வல்லின மெய்கள் மார்பைத் தமக்குப் பிறப்பிடமாகப் பெறும்; மெல்லின மெய்களுக்கு மூக்குப் பிறப்பிடமாகும்.

ஆவி (உயிர்) போறலின் ஆவி என்றார்; இஃது உவமவாகு பெயர்.

**63. அவற்றுள்,
அ ஆ இரண்டு மங்காந் தியலும்.**

இஃது அகர ஆகாரங்கள் இன்ன முயற்சியாற் பிறக்குமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அவற்றுள்—அவ்வெழுத்துக்களுள், அ ஆ இரண்டும்—அகர ஆகாரங்களாகிய இரண்டும், அங்காந்து—வாய்திறக்க, இயலும்—பிறக்கும்.

(பொழிப்புரை.) அவ்வெழுத்துக்களுள் அ ஆ என்னும் இவ் விரண்டும் வாய்திறத்தலாற் பிறக்கும்.

அங்காத்தல் — வாய்திறத்தல். அங்காந்து செயவெனெச்சத் திரிபு; இது காரணப்பொருட்டு.

**64. இ ஈ எ ஏ ஐ அங் காப்புட
னண்பன் முதனா விளிம்புற லுடைய.**

இஃது இகர முதலிய ஐந்தன் முயற்சிப்பிறப்புணர்த்துகின்றது.

(பதவுரை.) இ ஈ எ ஏ ஐ—இ ஈ எ ஏ ஐ என்னு மிவ்வைந்தும், அங்காப்புடன் — வாய்திறத்தலோடு, அண்பல்—மேல்வாய்ப்பல், முதல் நா விளிம்பு—அடிநாவின் ஓரத்தை, உறல் உடைய—பொருந்தலாற் பிறத்தலையுடையன.

(பொழிப்புரை.) இ ஈ எ ஏ ஐ என்னு மிவ்வைந்தும் வாய் திறத்தலோடு, மேல்வாய்ப்பல் அடிநாவின் ஓரத்தைப் பொருந்த லாற் பிறத்தலையுடையன.

அங்காப்பு—தொழிற்பெயர்.

65. உ ஊ ஒ ஓ ஔ விதழ்குவிந் தியலும்.

இஃது உகர முதலிய ஐந்தன் முயற்சிப்பிறப் புணர்த்து கின்றது.

(பதவுரை.) உ ஊ ஒ ஓ ஔ—உ ஊ ஒ ஓ ஔ என்னும் இவ் வைந்தும், இதழ் குவிந்து—இதழ் குவிய, இயலும்—பிறக்கும்.

(பொழிப்புரை.) உகர முதலிய ஐந்தும் இதழ் குவிதலாற் பிறக்கும்.

குவிந்து செயவெனெச்சத் திரிபு.

66. ககார ஙகார முதனா முதலணம்.

இஃது ககார ஙகாரங்களின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) ககார ஙகாரம்—ககார ஙகாரங்கள், முதல் நா—அடிநாவும், முதல் அண்ணம்—அடியண்ணமும் (ஆகிய இவற்றின் முயற்சியாற் பிறக்கும்).

(பொழிப்புரை.) ககார ஙகாரங்கள் அடிநாவும் அடியண்ணமும் ஆகிய இவற்றின் முயற்சியாற் பிறக்கும்.

ஆகிய இவற்றின் முயற்சியாற் பிறக்கும் என்பது இசையெச்சம். பின் வருவனவற்றிற்கும் இங்ஙனமே கொள்க.

67. சகார ஞகார மிடைநா விடையணம்.

இஃது சகார ஞகாரங்களின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) சகார ஞகாரம் — சகார ஞகாரங்கள், இடைநா இடை அண்ணம்—இடைநாவும் இடையண்ணமும் (பொருந்துதலாற் பிறக்கும்).

(பொழிப்புரை.) சகார ஞகாரங்கள் இடைநாவும் இடையண்ணமும் பொருந்துதலாற் பிறக்கும்.

68. டகார ணகார நுனிநா நுனியணம்.

இஃது டகார ணகாரங்களின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) டகார ணகாரம் — டகார ணகாரங்கள், நுனிநா நுனி அண்ணம்—நுனிநாவும் நுனியண்ணமும் (பொருந்துதலாற் பிறக்கும்).

(பொழிப்புரை.) டகார ணகாரங்கள் நுனிநாவும் நுனியண்ணமும் பொருந்துதலாற் பிறக்கும்.

69. அண்பல் லடிநா முடியுறத் தநவாம்.

இஃது தகார நகாரங்களின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) அண்பல் அடி—மேற்பல்லடியை, நாமுடி உற—நாவினுனி பொருந்துதலால், தந ஆம்—தகார நகாரங்கள் பிறக்கும்.

(பொழிப்புரை.) மேற்பல்லடியை நாவினுனி பொருந்துதலால், தகார நகாரங்கள் பிறக்கும்.

முடி—நுனி.

70. இரண்டிதழ் பொருந்தப் பகரமக ரம்வரும்.

இஃது பகர மகரங்களின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) இரண்டு இதழ் பொருந்த—இரண்டிதழ்களும் ஒன்றோடொன்று பொருந்துதலால், பகர மகரம் வரும்—பகர மகரங்கள் பிறக்கும்.

(பொழிப்புரை.) இரண்டிதழ்களும் ஒன்றோடொன்று பொருந்துதலால், பகர மகரங்கள் பிறக்கும்.

இரண்டிதழ்—மேலிதழ் கீழிதழ்.

71. முதனா முதலண முயற்சியின் யவ்வரும்.

இஃது யகரத்தின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) முதல் நா முதல் அண்ணம்—அடிநாவும் அடியண்ணமும் (ஆகிய இவற்றின்), முயற்சியின்—முயற்சியால், ய—யகரம், வரும்—பிறக்கும்.

(பொழிப்புரை.) அடிநாவும் அடியண்ணமும் ஆகிய இவற்றின் முயற்சியால், யகரம் பிறக்கும்.

72. அண்ண முடிநா வருடரழ வருவன.

இஃது ரகர ழகரங்களின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) அண்ணம்—மேல்வாயை, முடிநா—நுனிநாவானது, வருட—தடவுதலால், ரழ—ரகர ழகரங்கள், வருவன—பிறப்பனவாம்.

(பொழிப்புரை.) மேல்வாயை நுனிநாவானது தடவுதலால், ரகர ழகரங்கள் பிறப்பனவாம்.

73. அண்பல் லடியைநா விளிம்பொற்ற லவ்வரும்.

இஃது லகரத்தின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) அண்பல் அடியை—மேற்பல்லடியை, நாவிளிம்பு ஒற்ற—நாவிளிம்பானது வீங்கி யொற்றுதலால், ல—லகரம், வரும்—பிறக்கும்.

(பொழிப்புரை.) மேற்பல்லடியை நாவிளிம்பானது வீங்கி யொற்றுதலால், லகரம் பிறக்கும்.

அடியையொற்றவென வியையும்.

74. அண்பன் முதலைநாத் தடவ ளவ்வரும்.

இஃது ளகரத்தின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது

(பதவுரை.) அண்பல் முதலே—முன்னம்பல்லடியை, நா தடவ—நாவிளிம்பு வீங்கித் தடவுதலால், ள—ளகரம், வரும்—பிறக்கும்.

(பொழிப்புரை.) மேற்பல்லடியை நாவிளிம்பு வீங்கித் தடவுதலால் ளகரம் பிறக்கும்.

75. மேற்பல்லே யிதழுற மேவும் வகரமே.

இஃது வகரத்தின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) மேல் பல்லே—மேற்பல்லினே, இதழ் உற—இதழ் பொருந்துதலால், வகரம்—வகரமானது, மேவும்—பிறக்கும்.

(பொழிப்புரை.) மேற்பல்லினே இதழ் பொருந்துதலால் வகரமானது பிறக்கும்.

76. அணரி நுனிநா வணைய ற ன வரும்.

இஃது றகர னகரங்களின் முயற்சிப்பிறப் புணர்த்துகின்றது.

(பதவுரை.) அணரி—அண்ணத்தை, நுனிநா அணைய—நுனிநாப் பொருந்துதலால், ற ன வரும்—றகர னகரங்கள் பிறக்கும்.

(பொழிப்புரை.) அண்ணத்தை நுனிநாப் பொருந்துதலால், றகர னகரங்கள் பிறக்கும்.

அணரி—அண்ணம் (மேல்வாய்).

77. ஆய்தக் கிடஞ்சிர மங்கா முயற்சியாம்.

இஃது ஆய்தத்தின் இடப்பிறப்பும் முயற்சிப்பிறப்பு முணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆய்தக்கு—ஆய்தத்திற்கு, இடம்—பிறப்பிடம், சிரம்—தலேயாம்; முயற்சி—முயற்சியானது, அங்கா ஆம்—வாய் திறத்தலாம்.

(பொழிப்புரை.) ஆய்தத்திற்குப் பிறப்பிடம் தலேயாம், முயற்சியானது வாய்திறத்தலாம்.

ஆய்தக்கு, அத்துச்சாரியை பெருது குவ்வுரு பேற்றது. அங்கா—முதனிலேத் தொழிற்பெயர்.

78. தலேமையக் கரம்போற் சார்பெழுத் துற்பவம்.

இஃது சார்பெழுத்தின் பிறப்பு இத்தன்மைத்தென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) தலைமை அக்கரம்போல்—முதலெழுத்துப்போலவே, சார்பெழுத்து—சார்பெழுத்துக்களின், உற்பவம்—பிறப்பும் (எனக் கொள்க).

(பொழிப்புரை.) முதலெழுத்துப்போலவே சார்பெழுத்துக்களின் பிறப்பும் எனக் கொள்க.

சார்பெழுத்துக்களுக்குத் தத்தம் முதலெழுத்துக்களின் இடப் பிறப்பு முயற்சிப்பிறப்புக்களே இடமா மென்பது இதனுற் கூறப் பட்டது.

79. தத்தமிற் றிரிபே சிற்சில வுளவாம்.

இஃது எழுத்துக்கள் தத்தமிற் சிறிது வேறுபாடுள்ளன வென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) தத்தமில் — எழுத்துக்கள் தமக்குள்ளே, சிற்சில திரிபு—சிற்சில வேறுபாடுகள், உள ஆம்—உள்ளனவாம்.

(பொழிப்புரை.) எழுத்துக்கள் தமக்குள்ளே சிற்சில வேறுபாடு கள் உள்ளனவாம்.

எழுத்துக்களென்பது அதிகாரத்தால் வருவிக்கப்பட்டது.

80. எடுத்தல் படுத்த னலிதல் விலங்க
லாக நான்கே யெழுத்தி னோசை.

இஃது எழுத்துக்களி னோசை இத்தனை வகையாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) எழுத்தின் ஓசை—எழுத்துக்களி னோசையானது, எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் ஆக—எடுத்தல் முதலாக, நான்கு—நால்வகையாம்.

(பொழிப்புரை.) எழுத்துக்களி னோசையானது எடுத்தல் முத லாக நால்வகையாம்.

எடுத்தல் — எடுத்துச் சொல்லுதல், படுத்தல் — தாழ்த்திச் சொல்லுதல், நலிதல்—நடுத்தரமாய்ச் சொல்லுதல், விலங்கல்— வருந்திச் சொல்லுதல்.

எழுத்துற்பத்திப் படலம் முற்றிற்று.

௩–வது எழுத்து வரன்முறைப் படலம்.

அஃதாவது—எழுத்துக்கள் வருமுறைமையை உணர்த்தும் படலம்.

முதனிலை.

81. பன்னீ ருயிரு மொழிமுத லாகும்.

இஃது மொழிமுதலாய் வரு மெழுத்துக்கள் இன்னவென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) பன்னீருயிரும் — உயிரெழுத்துப் பன்னிரண்டும், மொழிமுதல் ஆகும்—மொழிக்கு முதலில் வரும்.

(பொழிப்புரை.) உயிரெழுத்துப் பன்னிரண்டும் மொழிக்கு முதலில் வரும்.

உதாரணம்.

அலை, ஆடு, இலை, ஈடு, உடை, ஊர்தி, எடை, ஏரி, ஐயம், ஒளி, ஓடு, ஔவை.

82. உயிர்மெய் யல்லவை மொழிமுத லாகா.

இஃது மொழிமுத லாகாத எழுத்துக்க ளிவையென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர்மெய் அல்லவை — உயிர்மெய் யெழுத்துக்க ளல்லாதவை, மொழிமுதல் ஆகா — மொழிமுதலாய் வாராவாம்.

(பொழிப்புரை.) உயிர்மெய் யெழுத்துக்க ளல்லாதவை மொழி முதலாய் வாராவாம்.

உயிர்மெய் யல்லவை மொழிமுதலாகா என்றமையால், உயிர்மெய்கள் மொழிக்கு முதலில் வரும், தனிமெய்கள் மொழிக்கு முதலில் வாரா என்ற தாயிற்று.

83. கசதந பமவுயிர் மெய்யெலா முதலாம்.

இஃது வருக்கமெல்லாம் மொழிக்கு முதலில் வருதற்குரிய உயிர்மெய்கள் இவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) கசதநபம—கசதநபம வென்கின்ற, உயிர்மெய் எல்லாம்—உயிர்மெய் வருக்கமெல்லாம், முதல் ஆம்—மொழிக்கு முதலில் வரும்.

(பொழிப்புரை.) கசதநபம வென்கிற உயிர்மெய் வருக்கமெல் லாம் மொழிக்கு முதலில் வரும்.

உதாரணம்.

கனி, காழ், கிளி, கீரி, குறி, கூன், கெண்டை, கேள், கைதை, கொடை, கோதை, கௌவை. மற்றவருக்கமும் இவ்வாறே வரும்.

84. ஞகரம் அ ஆ எ ஒவ் வோடாம்.

இஃது ஞகரம் இன்ன உயிர்களோடு கூடி மொழிக்கு முதலா மென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஞகரம்—ஞகரமானது, அ ஆ எ ஒவ்வோடு—அகர ஆகார எகர ஒகரங்களோடு கூடி, ஆம்—மொழிக்கு முதலில் வரும்.

(பொழிப்புரை.) ஞகரமானது அகர ஆகார எகர ஒகரங்களோடு கூடி மொழிக்கு முதலில் வரும்.

உதாரணம்.

ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று என வரும்.

ஞகரம் இகரத்தோடு கூடியும் வரும்: ஞிமிறு.

85. யகரம், அ ஆ உ ஊ ஓ ஔ வுடனும்.

இஃது யகரம் இன்ன உயிர்களோடு கூடி மொழிக்கு முதலில் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) யகரம்—யகரமானது, அ ஆ உ ஊ ஓ ஔ உடன்—அகர ஆகார உகர ஊகார ஓகார ஔகார வுயிர்களோடு கூடி, ஆம்—மொழிக்கு முதலில் வரும்.

(பொழிப்புரை.) யகரமானது அகர ஆகார உகர ஊகார ஓகார ஔகார வுயிர்களோடு கூடி மொழிக்கு முதலில் வரும்.

உதாரணம்.

யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம் என வரும்.

86. வகரம், உ ஊ ஒ ஓ வொழிந்தன வுடனும்.

இஃது வகரம் இன்ன உயிர்களோடு கூடி மொழிக்கு முதலில் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) வகரம்—வகரமானது, உ ஊ ஒ ஓ ஒழிந்தன உடன்—உகர ஊகார ஒகர ஓகாரங்கள் ஒழிந்த மற்ற உயிர்களோடு கூடி, ஆம்—மொழிக்கு முதலில் வரும்.

(பொழிப்புரை.) வகரமானது உகர ஊகார ஒகர ஓகாரங்கள் ஒழிந்த மற்ற உயிர்களோடு கூடி மொழிக்கு முதலில் வரும்.

உதாரணம்.

வலே, வாள், விழி, வீடு, வெண்ணெய், வேட்கை, வையம், வௌவால் என வரும்.

87. ஙகரமவ் வேற்றுச் சுட்டு வினவொடாம்.

இஃது ஙகரம் மொழிக்கு முதலாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) ஙகரம்—ஙகரமானது, அ ஏற்று—அகர உயிரோடு கூடி, சுட்டு வினவொடு—சுட்டுடனும் வினவுடனும், ஆம்—மொழிக்கு முதலில் வரும்.

(பொழிப்புரை.) ஙகரமானது அகர உயிரோடு கூடிச் சுட்டுடனும் வினவுடனும் மொழிக்கு முதலில் வரும்.

உதாரணம்.

அங் ஙனம், இங் ஙனம், உங் ஙனம்—சுட்டோடு வந்தது.

எங் ஙனம், யாங் ஙனம்—வினவோடு வந்தது.

இடைநிலை மயக்கம்.

88. க ச த ப வல்லன பிறமெய்ம் மயக்கமாம்.

இஃது பிறமெய்ம்மயக்கம் உணர்த்துகின்றது.

(பதவுரை.) க ச த ப அல்லன—கசதபக்கள் அல்லாத பதினொன்கு மெய்களும் வேறு மெய்களோடு கூடுங் கூட்டம், பிறமெய் மயக்கம் ஆம்—பிறமெய்ம்மயக்கமாகும்.

(பொழிப்புரை.) கசதபக்களல்லாத பதினொன்கு மெய்களும் வேறு மெய்களோடு கூடுங் கூட்டம் பிறமெய்ம்மயக்கமாகும்.

பிறமெய்ம்மயக்கம் வேற்றுநிலைமெய்ம்மயக்க மெனவும்படும்.

89. மயக்கம் புணர்ச்சி சங்கமஞ் சையோகங்
கூடல் கலத்தல் புல்லலொரு பொருட்சொலே.

இஃது மயக்கம் என்பதன் பரியாயப்பெயர்களை உணர்த்துகின்றது.

(பதவுரை.) மயக்கம்—மயக்கமும், புணர்ச்சி—புணர்ச்சியும், சங்கமம்—சங்கமமும், சையோகம்—சையோகமும், கூடல்—கூடலும், கலத்தல்—கலத்தலும், புல்லல்—புல்லலும், ஒருபொருள் சொல்—ஒரு பொருளைத் தருகிற பல சொற்களாம்.

(பொழிப்புரை.) மயக்கமும் புணர்ச்சியும் சங்கமமும் சையோகமும் கூடலும் கலத்தலும் புல்லலும் ஒருபொருளைத் தரும் பல சொற்களாம்.

ஸங்கமம், ஸம்யோகம் இவ்விரண்டும் வடசொற்கள்.

90. ஙகர முன்னர்க் ககரவுயிர் மெய்வரும்.

இஃது ஙகரமுன் இன்ன வுயிர்மெய் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஙகர முன்னர்—ஙகரத்தின்முன், ககர உயிர்மெய்—ககர வுயிர்மெய்யானது, வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) ஙகரத்தின்முன் ககர வுயிர்மெய்யானது வந்து கூடும்.

உதாரணம்.

பங்கு.

91. ஞகர முன்னர்ச் சயவுயிர் மெய்வரும்.

இஃது ஞகரமுன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஞகர முன்னர்—ஞகரத்தின் முன், சய உயிர்மெய்—சகர யகர வுயிர்மெய்கள், வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) ஞகரத்தின்முன் சகர யகர வுயிர்மெய்கள் வந்து கூடும்.

உதாரணம்.

பஞ்சு, உரிஞ்யாது என வரும்.

92. டகர முன்னர்க் க ச ப வுயிர் மெய்வரும்.

இஃது டகரமுன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) டகர முன்னர்—டகரத்தின்முன், க ச ப உயிர்மெய்—ககர சகர பகர வுயிர்மெய்கள், வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) டகரத்தின்முன் ககர சகர பகர வுயிர்மெய்கள் வந்து கூடும்.

உதாரணம்.

வெட்கம், மாட்சி, நுட்பம் என வரும்.

93. ணகரமுன் க ட ச ஞ ப ம ய வவ்வாம்.

இஃது ணகரமுன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ணகர முன்—ணகரத்தின்முன், க ட ச ஞ ப ம ய வ—ககர முதலிய இவ்வெட்டுயிர்மெய்களும், ஆம்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) ணகரத்தின்முன் க ட ச ஞ ப ம ய வ என்னு மிவ்வெட்டுயிர்மெய்களும் வந்து கூடும்.

உதாரணம்.

எண்கு, செண்டு, வெண்சாரை, வெண்ஞமலி, பண்பு, வெண்மை, மண்யாது, கண்வலி என வரும்.

94. நகர முன்னந் த ய வுயிர் மெய்வரும்.

இஃது நகர முன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) நகர முன்னம்—நகரத்தின் முன்னம், த ய உயிர்மெய்—தகர யகர வுயிர்மெய்கள், வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) நகரத்தின் முன் தகர யகர வுயிர்மெய்கள் வந்து கூடும்.

உதாரணம்.

பந்து, பொருந்யாது என வரும்.

95. மம்முன் பயவ வுயிர்மெய் வருமே.

இஃது மகாமுன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ம முன்—மகரத்தின்முன், ப ய வ உயிர்மெய்—பகர யகர வகர வுயிர்மெய்கள், வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) மகரத்தின் முன் பகர யகர வகர வுயிர்மெய்கள் வந்து கூடும்.

உதாரணம்.

நம்பன், கலம்யாது, கலம்வலிது என வரும்.

96. ய ர முன் மொழிமுத லுயிர்மெ யெலாம்வரும்.

இஃது யகர ரகரங்கட்குமுன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ய ர முன்—யகர ரகரங்களுக்கு முன், மொழி முதல்—மொழிக்குமுன் வருதற்குரிய, உயிர் மெய் எலாம்—உயிர்மெய் யெழுத்துக்களெல்லாம், வரும்—வந்து புணரும்.

(பொழிப்புரை.) யகர ரகரங்களுக்குமுன் மொழிக்குமுன் வருதற்குரிய உயிர்மெய் யெழுத்துக்களெல்லாம் வந்து புணரும்.

உதாரணம்.

பொய்கை, சேர்க. பிறவுமன்ன.

97. லகர முன்னர்க் க ச ப வ ய வரும்.

இஃது லகாமுன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்து கின்றது.

(பதவுரை.) லகாமுன்னர்—லகரத்தின்முன். க ச ப வ ய—ககர சகர பகர வகர யகரமாகிய இவ்வைந்து உயிர்மெய்களும், வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) லகரத்தின்முன் க ச ப வ ய என்னு மிவ்வைந் துயிர்மெய்களும் வந்து புணரும்.

உதாரணம்.

நல்கு, வல்சி, சால்பு, கல்வி, கல்யாணம் என வரும்.

98. வகர முன்னர் யகரவுயிர் மெய்வரும்.

இஃது வகாமுன் இன்ன வுயிர்மெய் வருமென்ப துணர்த்து கின்றது.

(பதவுரை.) வகாமுன்னர்—வகரத்தின்முன், யகா உயிர்மெய்—யகர வுயிர்மெய்யானது, வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) வகரத்தின்முன் யகர வுயிர்மெய்யானது வந்து கூடும்.

உதாரணம்.

தெவ்யாது.

99. ழகர முன்னர் மொழிமுத லுயிர்மெயாம்.

இஃது ழகரத்தின்முன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ழகாமுன்னர்—ழகரத்தின் முன்னே, மொழிமுதல் உயிர்மெய்—மொழிக்கு முதலில் வருகிற உயிர்மெய் யெழுத்துக்க ளெல்லாம், ஆம்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) ழகரத்தின் முன்னே மொழிக்கு முதலில் வருகிற வுயிர்மெய் யெழுத்துக்களெல்லாம் வந்து கூடும்.

உதாரணம்.

மூழ்கி. பிறவுமன்ன.

100. ளகர முன்னர்க் க ச ப வ ய வரும்.

இஃது ளகரத்தின்முன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ளகர முன்னர்—ளகரத்தின் முன்னே, க ச ப வ ய—என்னு மிவ்வைந் துயிர்மெய்களும், வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) ளகரத்தின் முன்னே க ச ப வ ய வென்னு மிவ்வைந் துயிர்மெய்களும் வந்து கூடும்.

உதாரணம்.

வெள்கி, தாள்சிறிது, கொள்ப, வேள்வி, கோள்யாது என வரும்.

√101. றகர முன்னர்க் க ச ப வுயிர் மெய்வரும்.

இஃது றகரத்தின் முன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) றகர முன்னர்—றகரத்தின் முன்னே, கசப—ககர சகர பகர மென்கிற, உயிர்மெய்—உயிர்மெய்கள், வரும்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) றகரத்தின் முன்னே ககர சகர பகர மென்கிற வுயிர்மெய்கள் வந்து கூடும்.

உதாரணம்.

கற்க, பயிற்சி, கற்பு என வரும்.

√102. னம்முன் க ற ச ஞ ப ம ய வவ்வாம்.

இஃது னகரத்தின்முன் இன்ன வுயிர்மெய்கள் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) னம்முன்—னகரத்தின் முன்னே, க ற ச ஞ ப ம ய வ—ககர றகர சகர ஞகர பகர மகர யகர வகர மாகிய இவ்வெட்டுயிர்மெய்யும், ஆம்—வந்து கூடும்.

(பொழிப்புரை.) னகரத்தின் முன்னே க ற ச ஞ ப ம ய வ என்னும் இவ்வெட்டுயிர்மெய்யும் வந்து கூடும்.

உதாரணம்.

புன்கு, குன்று, நன்செய், புன்ஞமலி, அன்பு, நன்மை, மின்யாது, பொன்வலிது என வரும்.

103. ரகார ழகாரங் குற்றொற் றாகா.

இஃது ரகர ழகாரங்கள் குற்றெழுத்துக்களை யடுத்து வாரா வென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ரகார ழகாரம்—ரகர ழகர மெய்கள், குற்றொற்று ஆகா—குற்றெழுத்துக்களை யடுத்து வாராவாம்.

(பொழிப்புரை.) ரகர ழகர மெய்கள் குற்றெழுத்துக்களை யடுத்து வாராவாம்.

ரகர ழகாரங்கள் குற்றெழுத்துக்களை யடுத்துவரும் மொழிகள் தமிழிலில்லை யென்பது இச்சூத்திரத்தாற் கூறப்பட்டது.

104. ர ழவல் லனபுணரிற் றன்மெய்ம் மயக்கமாம்.

இஃது ர ழ வல்லாத பதினாறு மெய்களும் தம்மொடு தாம் கூடினால் இன்ன மெய்ம்மயக்கமாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ர ழ அல்லன—ரகர ழகாரங்க ளல்லாதனவாகிய பதினாறு மெய்களும், புணரின்—தம்மொடு தாம் கூடினால். தன் மெய் மயக்கம் ஆம்—தன் மெய்ம்மயக்கமென்று சொல்லப்படும்.

(பொழிப்புரை.) ரகர ழகாரங்க ளல்லாதனவாகிய பதினாறு மெய்களும் தம்மொடு தாம் கூடினால் தன் மெய்ம்மயக்கமென்று சொல்லப்படும்.

உதாரணம்.

அக்கு, அங்ஙனம், அச்சம், மஞ்ஞை, திட்டை, வண்ணம், பத்து, முந்நீர், செப்பம், செம்மை, மெய்யன், அல்லல், தெவ்வர், உள்ளம், சுற்றம், அன்னை என வரும்.

தன் மெய்ம்மயக்கம் என்றது, உடனிலை மெய்ம்மயக்கத்தை.

105. ய ர ழ வீ ரொற்றாங் க ச த ப ங ஞ ந ம.

இஃது ய ர ழ என்பவற்றின்முன் இன்னவை ஈரொற்றாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை) ய ர ழ—யகர ரகர ழகாரங்களின்முன், க ச த ப ங ஞ ந ம—க ச த ப ங ஞ ந ம என்பவை, ஈரொற்று ஆம்—ஈரொற்றாகப் புணரும்.

(பொழிப்புரை.) யகர ரகர ழகாரங்களின்முன் க ச த ப ங ஞ ந ம என்பவை ஈரொற்றாகப் புணரும்.

உதாரணம்.

காய்க்க, ஈர்க்கு, வாழ்க்கை.
பாய்ச்சு, உணர்ச்சி, சூழ்ச்சி.
தேய்த்தல், வார்த்தல், வாழ்த்தல்.
வாய்ப்பு, கார்ப்பு, காழ்ப்பு.

வேய்ங்குழல், ஆர்ங்கோடு, பாழ்ங்கிணறு.
தேய்ஞ்சது, கூர்ஞ்சிறை, பாழ்ஞ்சுனை.
காய்ந்தனம், நேர்ந்தனம், வாழ்ந்தனம்.
மொய்ம்பு, ஈர்ம்பணை, பாழ்ம்பதி—என வரும்.

106. உயிர்மெய் மயக்கிற் கோர்வரம் பின்றே.

இஃது உயிர்மெய் மயக்கத்திற்கு வரம்பின்றென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர்மெய் மயக்கிற்கு—உயிர்மெய் மயக்கத்திற்கு, ஓர் வரம்பு இன்று—ஒரு எல்லை யில்லை.

(பொழிப்புரை.) உயிர்மெய் மயக்கத்திற்கு ஒரெல்லை யில்லை.

இறுதிநிலை.

✓107. ஆவி, ஞ ண ந ம ன யரலவ ழளமெய் யந்தமாம்.

இஃது மொழியீறாய் வருமெழுத்துக்கள் இன்னவென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆவி—உயிரெழுத்துப் பன்னிரண்டும், ஞண நமன யரல வழள—ஞண நமன யரல வழள என்னும், மெய்—மெய் யெழுத்துக்கள் பதினொன்றும், அந்தம் ஆம்—மொழிக்கு ஈறாய் வரும்.

(பொழிப்புரை.) உயிரெழுத்துப் பன்னிரண்டும் ஞண நமன யரல வழள என்னும் மெய்யெழுத்துக்கள் பதினொன்றும் மொழிக்கு ஈறாய் வரும்.

உதாரணம்.

விள, பலா, கிளி, தீ, விடு, பூ, சே, இசை, நொ, போ, வெள,—உரிஞ், கண், பொருந், நிலம், பொன், தாய், வேர், பால், தெவ், காழ், நாள் என வரும்.

108. குற்றுயி ரளபீறு மெகரமெய்க் கிலையே.

இஃது குற்றுயிர் அளபெடையி லீறுமென்பதும், எகரம் மெய்யோ டீறாகாதென்பதும் உணர்த்துகின்றது.

(பதவுரை.) குற்றுயிர்—குற்றுயிர்களைந்தும், அளபு ஈறாம்—அளபெடையி லீறாகும்; எகரம் மெய்க்கு இல்லை—எகரம் மெய் யெழுத்தோடு கூடி ஈறாகாது.

(பொழிப்புரை.) குற்றுயிர்களைந்தும் அளபெடையி லீறாகும், எகரம் மெய்யெழுத்தோடு கூடி யீறாகாது.

உதாரணம்.

ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ என வரும்.

109. ஒற்றுமுன் னுயிர்பின் னுறுமுயிர் மெய்யே.

இஃது உயிர்மெய் யெழுத்துக்களை இன்னவாறு கொள்ள வேண்டுமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர் மெய்—உயிர்மெய்யெழுத்துக்கள், ஒற்று முன்—மெய்ம்முதலனவாகவும், உயிர் பின்—உயிரீற்றனவாகவும், உறும்—அமையும்.

(பொழிப்புரை.) உயிர்மெய் யெழுத்துக்கள் மெய்ம்முதலனவாக வும் உயிரீற்றனவாகவும் அமையும்.

கா என்ற ஓரெழுத்தொருமொழி, ககரமுதலாகவும் ஆகார வீற்றதாகவுங் கொள்ளப்படு மென்க. பிறவும் அன்ன.

110. அவைதாம், ஒற்றொலி முன்னு முயிரொலி பின்னுமாம்.

இஃது மேற்சூத்திரத்திற் கூறியதற்குக் காரணம் உணர்த்து கின்றது.

(பதவுரை.) அவைதாம் — அவ்வுயிர்மெய்கள்தாம், ஒற்றொலி முன்னும் — மெய்யோசை முன்னும், உயிரொலி பின்னும் — உயி ரோசை பின்னுமாக, ஆம்—ஒலிக்கும்.

(பொழிப்புரை.) அவ்வுயிர்மெய்கடாம், மெய்யோசை முன்னும் உயிரோசை பின்னுமாக ஒலிக்கும்.

க, கா என்பவற்றுள் ககர வொற்றுக்கள் முன்னொலித்தலும், அகர ஆகாரவுயிர்கள் பின்னொலித்தலுங் காண்க. ஏனையவு மிவ் வாறே.

√111. மெய்யொடு மேவினு முயிர்வேறு படாஅ.

இஃது மெய்யொடு கூடினும் உயிர் வேறுபடாதென்ப துணர்த் துகின்றது.

(பதவுரை.) உயிர்—உயிரெழுத்துக்கள், மெய்யொடு மேவினும்—மெய்யெழுத்துக்களோடு கூடினும், வேறுபடாஅ — வேறுபடா வாம்.

(பொழிப்புரை.) உயிரெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களோடு கூடினும் வேறுபடாவாம். தனித்தியங்கும் ஆற்றலுடைய வுயிர் அவ்வாற்றலில்லாத மெய்யோடுமேவினும் தன்னாற்றல் குன்றா தென்ப துணர்த்துத லுணர்க.

112. மெய்யி னியக்க முயிர்கொண்டு மேவும்.

இஃது மெய்யெழுத்துக்கள் இவ்வாறு நடக்குமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) மெய்யின் இயக்கம்—மெய்யெழுத்துக்களின் இயக்கமானது, உயிர்கொண்டு மேவும்—உயிரெழுத்தின் உதவியைக் கொண்டு நடக்கும்.

(பொழிப்புரை.) மெய்யெழுத்துக்களின் இயக்கமானது உயிரெழுத்தின் உதவியைக்கொண்டு நடக்கும்.

இயக்கம்—சஞ்சாரம். புடைபெயர்ச்சி.

113. இகரம் யகரமெய் யிறுதி விரவும்.

இஃது இறுதியிற் கலந்துவரு மெழுத்துக்க ளிவையென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) இகரம்—இகரமும், யகரமெய்—யகரமெய்யும், இறுதி விரவும்—மொழியிறுதியி லோசைகலந்துவரும்.

(பொழிப்புரை.) இகரமும் யகரமெய்யும் மொழியிறுதியி லோசை கலந்து வரும்.

உதாரணம்.

நா இ, நாய் என வரும்.

114. எழுத்துப் பெயர்சொலின் முதன்மயக்க மேகும்.

இஃது எழுத்தின் பெயர் சொல்லின் மொழிமுதல்விதியும் மயக்கவிதியுமில்லை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) எழுத்துப்பெயர் சொலின்—எழுத்தின் பெயரைச் சொல்லின், முதல்—மொழி முதல்விதியும், மயக்கம்—மயக்கவிதியும், ஏகும்—போய்விடும்.

(பொழிப்புரை.) எழுத்தின் பெயரைச் சொல்லின் மொழி முதல்விதியும், மயக்கவிதியும் போய்விடும்.

முதல், மயக்கம் என்பவற்றிற்றில் எண்ணும்மைகள் தொக்கன. ஏகும் என்றது, இல்லை யென்னும்பொருட்டு.

மாத்திரை.

115. கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை.

இஃது மாத்திரையினள வுணர்த்துகின்றது.

(பதவுரை.) கண் இமை—கண்ணிமைப்பொழுதும், கைந்நொடி—கைந்நொடிப்பொழுதும், மாத்திரை அளவு—மாத்திரைக்கு அளவாகும்.

(பொழிப்புரை.) கண்ணிமைப்பொழுதும் கைந்நொடிப்பொழுதும் மாத்திரைக்கு அளவாகும்.

இமை, நொடி என்பன முதனிலைத் தொழிலாகும்பெயர்கள். அளவு—காலவளவு. கண்ணிமைத்தல் கைந்நொடித்தலினும் இயல்பாய்விரைந்து நிகழ்தலின் முற்கூறினர். மேலே "உன்னல்காலே" எனச் சூத்திரித்தலின், பின்னது செயற்கையின் பாற்பட்டு அத்துணைச் சிறப்பன்றென்பது தோன்றப் பின்வைத்தாரென்க.

116. வரைமித மளவு மட்டுமாத் திரைப்பெயர்.

இஃது மாத்திரையின் பரியாயப்பெயர்களை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) வரை—வரையென்பதும், மிதம்—மிதமென்பதும், அளவு—அளவென்பதும், மட்டு—மட்டு என்பதும், மாத்திரைப்பெயர்—மாத்திரையின் பரியாயப்பெயர்களாம்.

(பொழிப்புரை.) வரை மிதம் அளவு மட்டு ஆகிய நான்கும் மாத்திரையின் பரியாயப்பெயர்களாம்.

117. உன்னல் காலே யூன்ற லரையே
முறுக்கல் முக்கால் விடுத்த லொன்றே.

இஃது மாத்திரையின் சிற்றள வுணர்த்துகின்றது.

(பதவுரை.) உன்னல் கால்—நொடிக்கக் கருதுதல் கால்மாத்திரையாம், ஊன்றல் அரை—விரல்களை ஊன்றுதல் அரைமாத்திரையாம், முறுக்கல் முக்கால்—முறுக்குதல் முக்கால்மாத்திரையாம், விடுத்தல் ஒன்று—விடுத்தல் ஒருமாத்திரையாம்.

(பொழிப்புரை.) கையை நொடிக்கக் கருதுதல் கால்மாத்திரையாம்; விரல்களை ஊன்றுதல் அரைமாத்திரையாம்; முறுக்குதல் முக்கால்மாத்திரையாம்; விடுத்தல் ஒருமாத்திரையாம்.

விடுத்தல்—நொடித்தல்.

'உறுத்தலரையே' என்பதும் பாடம்.

118. குறிலொரு மாத்திரை நெடிலிரு மாத்திரை.

இஃது குறிலுக்கும் நெடிலுக்கும் மாத்திரையள வுணர்த்துகின்றது.

(பதவுரை.) குறில் ஒரு மாத்திரை—குறிலுக்கு ஒருமாத்திரைப் பொழுது அளவாகும், நெடில் இரு மாத்திரை—நெடிலுக்கு இரண்டு மாத்திரைப்பொழுதுஅளவாகும்.

(பொழிப்புரை.) குறிலுக்கு ஒருமாத்திரைப்பொழுது அளவாகும், நெடிலுக்கு இரண்டுமாத்திரைப்பொழுது அளவாகும்.

மாத்திரை—மாத்திரைப்பொழுது. அளவாகும் என்பது இசையெச்சம்.

119. மெய்ம்மாத் திரையே யரையென விளம்புப.

இஃது மெய்யெழுத்திற்கு மாத்திரையள வுணர்த்துகின்றது.

(பதவுரை.) மெய் மாத்திரை—மெய்யெழுத்துக்களுக்கு மாத்திரை, அரை என விளம்புப—அரையென்று சொல்லுவர் (புலவர்).

(பொழிப்புரை.) மெய்யெழுத்துக்களுக்கு மாத்திரை அரையென்று சொல்லுவர் புலவர்.

விளம்புப என்னும் வினைக்கு வினைமுதலாகிய புலவர் என்பது வருவிக்கப்பட்டது.

120. மூவள பொலித்த லோரெழுத் திற்கிலை.

இஃது ஓரெழுத்தே நின்று மூன்று மாத்திரை பொலியாதென்னும் இயல்பை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) ஓர் எழுத்திற்கு—ஒரு எழுத்துக்கு, மூவளபு ஒலித்தல் இல்லை—மூன்று மாத்திரையளவு சத்தித்தல் இல்லை.

(பொழிப்புரை.) ஒரு எழுத்துக்கு மூன்று மாத்திரையளவு சத்தித்தல் இல்லை.

ஒலித்தல் இல்லை யென இயையும்.

121. அளபெடை மூன்றன்மே லாகு மென்ப.

இஃது அளபெடையில் மூன்று மாத்திரையின் மிக்கொலிக்குமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அளபெடை—அளபெடையில், மூன்றன்மேல்—மூன்று மாத்திரையின்மேலும், ஆகும் என்ப—ஒலிக்குமென்பர் (புலவர்).

(பொழிப்புரை.) அளபெடையில் மூன்று மாத்திரையின்மேலும் ஒலிக்குமென்பர் புலவர்.

மூன்றன்மேல் ஆகும்—மூன்று மாத்திரை யொலித்தலேயன்றி அதனின் மிக்கொலித்தலுங்கூடும். மூன்றன்மேல் என்றது, நான்கு மாத்திரைப் பொழுதை.

122. ஒற்றள பெடை ஐ ஔக் குறுக்க மொன்றும்.

இஃது ஒற்றளபெடை முதலியவற்றிற்கு மாத்திரை யுணர்த்து கின்றது.

(பதவுரை.) ஒற்றளபெடை — ஒற்றளபெடைக்கும், ஐ ஔ குறுக்கம்—ஐகார ஔகாரக் குறுக்கங்களுக்கும், ஒன்று ஆம்—தனித்தனி ஒருமாத்திரை யளவாம்.

(பொழிப்புரை.) ஒற்றளபெடைக்கும் ஐகார ஔகாரக் குறுக கங்களுக்கும் தனித்தனி ஒருமாத்திரை யளவாம்.

123. இ உக் குறுக்க மாய்த மரையாம்.

இஃது குற்றியலிகர முதலியவற்றிற்கு அளவுணர்த்துகின் றது.

(பதவுரை.) இ உ குறுக்கம்--இகர உகரக் குறுக்கங்களுக்கும், ஆய்தம்—ஆய்தத்திற்கும், அரைஆம்—தனித்தனி அரைமாத்திரை யளவாம்.

(பொழிப்புரை.) குற்றியலிகரத்திற்கும், குற்றியலுகரத்திற்கும், ஆய்தத்திற்கும் தனித்தனி அரைமாத்திரையாம்.

124. குறுகிய மவ்விற்கு மாய்தக்குங் காலே.

இஃது மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற்கும் அளவுணர்த்துகின்றது.

(பதவுரை.) குறுகிய மவ்விற்கும் — மகரக் குறுச்கத்திற்கும், குறுகிய ஆய்தக்கும் — ஆய்தக் குறுக்கத்திற்கும், கால் — தனித் தனி கால்மாத்திரையளவாம்.

(பொழிப்புரை.) மகரக் குறுக்கத்திற்கும் ஆய்தக் குறுக்கத்திற் கும் தனித்தனி கால்மாத்திரை யளவாம்.

குறுகிய — தன்னளவிற் குறைந்த. ஆய்தத்திற்கும் எனற் பாலது ஆய்தக்கும் என அத்துச்சாரியை இன்சாரியை பெறாது வந்தது.

125. விளியிசை புலம்பல் விற்கையின் மிகுமே.

இஃது மாத்திரைக்குப் புறனடை கூறுகின்றது.

(பதவுரை.) விளி—விளியிலும், இசை—இசையிலும், புலம்பல்—புலம்பலிலும், விற்கையில்—விற்றலிலும், மிகும்—எழுத்துக்கள் தத்தம் அளவின் மிக்கொலிக்கும்.

(பொழிப்புரை.) விளியிலும், இசையிலும், புலம்பலிலும், விற்றலிலும், எழுத்துக்கள் தத்தம் அளவின் மிக்கொலிக்கும்.

விளி—அழைத்தல். இசை—இராகம் பாடுதல். புலம்பல்—அழுதல். விற்கை—பண்டமாற்று.

கூட்டெழுத்து.

126. அகரம் இகரம் ஐகார மாகும்,
அகரம் யகரமெய் ஐகார மாகும்.

இஃது ஐகாரம் கூட்டெழுத்தாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அகரம் இகரம்—அகரமும் இகரமும் ஆகிய இரண்டும், ஐகாரம் ஆகும் — ஐகாரம்போல் உச்சரிக்கப்படும்; அகரம் யகரமெய் — அகரமும் யகரமெய்யுமாகிய இரண்டும், ஐகாரம் ஆகும்—ஐகாரம்போல் உச்சரிக்கப்படும்.

(பொழிப்புரை.) அகரமும் இகரமும் ஆகிய இரண்டும் ஐகாரம்போ லுச்சரிக்கப்படும். அகரமும் யகரமெய்யுமாகிய இரண்டும் ஐகாரம்போ லுச்சரிக்கப்படும்.

உதாரணம்.

அ இ—ஐ, அ ய்—ஐ.

அகரம் இகரம். அகரம் யகரமெய் என்பவற்றிற்றில் உம்மைகள் தொக்கன.

127. அகரம் உகரம் ஔகார மாகும்,
அகரம் வகரமெய் ஔகார மாகும்.

இஃது ஔகாரம் கூட்டெழுத்தாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அகரம் உகரம்—அகரமும் உகரமும் ஆகிய இரண்டும், ஔகாரம் ஆகும்—ஔகாரம்போ லுச்சரிக்கப்படும்; அகரம் வகரமெய் — அகரமும் வகரமெய்யுமாகிய இரண்டும், ஔகாரம் ஆகும்—ஔகாரம்போ லுச்சரிக்கப்படும்.

(பொழிப்புரை.) அகரமும் உகரமும் ஆகிய இரண்டும் ஔகாரம்போ லுச்சரிக்கப்படும்; அகரமும் வகரமெய்யுமாகிய இரண்டும் ஔகாரம்போ லுச்சரிக்கப்படும்.

உதாரணம்.

அ உ—ஔ, அ வ்—ஔ.

அகரம் உகரம், அகரம் வகரமெய் என்பவற்றீற்றில் உம்மைகள் தொக்கன.

எழுத்துச்சாரியை.

128. மெய்க ளகரமே நெட்டுயிர் காரமே
ஐ ஔக் கானே இருமைக் குறில்க
ளிரண்டுடன் கரமே யெழுத்துச் சாரியை.

இஃது மெய்ம்முதலியன பெறுஞ் சாரியைக ளிவையென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) மெய்கள் அகரம்—தனி மெய்யெழுத்துக்கள் அகரச் சாரியையும், நெட்டுயிர் காரம்—உயிர் நெடில்கள் காரச்சாரியை யும், ஐ ஔ கான்—ஐகார ஔகாரங்கள் (காரச்சாரியையோடு) கான்சாரியையும், இருமைக் குறில்கள்—உயிர்க்குறிலும் உயிர் மெய்க்குறிலுமாகிய இரண்டு குறில்களும், இரண்டுடன்—காரச் சாரியை கான் சாரியை யென்னு மிரண்டுடனே, கரம்— கரச்சாரி யையும் (பெற்று வரும்); எழுத்துச்சாரியை—இவை எழுத்துச் சாரியை யெனப் பெறும்.

(பொழிப்புரை.) மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியையும், நெட்டுயிர் காரச்சாரியையும், ஐகார ஔகாரங்கள் (காரச்சாரியை யோடு) கான்சாரியையும், இரண்டு குறில்களும் காரச்சாரியை கான்சாரியை யென்னு மிரண்டுடனே கரச்சாரியையும் பெற்று வரும். இவை எழுத்துச்சாரியை யெனப் பெறும்.

உதாரணம்.

க, ககரம், ஙகரம்; ஆகாரம், ஐகாரம், ஔகாரம்; ஐகான், ஔகான்; அகாரம், மகாரம்; அஃகான், மஃகான்; அகரம், மகரம் என வரும். பிறவு மன்ன.

எழுத்து வரன்முறைப் படலம் முற்றிற்று.

௪-வது பன்மொழியாக்கப் படலம்.

அஃதாவது—புணர்ச்சி யறிவிக்குமுன் பல சொற்களின் ஆக்கத்தை உணர்த்தும் படலம்.

129. மொழிந்தவெழுத்தான்மொழிவதேமொழியாம்.

இஃது மொழியாமாறு உணர்த்துகின்றது.

(பதவுரை.) மொழிந்த எழுத்தான்—(முன்) சொன்ன வெழுத்தினால். மொழிவதே—சொல்லுவதே, மொழி ஆம்—சொல்லாகும்.

(பொழிப்புரை.) (முன்) சொன்ன வெழுத்துக்களாற் சொல்லுவதே சொல்லாகும்.

ஓரெழுத் தொருமொழி.

130. உயிர்நெட்டெழுத்தேழோரெழுத்தொருமொழி.

இஃது ஓரெழுத் தொருமொழி யிவை யென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) உயிர் நெட்டெழுத்து ஏழ்—உயிர் நெட்டெழுத்துக்களேழும், ஓர் எழுத்து ஒருமொழி—ஓரெழுத் தொருமொழிகளாம்.

(பொழிப்புரை.) உயிர் நெட்டெழுத்துக்க ளேழும் ஓரெழுத் தொருமொழிகளாம்.

உதாரணம்.

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.

ஆ—பசு. ஈ—ஒரு சிறுபறவை. ஊ—இறைச்சி. ஏ—அம்பு. ஐ—அழகு. ஓ—மதகுநீர் தாங்கும் பலகை. ஔ—சுட்டுப்போலி; இஃது அவ் என்னுஞ் சுட்டுக்கு ஒருபுடை யொப்புமையான் வருவது.

131. குற்றெழுத் தைந்து மொழிநிறைந் தியலா.

இஃது ஓரெழுத் தொருமொழி யாகாதன விவையென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) குற்றெழுத்து ஐந்தும்—உயிர்க் குற்றெழுத்துக்களைந்தும், மொழி நிறைந்து இயலா—ஓரெழுத் தொருமொழிகளாகா.

(பொழிப்புரை.) உயிர்க் குற்றெழுத்துக்க ளைந்தும் ஓரெழுத் தொருமொழிக ளாகா.

132. க ச த ந ப ம வ வருக்கமவ் வாறும்.

இஃது ககர முதலாகிய வேழு வருக்கத்திலும் தனித்தனி அவ்வாறு எழுத்துக்க ளோரெழுத் தொருமொழிக ளாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) க ச த ந ப ம வ வருக்கம்—ககர முதல் வகர மிறுதியாயுள்ள விவ்வேழு வருக்கத்திலும், அவ்வாறு ஆம்—தனித் தனி அவ்வாறு எழுத்துக்க ளோரெழுத் தொருமொழிக ளாகும்.

(பொழிப்புரை.) ககர முதல் வகர மிறுதியாகவுள்ள இவ்வேழு வருக்கத்திலும் தனித்தனி அவ்வாறெழுத்துக்கள் ஓரெழுத்தொரு மொழிக ளாகும்.

உதாரணம்.

கா,	கு,	கூ,	கை,	கோ,	கௌ.
சா,	சீ,	சு,	சே,	சை,	சோ.
தா,	தீ,	து,	தூ,	தே,	தை.
நா,	நீ,	நே,	நை,	நொ,	நோ.
பா,	பீ,	பூ,	பே,	பை,	போ.
மா,	மீ,	மூ,	மே,	மை,	மோ.
வா,	வி,	வீ,	வே,	வை,	வௌ.

கா—சோலை
கு—பூமி
கூ—கூவென்னேவல்
கை—ஓரவயவம்
கோ—அரசன்
கௌ—கௌவென்னேவல்

சா—சாவென்னேவல்
சீ—சீயென்னேவல்
சு—நன்மை
சே—எருது
சை — இகழ்ச்சிக் குறிப்பு
சோ—அரண்

தா—கொடுவென்னேவல்
தீ—நெருப்பு
து—துவ்வென்னேவல்
தூ—பரிசுத்தம்
தே—தெய்வம்
தை—தையென்னேவல்

நா—நாக்கு
நீ—நீயென்னேவல்
நே—அன்பு
நை—நையென்னேவல்
நொ—துன்பப்படு
நோ—துன்பம்

பா—பாடல்
பீ—மலம்
பூ—மலர்
பே—நுரை
பை—பாம்பின் படம்
போ—போவென்னேவல்

மா—ஓர் மரம்
மீ—மேலிடம்
மூ—மூவென்னேவல்
மே—அன்பு
மை—மேகம்
மோ—மோவென்னேவல்

வா—வாவென்னேவல்
வி—அதிகம், இன்மை முதலியவற்றை யுணர்த்து மோருபசர்க்கம்
வீ—மலர்
வே—வேவென்னேவல்
வை—கூர்மை
வௌ—வௌவென்னேவல்

நால்வகை மொழிகள்.

133. மொழியே,
பெயர்வினை யிடையுரி நான்கென மொழிப.

இஃது மொழிகள் நால்வகையா மென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) மொழி—மொழிகள், பெயர்—பெயர்ச்சொல்லும், வினை — வினைச்சொல்லும், இடை — இடைச்சொல்லும், உரி — உரிச்சொல்லும் ஆக, நான்கு என மொழிப—நான்குவகை யென்று சொல்லுவர் புலவர்.

(பொழிப்புரை.) மொழிகள் பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும், இடைச்சொல்லும், உரிச்சொல்லும் ஆக நான்குவகை யென்று சொல்லுவர் புலவர்.

மொழிப என்னும் வினைக்கு வினைமுதல் வருவித் துரைக்கப் பட்டது.

பெயர்ச்சொல்.

134. பொருளிடங் காலஞ்சினைகுணந்தொழிற்பெயர்.

இஃது பெயர்ச்சொற்கள் இன்னவென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) பொருள்—பொருளும், இடம்—இடமும், காலம்—காலமும், சினை—சினையும், குணம்—குணமும், தொழில்—தொழிலும் (ஆகிய இவ்வாறும்), பெயர்—பெயர்ச்சொற்களாம்.

(பொழிப்புரை.) பொருளும் இடமும் காலமும் சினையும் குணமும் தொழிலும் (ஆகிய இவ்வாறும்) பெயர்ச்சொற்களாம்.

வினைச்சொல்.

135. வினைபல நிகழினும் வினைச்சொ லென்க.

இஃது வினைச்சொல்லாமாறு உணர்த்துகின்றது.

(பதவுரை.) வினை—வினைகள், பல நிகழினும்—பலவாக நடப்பினும், (அவை யாவும்). வினைச்சொல் என்க — வினைச்சொல்லே யென்று சொல்லுக.

(பொழிப்புரை.) வினைகள் பலவாக நடப்பினும் அவை யாவும் வினைச்சொல்லே யென்று சொல்லுக.

இடைச்சொல்.

136. பெயர்வினை யிடத்துப் பிறப்ப திடைச்சொலே.

இஃது இடைச்சொல்லாமாறு உணர்த்துகின்றது.

(பதவுரை.) பெயர் வினை யிடத்துப் பிறப்பது — பெயரினிடமாகவும் வினையினிடமாகவும் பிறப்பது, இடைச்சொல் — இடைச்சொல்லாகும்.

(பொழிப்புரை.) பெயரினிடமாகவும் வினையினிடமாகவும் பிறப்பது இடைச்சொல்லாகும்.

உரிச்சொல்.

137. பெயர்வினைக் குணங்களைப் பெருக்குவ துரிச்
சொலே.

இஃது உரிச்சொல்லாமாறு உணர்த்துகின்றது.

(பதவுரை.) பெயர்வினைக் குணங்களை — பெயரின் குணங்களையும் வினையின் குணங்களையும், பெருக்குவது — விளக்கிச்சொல்வது, உரிச்சொல் — உரிச்சொல்லாம்.

(பொழிப்புரை.) பெயரின் குணங்களையும் வினையின் குணங்களையும் விளக்கிச் சொல்வது உரிச்சொல்லாம்.

138. பெயரிரு திணையைம் பான்மூ விடம்பெறும்.

இஃது பெயர்ச்சொல்லானது இருதிணை ஐம்பால் மூவிடங்களைப் பெறுமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) பெயர் — பெயர்ச்சொற்கள், இருதிணை — இருதிணையையும், ஐம்பால் — ஐம்பாலினையும், மூவிடம் — மூன்றிடத்தையும், பெறும் — பெற்று நடக்கும்.

(பொழிப்புரை.) பெயர்ச்சொற்கள் இருதிணையையும், ஐம்பாலினையும், மூன்றிடத்தையும் பெற்று நடக்கும்.

இருதிணை — உயர்திணை, அஃறிணை யென்பன. இவற்றுள் மக்கள் தேவர் நரகர்களை யுணர்த்துவது உயர்திணை: விலங்கு முதலிய உயிருள்ளனவும் கல் முதலிய உயிரில்லனவுமாகிய பொருள்களை யுணர்த்துவது அஃறிணை. ஐம்பாலாவன: உயர்திணை — ஆண்பால் பெண்பால் பலர்பால்களும், அஃறிணை — ஒன்றன்பால் பலவின் பால்களுமாம். மூவிடமாவன — தன்மையிடம் முன்னிலையிடம் படர்க்கையிடம் என்பனவாம்.

மொழிவகை.

139. தனிமொழி யிணைமொழி துணைமொழி பொது
மொழி
கணமொழி தணமொழி கலப்புறு மொழியேழ்.

இஃது மொழி வகையினை உணர்த்துகின்றது.

(பதவுரை.) தனிமொழி—தனிமொழி யெனவும், இணைமொழி—இணைமொழி யெனவும், துணைமொழி—துணைமொழி யெனவும், பொதுமொழி—பொதுமொழி யெனவும், கணமொழி—கணமொழி யெனவும், தணமொழி—தணமொழி யெனவும், கலப்புறுமொழி—கலப்புறுமொழி யெனவும், ஏழ்—(மொழியானது) ஏழுவகையினை யுடையதாம்.

(பொழிப்புரை.) தனிமொழி, இணைமொழி, துணைமொழி, பொதுமொழி, கணமொழி, தணமொழி, கலப்புறுமொழி யென (மொழியானது) ஏழுவகையினை யுடையதாம்.

கலம், நீர் என்பன தனிமொழி. தோன், ஊரன் என்பன இணைமொழி. மூவர் வந்தார், வேந்தர் சேர்ந்தார் என்பன துணைமொழி. தங்கை, வேங்கை யென்பன பொதுமொழி. முனிவர், தேவர் என்பன கணமொழி. இந்திரன், சந்திரன் என்பன தணமொழி. ஆண் பெண் என்பன கலப்புறுமொழி. இவை முறையே, பிரிக்கப்படாமலும், பிரிக்கப்பட்டும், தொடர்ந்து வந்தும், இருபொருள் கொண்டும், பன்மையைக் காட்டியும், ஒருமையைக் காட்டியும், இருதிணையிலும் கலந்துவந்தும் இப்பெயர் பெற்றன.

மொழிகளின் எழுத்துவரையறை.

140. மொழியே,
ஓரெழுத் தாதியா வொன்பதெழுத் தந்தமாம்.

இஃது மொழிகளின் எழுத்து வரையறை யுணர்த்துகின்றது.

(பதவுரை.) மொழி — மொழிகள், ஓரெழுத்து ஆதியா—ஓரெழுத்துமுதலாக, ஒன்பது எழுத்து அந்தம்—ஒன்பதெழுத்து முடிவாக, ஆம்—வரும்.

(பொழிப்புரை.) மொழிகள் ஓரெழுத்து முதலாக ஒன்பதெழுத்து முடிவாக வரும்.

இம்மொழிகளுள், பகாப்பதங்கள் இரண்டெழுத்து முதலாக ஏழெழுத்தீறுகவும், பகுபதங்கள் இரண்டெழுத்து முதலாக ஒன்பதெழுத் தீறுகவும் வரும்.

உதாரணம்.

அணி, கலம், பொருப்பு, அருப்பம், குங்கிலியம், உத்திரட்டாதி இவை பகாப்பதங்கள். கூனி, கூனன், குழையன், பொருப்பன், அம்பலவன், அரங்கத்தான், உத்திராடத்தான், உத்திரட்டாதியான் இவை பகுபதங்கள்.

பன்மொழியாக்கப் படலம் முற்றிற்று.

ரு-வது வடமொழிப் படலம்.

அஃதாவது—வடமொழிகளும் வடமொழி புணரும் வகையும் உணர்த்தும் படலம்.

141. சநுக்கிரகஞ் சங்கத மவப்பிரஞ்சநம் பாகதம் மொழிநான் கென்றே மொழியப் படுமே.

இஃது வடசொல்லானது நால்வகையாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) மொழி—சொல்லானது, சநுக்கிரகம்—சநுக்கிரகமும், சங்கதம்—சங்கதமும், அவப்பிரஞ்சநம்—அவப்பிரஞ்சநமும், பாகதம்—பாகதமும் ஆகிய, நான்கு என்று—நால்வகையாமென்று, மொழியப்படும்—சொல்லப்படும்.

(பொழிப்புரை.) சொல்லானது சநுக்கிரகமும் சங்கதமும் அவப்பிரஞ்சநமும் பாகதமும் ஆகிய நான்குவகையாமென்று சொல்லப்படும்.

சநுக்கிரகம் முதலிய நான்கும் வடசொற்கள்.

142. சநுக்கிரகஞ் சங்கதந் தேவர்மொழி யென்ப.

இஃது மேற்கூறப்பட்ட நான்கனுள் சநுக்கிரகம் சங்கதம் என்னு மிரண்டும் இன்னார்க்காகுமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) சநுக்கிரகம் சங்கதம்—சநுக்கிரகம் சங்கதம் என்னும் இரண்டும், தேவர் மொழி என்ப—தேவர்மொழிகளாமென்று சொல்லுவர் புலவர்.

(பொழிப்புரை.) சநுக்கிரகம் சங்கதம் என்னு மிவ்விரண்டும் தேவர்மொழிகளாமென்று சொல்லுவர் புலவர்.

143. அவப்பிரஞ் சநமொழி யசேதனர்க் காகும்.

இஃது அவப்பிரஞ்சநமொழி இன்னார்க்காகுமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) அவப்பிரஞ்சந மொழி — அவப்பிரஞ்சந மொழியானது, அசேதனர்க்கு ஆகும் — இழிசாதியார்க்கு உரியதாகும்.

(பொழிப்புரை.) அவப்பிரஞ்சந மொழியானது இழிசாதியார்க்குரியதாகும்.

அசேதனர்—அறிவிலார் (சேதனம்—அறிவு). இழிஜனங்கள் அறிவிலிகளாதலால் அவர்களை அசேதனர் என்றார்.

144. எல்லா நாட்டிலு மியல்வது பாகதம்.

இஃது பாகதம் ஆமாறு உணர்த்துகின்றது.

(பதவுரை.) எல்லா நாட்டிலும்—எல்லாத் தேயத்திலும், இயல்வது—வழங்குவது, பாகதம்—பாகதமொழி யெனப்படும்.

(பொழிப்புரை.) எல்லாத் தேயத்திலும் வழங்குவது பாகதமொழி யெனப்படும். பாகதம் பிராகிர்தம் என்னும் வடமொழிச் சிதைவு.

இயலல்—வழங்கல்.

145. பாகதம், தற்பவந் தற்சமந் தேசிய மெனப்படும்.

இஃது பாகதத்தின் வகையினை உணர்த்துகின்றது.

(பதவுரை.) பாகதம்—பாகதமானது, தற்பவம்—தற்பவமென்றும், தற்சமம்—தற்சமமென்றும், தேசியம்—தேசியமென்றும், எனப்படும்—மூவகைபாகச் சொல்லப்படும்.

(பொழிப்புரை.) பாகதமானது தற்பவம், தற்சமம், தேசியம் என மூவகையாகச் சொல்லப்படும்.

தற்பவம்.

146. ஆரியச் சிறப்பெழுத் தாற்பொதுச் சிறப்பா லானவீ ரெழுத்தா லமைவது தற்பவம்.

இஃது தற்பவத்தி னிலக்கண முணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆரியச் சிறப்பெழுத்தால்—ஆரியச் சிறப்பெழுத்தாலும், பொதுச்சிறப்பால் ஆன ஈரெழுத்தால்—பொதுவுஞ் சிறப்புமாகிய இரண்டெழுத்தாலும், அமைவது—தமிழிற் சிதைந்துவந்தமைந்திருப்பது, தற்பவம்—தற்பவம் எனப்படும்.

(பொழிப்புரை.) ஆரியச் சிறப்பெழுத்தாலும் பொதுவுஞ் சிறப்புமாகிய இரண்டெழுத்தாலும் தமிழிற் சிதைந்துவந்து அமைந்திருப்பது தற்பவம் எனப்படும்.

உதாரணம்.

சுகி, போகி—இவை சிறப்பு. அரன், அரி—இவை பொது.

ஆர்யம்—வடசொல். ஆரியச் சிறப்பெழுத்து—வடமொழிக்கேயுரிய சிறப்பெழுத்து. பொதுச் சிறப்பு—வடமொழிக்கும் தென்மொழிக்கும் பொதுவும் வடமொழிக்குச் சிறப்புமாகிய இருவகையெழுத்து.

தற்சமம்.

147. ஆரியந் தமிழ்ப்பொது வாமொழி தற்சமம்.

இஃது தற்சமத்தி னிலக்கண முணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆரியம்—ஆரியத்திற்கும், தமிழ் — தமிழிற்கும், பொது ஆம்—பொதுவெழுத்தாலாகிய, மொழி—மொழிகள், தற்சமம்—தற்சமம் எனப்படும்.

(பொழிப்புரை.) ஆரியத்திற்கும் தமிழிற்கும் பொதுவெழுத்தாலாகிய மொழிகள் தற்சமம் எனப்படும்.

உதாரணம்.

அமலம், காரணம்—இவை பொது.

தேசியம்.

148. தேசியந் திசைச்சொ லென்று செப்புக.

இஃது தேசியத்தி னிலக்கண முணர்த்துகின்றது.

(பதவுரை.) தேசியம்—தேசியமென்பது, திசைச்சொல் என்று செப்புக—திசைச்சொல்லென்று சொல்லுக.

(பொழிப்புரை.) தேசியம்என்பதுதிசைச்சொல்என்றுசொல்லுக.

உதாரணம்.

ஆய், அச்சன் என வரும்.

இவை முறையே தாய் தந்தை என்னும் பொருளன.

தேசியம்–பிறநாட்டுமொழிகளினின்று தமிழ்நாட்டில் வந்து வழங்குஞ் சொல். இச்சூத்திரத்திற் 'செப்புக' வென்பதும் திசைச்சொல்லாதல் காண்க.

வடமொழிச் சந்தி.

149. தீர்க்கங் குணம்விருத்தி சந்திமூ வகையாம்.

இஃது சந்தியின் வகையை உணர்த்துகின்றது.

(பதவுரை.) தீர்க்கம்–தீர்க்கசந்தி யென்றும், குணம்–குணசந்தி யென்றும், விருத்தி—விருத்திசந்தி யென்றும், சந்தி மூவகை ஆம்—சந்தியானது மூவகைப்படும்.

(பொழிப்புரை.) தீர்க்கசந்தி யென்றும் குணசந்தி யென்றும் விருத்திசந்தி யென்றும் சந்தியானது மூன்று வகைப்படும்.

தீர்க்க சந்தி.

150. அ ஆ முன் அ ஆ வரி லிரண்டுங்கெட் டாவாம்.

இஃது அகர ஆகார வீற்றின்முன் அ ஆ வந்து புணருமாறுணர்த்துகின்றது.

(பதவுரை.) அ ஆ முன்—வடமொழி அகர ஆகார வீற்றின் முன், அ ஆ வரில்—அகர ஆகாரங்கள் வந்தால், இரண்டும் கெட்டு—நிலைமொழி யீறும் வருமொழி முதலுமாகிய இரண்டும் கெட, ஆ ஆம்—ஆகாரம் வரும்.

(பொழிப்புரை.) வடமொழி அகர ஆகார வீற்றின்முன் அகர ஆகாரங்கள் வந்தால் நிலைமொழி யீறும் வருமொழி முதலும் ஆகிய இரண்டும் கெட ஆகாரம் வரும்.

உதாரணம்.

பாத அம்புஜம்—பாதாம்புஜம், சிவ ஆலயம்—சிவாலயம்.
சேனா அதிபதி—சேனாதிபதி, சதா ஆநந்தம்—சதாநந்தம்.

151. இ ஈ முன் இ ஈ வரி லிரண்டுங்கெட் டீயாம்.

இஃது இகர ஈகாரத்தின்முன் இ ஈ வந்து புணருமா றுணர்த்து கின்றது.

(பதவுரை.) இ ஈ முன்—இகர ஈகார வீற்றின்முன், இ ஈ வரில்—இகர ஈகாரங்கள் வந்தால், இரண்டும் கெட்டு — ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட, ஈ ஆம்—ஈகாரம் வரும்.

(பொழிப்புரை.) இகர ஈகார வீற்றின்முன் இகர ஈகாரங்கள் வந்தால் ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட ஈகாரம் வரும்.

உதாரணம்.

கிரி இந்திரன்—கிரீந்திரன், கிரி ஈசன்—கிரீசன்.
மகீ இந்திரன்—மகீந்திரன், மகீ ஈசன்—மகீசன்.

152. உ ஊ முன் உ ஊ வரி லிரண்டுங்கெட் டூவாம்.

இஃது உகர ஊகாரத்தின்முன் உ ஊ வருமா றுணர்த்து கின்றது.

(பதவுரை.) உ ஊ முன்—உகர ஊகார வீற்றின்முன், உ ஊ வரில்—உகர ஊகாரங்கள் வந்தால், இரண்டும் கெட்டு—ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட, ஊ ஆம்—ஊகாரம் வரும்.

(பொழிப்புரை.) உகர ஊகார வீற்றின்முன் உகர ஊகாரங்கள் வந்தால் ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட ஊகாரம் வரும்.

உதாரணம்.

குரு உபதேசம்—குரூபதேசம். சிந்து ஊர்மி—சிந்தூர்மி.
சுயம்பூ உபதேசம்—சுயம்பூபதேசம், வதூ ஊரு—வதூரு.

குணசந்தி.

153. அ ஆ முன் இ ஈ வரி லிரண்டுங்கெட் டேயாம்.

இஃது அகர ஆகாரங்களின்முன் இ ஈ வருமா றுணர்த்து கின்றது.

(பதவுரை.) அ ஆ முன்—அகர ஆகார வீற்றின்முன், இ, ஈ வரில்—இகர ஈகாரங்கள் வந்தால், இரண்டும் கெட்டு—ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட, ஏ ஆம்—ஏகாரம் வரும்.

(பொழிப்புரை.) அகர ஆகார வீற்றின்முன் இகர ஈகாரங்கள் வந்தால் ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட ஏகாரம் வரும்.

உதாரணம்.

நர இந்திரன்—நரேந்திரன், தேவ ஈசன்—தேவேசன்.
தரா இந்திரன்—தரேந்திரன், உமா ஈசன்—உமேசன்.

154. அ ஆ முன் உ ஊவரி லிரண்டுங்கெட் டோவாம்.

இஃது அ ஆ முன் உ ஊ வருமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) அ ஆ முன் — அகர ஆகார வீற்றின்முன், உ ஊ வரில்—உகர ஊகாரங்கள் வந்தால், இரண்டும் கெட்டு—ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட, ஓ ஆம்—ஓகாரம் வரும்.

(பொழிப்புரை.) அகர ஆகார வீற்றின்முன் உகர ஊகாரங்கள் வந்தால் ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட ஓகாரம் வரும்.

உதாரணம்.

சூர்ய உதயம் — சூர்யோதயம்
ஞான ஊர்ச்சிதன்—ஞானோர்ச்சிதன்.
கங்கா உற்பத்தி—கங்கோற்பத்தி.
தயா ஊர்ச்சிதன்—தயோர்ச்சிதன்.

விருத்தி சந்தி.

155. அ ஆ முன் ஏ ஐ வரி லிரண்டுங்கெட் டையாம்.

இஃது அகர ஆகாரத்தின் முன் ஏ ஐ வருமா றுணர்த்து கின்றது.

(பதவுரை.) அ ஆ முன்—அகர ஆகார வீற்றின்முன், ஏ ஐ வரில்—ஏகார ஐகாரங்கள் வந்தால், இரண்டும் கெட்டு—ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட, ஐ ஆம்—ஐகாரம் வரும்.

(பொழிப்புரை.) அகர ஆகார வீற்றின்முன் ஏகார ஐகாரங்கள் வந்தால் ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட ஐகாரம் வரும்.

உதாரணம்.

பரம ஏகாந்தி—பரமைகாந்தி, சிவ ஐக்யம்—சிவைக்யம்.
தரா ஏகவீரன்—தரைகவீரன், தேவதா ஐக்யம்—தேவதைக்யம்.

156. அ ஆ முன் ஒ ஔ வரி லிரண்டுங்கெட் டௌவாம்.

இஃது அ ஆ முன் ஒ ஔ வருமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) அ ஆ முன்—அகர ஆகார ஈற்றின்முன், ஒ ஔ வரில்—ஓகார ஔகாரங்கள் வந்தால், இரண்டும் கெட்டு—ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட, ஔ ஆம்—ஔகாரம் வரும்.

(பொழிப்புரை.) அகர ஆகார வீற்றின்முன் ஓகார ஔகாரங்கள் வந்தால் ஈறும் முதலுமாகிய இரண்டும் கெட ஔகாரம் வரும்.

உதாரணம்.

கலச ஓதநம்—கலசௌதநம், திவ்ய ஔஷதம்—திவ்யௌஷதம்.
மகா ஓஷதி—மகௌஷதி, மகா ஔதார்யம்—மகௌதார்யம்.

ஆதிவிருத்தி சந்தி.

157. இகர ஏகார முதற்கை யாகும்.

இது மொழி முதல் இகர ஏகாரங்கள் திரியுமா றுணர்த்து கின்றது.

(பதவுரை.) முதற்கு—மொழி முதலிலுள்ள, இகர ஏகாரம்—இகர ஏகாரங்க ளிரண்டும், ஐ ஆகும்—ஐகாரமாகும்.

(பொழிப்புரை.) மொழி முதலிலுள்ள இகர ஏகாரங்க ளிரண் டும் ஐகாரமாகும்.

உதாரணம்.

கிரியிலுள்ளன—கைரிகம், வேதசம்பந்தம்—வைதிகம்.

158. உ ஊ ஒ முத லௌவா கும்மே.

இது மொழி முதல் உகர ஊகார ஓகாரங்கள் திரியுமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) முதல்—மொழிக்கு முதலிலுள்ள, உ ஊ ஓ—உகர ஊகார ஓகாரங்கள், ஔ ஆகும்—ஔகாரமாகும்.

(பொழிப்புரை.) மொழிக்கு முதலிலுள்ள உகர ஊகார ஓகாரங்கள் ஔகாரமாகும்.

உதாரணம்.

குருகுலத்தார்—கௌரவர்.
சோமன் மகன்—சௌம்யன்.
சூரன் மகன்—சௌரி.

159. மொழிமுத லகரம் ஆவா கும்மே.

இது மொழி முதல் அகரம் ஆகாரமாமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) மொழி முதல் அகரம்—மொழிக்கு முதலிலுள்ள அகரமானது, ஆ ஆகும்—ஆகாரமாகும்.

(பொழிப்புரை.) மொழிக்கு முதலிலுள்ள அகரமானது ஆகாரமாகும்.

உதாரணம்.

தசரதன் மகன்—தாசரதி, ஜநகன் மகள்—ஜாநகி.

வடமொழி யெதிர்மறை.

160. எதிர்மறை வடசொற் கியைந்த மொழிமுதல் உயிர்வரி லந்நு மொற்றுறி லவ்வுமாம்.

இஃது எதிர்மறை வருமா றுணர்த்துகின்றது.

(பதவுரை.) வடசொல் எதிர்மறைக்கு — வடமொழி யெதிர்மறைக்கு, இயைந்த—பொருந்தின, மொழி முதல் உயிர் வரில்—மொழி முத லுயிர் வந்தால், அந்நும்—அந்நும், ஒற்று உறில்—மொழிமுதல் மெய் வந்தால், அவ்வும்—அவ்வும், ஆம்—வரும்.

(பொழிப்புரை.) வடமொழி யெதிர்மறைக்குப் பொருந்தின மொழிமுத லுயிர் வந்தால் அந்நும் மொழிமுதல் மெய் வந்தால் அவ்வும் வரும்.

உதாரணம்.

ந + ஆசாரம் — அநாசாரம் (ஆசாரமின்மை).
ந + ஆதி — அநாதி (ஆதியின்மை).
ந + களங்கம் — அகளங்கம் (களங்கமின்மை).
ந + யோக்கியம் — அயோக்கியம் (யோக்கியமின்மை).

161. நிர் துர் நி கு வி பொருளின்மை நிகழ்த்தும்.

இது நிர் முதலியன இன்மைப்பொருளில் வருமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) நிர் துர் நி கு வி—நிர், துர், நி, கு, வி ஆகிய இவ் வைந்தும், பொருள் இன்மை நிகழ்த்தும் — இன்மைப்பொருளை யுணர்த்தும்.

(பொழிப்புரை.) நிர் துர் நி கு வி ஆகிய விவ்வைந்தும் இன் மைப்பொருளை யுணர்த்தும்.

உதாரணம்.

நிர் + நாமன் = நிர்நாமன் (நாமமில்லான்).
துர் + பலம் = துர்ப்பலம் (பலமின்மை).
நி + மலம் = நிமலம் (மலமின்மை).
கு + தர்க்கம் = குதர்க்கம் (தர்க்கமின்மை).
வி + குலம் = விகுலம் (குலமின்மை).

ஒழிபு.

162. வடமொழி யுயிர்முன் வன்கண மியல்பாம்.

இது வடமொழி யுயிர்முன் வன்கணம் இயல்பாமா றுணர்த் துகின்றது.

(பதவுரை.) வடமொழி உயிர்முன் — உயிரீற்று வடசொற்க ளின்முன் வருகிற, வன்கணம் — வல்லெழுத்துக்கள், இயல்பு ஆம்— இயல்பாகும்.

(பொழிப்புரை.) உயிரீற்று வடசொற்களின்முன் வருகிற வல் லெழுத்துக்கள் இயல்பாகும்.

உதாரணம்.

ஆதிபகவன், அளிகுலம்.

163. ஏயன் விகுதி யெய்தும் பிள்ளைக்கே.

இஃது ஏயன் விகுதி பிள்ளைப்பொருளில் வருமா றுணர்த்து கின்றது.

(பதவுரை.) ஏயன் விகுதி—ஏயன் என்னும் விகுதி, பிள்ளைக்கு— பிள்ளைப்பொருளில், எய்தும்—வரும்.

(பொழிப்புரை.) ஏயனென்னும் விகுதி பிள்ளைப்பொருளில் வரும்.

உதாரணம்.

கிருத்திகையின் மகன்—கார்த்திகேயன்.
கங்கையின் மகன்—காங்கேயன்.

164. ஆ ஐ ஔ முத லாகமந் திரிபாம்.

இஃது ஆகார ஐகார ஔகாரங்கள் மொழிமுதலில் தோன்றலுந் திரிபுமாமென்ப துணர்த்துகின்றது.

(பதவுரை.) ஆ ஐ ஔ—ஆகார ஐகார ஔகாரங்கள், முதல்—மொழி முதலில், ஆகமம் திரிபு ஆம்—தோன்றலும் திரிபுமாகும்.

(பொழிப்புரை.) ஆகார ஐகார ஔகாரங்கள் மொழி முதலில் தோன்றலும் திரிபுமாகும்.

உதாரணம்.

வ்யாகரண முணர்ந்தோன்—வையாகரணன்,
த்வாரங் காப்பவன்—தௌவாரிகன்; இவை ஆகமம்.
த்வாதசி—த்வி+தச, இது திரிபு.
திரிபு எனினும், ஆதேசமெனினும் ஒக்கும்.

வடமொழிப் படலம் முற்றிற்று.

உரை நூல்களிற் கண்ட

பேரகத்திய மேற்கோட் சூத்திரங்கள்

1. இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்.

(பதவுரை.) இலக்கியம் இன்றி—இலக்கியமில்லாமல், இலக்கணம் இன்று—இலக்கணமில்லை, எள் இன்று ஆகில்—எள் இல்லையாயின், எண்ணெயும் இன்று—எண்ணெயும் இல்லை, எள்ளில் நின்று—எள்ளிலிருந்து, எண்ணெய் எடுப்பதுபோல—எண்ணெயை எடுப்பதுபோல, இலக்கியத்தில் நின்று இலக்கணம் எடுபடும்—இலக்கியத்திலிருந்து இலக்கணம் சொல்லப்படும் (எ—று).

2. நெடிலு நெடுமையுந் தீர்க்கமு நெடிற்பெயர்.

(பதவுரை.) நெடிலும்—நெடிலென்பதும், நெடுமையும்—நெடுமையென்பதும், தீர்க்கமும்—தீர்க்கமென்பதும், நெடில் பெயர்—நெட்டெழுத்திற்குப் பெயர்களாம் (எ—று).

3. அவையே,
அகம்புறம் அண்மை சேய்மை பொதுமைக் [கணும்.

(பதவுரை.) அவையே — அந்தச் சுட்டுக்கள், அகம்புறம் — அகத்திலும் புறத்திலும், அண்மை சேய்மை பொதுமைக் கண் ஆம் — அண்மை சேய்மை பொதுமைகளில் வரும் (எ—று).

4. யாவென் வினாவே அஃறிணைப் பன்மை;
விகுதி பெறுங்கால் ஐம்பாலினும் வினாவாம்.

(பதவுரை.) யா என் வினா—யாவென்னும் வினாவானது, அஃறிணைப் பன்மை—அஃறிணைப் பன்மையாகும், (அது) விகுதி பெறுங்கால்—விகுதிபெறுமிடத்து, ஐம்பாலினும் வினா ஆம்—ஐம்பாலிலும் வினாவாகும் (எ—று).

5. எழுவாய்ச் சந்தியின் இசைவலி இயல்பே.

(பதவுரை.) எழுவாய்ச் சந்தியின் இசை—எழுவாய்ச் சந்தியில்வந்த, வலி—வல்லெழுத்துக்கள், இயல்பு—இயல்பாய்ப் புணரும் (எ–று).

6. வியங்கோள் விகுதிமுன் வலிஇயல் பாகும்.

(பதவுரை.) வியங்கோள் விகுதிமுன்—வியங்கோள் விகுதிக்கு முன்னே வருகிற, வலி—வல்லெழுத்துக்கள், இயல்பு ஆகும்—இயல்பாய்ப் புணரும் (எ–று).

7. இரண்டன் விபத்தி எஞ்சில் வலிஇயல்பாகும்.

(பதவுரை.) இரண்டன் விபத்தி எஞ்சில்—இரண்டாம் வேற்றுமைத் தொகையில், வலி—வல்லெழுத்துக்கள், இயல்பு ஆகும்—இயல்பாய்ப் புணரும் (எ–று).

8. பெயரே அன்றிப் பிறவுரு பேலா.

(பதவுரை.) பெயரே அன்றி—பெயர்ச்சொல்லே யன்றி, பிற—வேறு சொற்கள், உருபு ஏலா—வேற்றுமை யுருபுகளை யேற்க மாட்டா (எ–று).

**9. அதுவும் ஆதுவும் அவ்வும் உடையவும்
ஆறன் உருபென் றறைதல் வேண்டும்.**

(பதவுரை.) அதுவும் — அது வென்பதும், ஆதுவும் — ஆது வென்பதும், அவ்வும் — அ என்பதும், உடையவும் — உடைய வென்பதும், ஆறன் உருபு என்று—ஆறும் வேற்றுமை யுருபென்று, அறைதல்வேண்டும்—சொல்லவேண்டும் (எ–று).

10. கூறு படுத்தலாற் கூற்றெனப் படும்.

(பதவுரை.) கூறுபடுத்தலால் — கூறுபடுத்துவதனால், கூற்று எனப்படும்—கூற்றென்று சொல்லப்படும் (எ–று).

11. இட்டுவிட் டிரண்டும் வினையிடைச் சொல்லே.

(பதவுரை.) இட்டு விட்டு இரண்டும்—இட்டு விட்டு என்கிற இரண்டும், வினையிடைச்சொல்—வினையிடைச் சொற்களாம் (எ–று).

**12. பலவி னியைந்தவு மொன்றெனப் படுமே
யடிசில் புத்தகஞ் சேனை யமைந்த
கதவ மாலை கம்பல மனைய.**

(பதவுரை.) பலவின்—பல பொருள்களால், இயைந்தவும்—அமைந்தனவும், ஒன்று எனப்படும்—ஒன்றென்றே சொல்லப்படும். அடிசில்—சோறு, புத்தகம்—நூல், சேனை—படை, கதவம்—கதவு, மாலை—ஆரம், கம்பலம்—கம்பளம் என இவை, அனைய—அவ்விலக்கணத்தைப் பொருந்துவன (எ—று). அமைந்த வென்பதனை அடிசில் முதலிய வெல்லாப் பொருள்களோடுங் கூட்டி அவ்வவற்றிற் கேற்பப் பல பொருள்களா னியன்றவெனக் கொள்க. இவை உதாரணங்கள்.

13. வயிர வூசியு மயன்வினை யிரும்புஞ்
செயிரறு பொன்னைச் செம்மைசெய் யாணியுந்
தமக்கமை கருவியுந் தாமா மவைபோ
லுரைத்திற முணர்த்தலு முரையது தொழிலே.

(பதவுரை.) வயிர ஊசியும் — வயிரத்தானியன்ற ஊசியும், மயன்—கம்மாளனது, வினை இரும்பும்—தொழில் செய்யு மிரும்பும், செயிர் அறுபொன்னை—குற்றமற்ற பொன்னை, செம்மைசெய் ஆணியும்—செம்மைப்படுத்துகிற ஆணியும், தமக்கு அமை கருவியும்—தமக்கு அமைந்திருக்குங் கருவிகளும், தாம் ஆம்—தாமேயாகும்: அவைபோல்—அவற்றைப்போலவே, உரைத்திறம் உணர்த்தலும்—உரையின் பாகுபாட்டினை யுணர்த்துதலும், உரையது தொழிலே—உரையின் தொழிலேயாம் (எ—று).

14. ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையா
னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்.

(பதவுரை.) ஏழ் இயல் முறையது—வேற்றுமை ஏழாக நடைபெறும் முறையினை யுடையது, எதிர்முக வேற்றுமை என—விளிவேற்றுமையென்று, வேறு விளம்பான்—வேறென்று சொல்லாமல், (அது) பெயரது விகாரம் என்று — பெயரின் விகாரமேயென்று, ஓதிய—சொன்ன, புலவனும்—புலவனனவனும், உளன்—இருக்கிறன்: இந்திரன்—இந்திரனனவன், ஒருவகையால்—ஒருவிதத்தால், வேற்றுமை—வேற்றுமைகள், எட்டு ஆம் என்றனன்—எட்டாமென்று சொல்லினன் (எ—று). ஓதிய புலவன் வடமொழியிற் பாணினிபகவான்.

15. ஆற னுருபே யதுவா தவ்வும்
வேறொன் றுடையதைத் தனக்குரி யதையென
விருபாற் கிழமையின் மருவுற வருமே.

(பதவுரை.) ஆறன் உருபு—ஆறும் வேற்றுமை யுருபு, அது—அதுவும், ஆது — ஆதுவும், அவ்வும் — அகரமும் (ஆகும்): வேறொன்று உடையது என—வேறொன்றனை யுடையதென்றும், தனக்குரியது என—தனக்குரியதென்றும், இருபால் கிழமையின்—இரு பகுதியவாகிய கிழமையினும், மருவுறவரும்—பொருந்த வரும் (எ—று). கிழமை இரண்டு தற்கிழமை பிறிதின்கிழமை. செய்யுட்கிழமையுமாம்.

16 மற்றுச்சொன் னோக்கா மரபி னனைத்து
முற்றி நிற்பது முற்றியன் மொழியே.

(பதவுரை.) மற்றுச்சொல் நோக்கா—வேறு சொல்லை நோக்காத, மரபின்—மரபோடு, அனைத்தும்—எல்லாம், முற்றி நிற்பது—நிறைந்திருப்பது, முற்றியல் மொழி—வினைமுற்றுச் சொல்லாம் (எ—று).

17. காலமொடு கருத வரினு மாரை
மேலைக் கிளவியொடு வேறுபா டின்றே.

(பதவுரை.) காலமொடு கருதவரினும் — காலத்தோடு கூடி வருவதா யெண்ணவந்தாலும், ஆரை—ஆர் விகுதி, மேலைக் கிளவியொடு வேறுபாடு இன்று—முன்னர்க்கிளந்த விகுதிச் சொல்லோடு வேறுபடுதல் இல்லை (எ—று).

18. காலமும் வினையுந் தோன்றிப்பா லொன்றுது
பெயர்கொள் ளும்மது பெயரெச் சம்மே.

(பதவுரை.) காலமும் வினையும் தோன்றி—காலமும் வினையும் வெளிப்பட்டு நிற்க, பால் தோன்றுது—பால் ஒன்றும் வெளிப்படாமல், பெயர் கொள்ளுமது—பெயரைக்கொண்டு முடிவது, பெயரெச்சம்—பெயரெச்சமாகும் (எ—று).

19. காலமும் வினையுந் தோன்றிப்பா லொன்றுது
வினைகொள் ளும்மது வினையெச் சம்மே.

(பதவுரை.) காலமும் வினையும் தோன்றி—காலமும் வினையும் வெளிப்பட்டு நிற்க, பால் தோன்றுது—பால் ஒன்றும் வெளிப்படாமல், வினை கொள்ளுமது—வினையைக்கொண்டு முடிவது, வினையெச்சம்—வினையெச்சமாம் (எ—று).

பேரிசைச் சூத்திரம்

மூலமும் உரையும்.

பேரிசைச் சூத்திரம்

தமிழ் மொழி விளக்கம்.

1. மொழியுளத் தாலறி யாச்சிவ வுணர்வாற்
றனியியன் மறைமுன் சாவாக் கல்வியாய்
ஐந்தக் கரத்தி லமையுந் தமிழ்மொழி
ஒலிவடி வாகி யுலவு மநாதியில்.

(பதவுரை.) மொழியால்—வாக்கினாலும், உளத்தால்—மனத்தினாலும், அறியா—தெரியாத, சிவ வுணர்வால்—பேரறிவால், தனி இயல்—தனித்து நடைபெறுகின்ற, மறைமுன்—வேதங்களுக்கு அநாதியாயும், சாவாக் கல்வியாய்—எக்காலத்தும் மாயுந்தன்மையில்லாததாயும், ஐந்தக்கரத்தில்—றகார னகார ழகார எகார ஒகாரங்களாகிய ஐந்தனையும் தனக்குச் சிறப்பெழுத்துக்களாகக் கொண்டு, தமிழ்மொழி அமையும்—தமிழ்மொழி பொருந்தும். (அம்மொழி), அநாதியில்—முந்தி, ஒலிவடிவாகி—சத்தமாத்திரத் தன்மைத்தாய், உலவும்—பரவியிருந்ததென்க.

2. அம்மு தற்சிவம் அமைக்குஞ் சேய்க்கும்
உயிர்கள் ஞானத் துவந்தாங் கொளிர
உரைத்த தக்கரக் கால மாகும்.

(பதவுரை.) அம்முதற்சிவம்—முழுமுதற் கடவுள், உயிர்கள்—அநாதிமல பெத்தராகிய மக்கள், ஞானத்து உவந்து ஆங்கு ஒளிர—அறிவில் கலந்து விளங்க, அம்மைக்கும்—பார்வதிக்கும், சேய்க்கும்—முருகக் கடவுளுக்கும், உரைத்தது—சொல்லியருளினது, அக்கரக்காலமாகும்—எழுத்துக்களினது உற்பத்திக்காலமாம்.

அறிவிற் கலந்தொளிர வெனவே அநாதிமலபெத்தம் பெறப்பட்டது.

3. மகத்துவ ஞான சித்துவல் லவனும்
அகத்தியன் றவத்தா லருந்தமிழ் பெற்றிங்
கியலிசை நாடகங் களுக்கீ ராறின்
இயலாய் வகுத்த திலக்கணக் காலம்.

(பதவுரை.) மகத்துவ ஞான சித்து வல்லவனும் – பேரறிவினோடு உலகவியல்பு நன்குணர்ந்தோனாகிய, அகத்தியன்–அகத்திய மகாமுனிவர், தவத்தால்–அருட்பேற்றினாலே, அருந்தமிழ்பெற்று–கிடைத்தற்கரிய தமிழ் மொழியினை (குன்றமெறிந்த குமரவேளால் செவியறிவுறுத்தப்) பெற்று, இங்கு–இவ்வுலகில், இயல் இசை நாடகங்களுக்கு – இயலிசை நாடகமென்னு முத்தமிழ்க்குரிய, ஈராறின்–பன்னிரண்டாகிய, இயலாய் வகுத்தது – இலக்கணங்களாக வகுத்தருளியதே, இலக்கணக்காலம்–தமிழ் இலக்கண மேற்பட்ட காலமாம்.

4. மோனையாந் தெய்வத் தமிழ்மொழி நிறீஇய
சங்கத் தலைவர்கள் தலைமை பூண்டங்
கறம்வள ரவையில் அரங்கே றியநாள்
வழுதியர் வளர்த்தது சங்க காலம்.

(பதவுரை.) சங்கத் தலைவர்கள் தலைமைபூண்டு–சங்கப் புலவர்கள் தமிழ்த்தலைமை பெற்று, நிறீஇய–(வழூஉக்களைந்து) வளர்த்த, மோனை ஆம் தெய்வத் தமிழ்மொழி–அநாதியாகிய தெய்வத்தன்மை வாய்ந்த தமிழ்மொழி, அங்கு – பாண்டிநாட்டில், அறம் வளர் அவையில்–அறமுதலிய வுறுதிப்பொருள்களை கூறுகின்ற சங்கத்தில், அரங்கேறிய நாள் – அறிவுடையோரா னேற்றுக்கொள்ளப் பெற்ற ஞான்று, வழுதியர் வளர்த்தது–பாண்டி மன்னர் பரிபாலித்ததே, சங்க காலம்–சங்ககாலமாகும்.

தலைமை இரண்டனுள் முன்னது புலமையின் மேற்று: பின்னது பாண்டியனவையத்துப்பூண்ட தலைமைப்பாடு. முன்றலைமைக்குத் தமிழின்வன்மை அதிகாரத்தாற் பெறப்பட்டது. உடனெண்ணப்பட்ட வுறுதிகள் நான்கனுள், செய்யுளாதலின், தலைமை பற்றி அறமே கூறிற்றாயினும், இனம்பற்றி ஏனைமூன்றுங் கொள்ளப்படும்.

5. சித்தெலா நிறைந்து சித்தா யமர்ந்த
தேசிகர் மரபில் சிறந்து விளங்கும்
மடாதி பதிகளா மாண்பமை ஞானியர்
அளவிற் படுவதவ் வதீன காலம்.

(பதவுரை.) சித்து எல்லாம் நிறைந்து – ஞானகுணங்களெல்லாம் நிறையப்பெற்று, சித்து ஆய் அமர்ந்த – அறிவுருவாயமர்ந்த, தேசிகர் மரபில்–ஆசாரிய சந்ததியில், சிறந்துவிளங்கும்–மேம்பட்டு விளங்கும், மடாதிபதிகள் ஆம் – மடாதிபதிகளாகிய, மாண்பு அமை – பெருமை யமைந்த, ஞானியர் – ஞானியாது, அளவில் – அளவாக, படுவது–பொருந்தியிருப்பது, அ–அந்த, அதீனகாலம்– ஆதீன காலமாம்.

அவ்வதீனகாலம் அளவிற்படுவதென முடிக்க. மடாதிபதிகள் காலமட்டும் தமிழ் நிலைகுலையாதிருந்த தென்றபடி.

6. கொல்லா விரதம் பூண்ட நலத்தோர்
அறிவா னிறைந்த வறமாண் புடையோர்
தமிழின தருமை தனியா யுணர்ந்தோர்
கருவிநூற் காவியங் கழறும் பெரியோர்
கால கதியாற் கடைநிலைப் படுவோர்
தம்வயப் படுவது சமண காலம்.

(பதவுரை.) கொல்லா விரதம் – கொல்லாமையாகிய விரதத்தை, பூண்ட–மேற்கொண்ட, நலத்தோர்–நன்மையையுடையவர், அறிவால் நிறைந்த – ஞானத்தால் நிரம்பப்பெற்ற, அறமாண்பு உடையோர் – அறநெறியாகிய மாட்சிமையுடையவர், தமிழினது அருமை–தமிழ்மொழியின் அருமையை, தனியாய் உணர்ந்தோர்–நிகரற அறிந்தவர், கருவிநூல் காவியம் கழறும் பெரியோர்–கருவிநூல்களையும் காவியங்களையும் சொன்ன பெரியவர், காலகதியால்–கால மாறுபாட்டால், கடைநிலைப்படுவோர்–குன்றிய சமயத்தினால் கடைப்பட்டவர்களாகிய சமணர்களது, வயப்படுவது–வசத்ததாகி வளர்க்கப்பெற்றது, சமணகாலம்–சமணகாலமாகும்.

7. தெய்வ மறையாம் செந்தமிழ்ப் பிதாமொழி
ஆரிய நங்கையோ டணைந்து கலந்து
காவிய நடையால் கவிகள் பொழிய
பொலிவுபெற் றிருப்பது புராண காலம்.

(பதவுரை.) செந்தமிழ் – செவ்விய தமிழாகிய, தெய்வமறை ஆம்–தெய்விகமுள்ள மறைபோலும், பிதாமொழி–பிதுர்ப்பாஷையானது, ஆரிய நங்கையோடு–ஆரியமாகிய பெண்ணோடு, அணைந்து கலந்து–தழுவிக் கூடி, காவிய நடையால்–காவிய நடையினால், கவிகள் பொழிய–கவிகளைப் பொழியும்படி, பொலிவுபெற்றிருப்பது– விளக்கமடைந்திருப்பது, புராணகாலம்–புராணகாலமாகும்.

8\. தமிழினை யறியார் சார்பினிற் பட்டுப்
பெருமை முற்றும் பிறழ்ந்து நோய்பட்டு
அந்நியர் வசப்பட் டழிந்து பிற்பட்
டாதர விலாம லாகுங் காலத்
தறனிகழ் அதம காலம் சென்றபின்
உண்மதச் செல்வரும் உயர்ஞா னியரும்
கொல்லா விரதங் கொளுமந் தணரும்
உலகிற் பரவி யுவந்தாங் கொளிரவும்
தமிழே சிவமாய்த் தழைத்து வளரவும்
அற்புதச் சிற்சபை யண்ணல் விளையாட்
டருளாற் றழைக்கு மதுசத் தியமே. (எதிர்காலம்.)

(பதவுரை.) தமிழினை அறியார் — (புராண காலத்தின்பின்) தமிழ்மொழி தன்னை அறியாதவாது, சார்பினில்பட்டு—வசமாகி, பெருமை முற்றும் பிறழ்ந்து—பெருமை முழுதும் மாறுபட்டு, நோய்பட்டு—பல விடையூறுகளால் மெலிந்து, அந்நியர் வசப்பட்டு அழிந்து—பிறர் வசப்பட்டழிந்து, பிற்பட்டு—பிறகிட்டு, ஆதரவு இல்லாமல் ஆகும் காலத்து—பற்றுக்கோடில்லாமல் குலையுங் காலத்தில், அறன் இகழ் அதமகாலம் சென்றபின்—தரும நெறி யிழிக்கப்படுவதாகிய பொல்லாக்காலங் கழிந்தபின்பு, உள் மதச் செல்வரும்—உட்சமயச் செல்வரும், உயர்ஞானியரும்—உயர்ந்த ஞானவான்களும், கொல்லாவிரதம் கொள்ளும் — கொல்லாமையாகிய விரதத்தை மேற்கொண்ட, அந்தணரும் — வேதியரும், உலகில் பரவி — உலகத்தில் நிறைந்து, உவந்து ஒளிரவும் — களிக்குமாறு உலகில் விளங்கவும், தமிழே—அத்தமிழ் மொழிதானே, சிவமாய்—மங்களகரமாய், தழைத்து வளரவும் — செழித்தோங்கவும், அற்புதம் — ஆச்சரியகாமாகிய, சிற்சபை — ஞானசபையிலுள்ள, அண்ணல்—சிவபெருமானது, விளையாட்டு—திருவிளையாடலானது, அருளால்—திருவருளால், தழைக்கும் — செழிக்கும், அது — அச்செய்தி தான், சத்தியமே—உண்மையேயாம்.

தமிழ்மொழி அதிகாரத்தாற் பெறப்பட்டது. தமிழே என்பதன் ஏகாரம் உலகின் மற்றெல்லா மொழிகளினும் சிறந்து வளம் பெறுந் தன்மைத்தாமென வுணர்த்தலிற் பிரிநிலையாம். தேற்றமுமாமென்க.

9\. தமிழ்சிவ மினிமை யெனுந்தனிப் பொருளாம்
அமிழ்தெனும் அநாதி யியற்கையாய்ப் பன்னிரு
கலையினை யுடைய கதிரவ னென்னத்
தலைமையா யமைந்த தனியியற் பிதாமொழி.

(பதவுரை.) பன்னிரு கலையினையுடைய கதிரவன் என்ன—பன்னிரண்டு கலைகளால் (புறவிருளைச் சீக்கும்) தலைமைப்பாட்டினையுடைய சூரியனைபோல, தலைமையாய் அமைந்த — (பன்னிரண்டு கொடுந்தமிழானும் அறியாமையைப் போக்குந்) தலைமைப்பாட்டினைக்கொண்ட, அமிழ்து எனும் தமிழ்—செந்தமிழ் மொழியாகிய, தனி இயல்—தனிமையென்னும் இயல்வாய்ந்த, பிதாமொழி—முன்மொழி, அநாதி இயற்கையாய்—ஏனை மொழிகளுக்கு முந்தியதாய், தனிப்பொருளாம்—என்றுமழியா வியல்பிற்றாய ஒப்பற்ற பொருளை யுள்ளீடாகக் கொண்டதாகும்.

10. சோதியாங் கசடதப பக்கள் தோற்றத்தைக்
காதிநன் னான்காய்க் கணித்துக் காட்டி
உதாத்த முதலிய வோசையுள் ளனவாய்
நிதானித் தணிபெற நிலைக்கச் செய்து
மற்றைய வெழுத்தையவ் வாறே யியற்றப்
பெற்றிலா மையினாற் பெரிதுளம் வாடினர்
இனிய ழகாரம் எமக்கிங் குரித்தெனக்
கனிவொடு காட்டாக் கள்ளமென் சொல்வேம்
வாதிக ளாகி வழக்குப் பேசும்
ஆதிச் செயற்கை மொழியதா மாரியஞ்
சோடச கலையாய்த் துலங்குறு சந்திரன்
மாடகத் தோங்கு மாதுரு மொழியே.

(பதவுரை.) சோதியாம்—(மற்றைய எழுத்துக்களினும்) விளக்கம் பெறும், கசடதபக்கள் தோற்றத்தை—க, ச, ட, த, ப என்னும் எழுத்துக்களின் உற்பத்தியை, காதி — முயன்று, நன்னான்காய் — ஒவ்வோரெழுத்தினுக்கு நான்கு ஓசையினைக்கொண்டதாக, கணித்துக்காட்டி — கணக்கிட்டுக் காட்டினதன்றியும், உதாத்தமுதலிய ஓசையுள்ளனவாய்—உதாத்தமுதலிய சுரபேதங்களைக் கொண்டதாக, நிதானித்து — நிருத்தமுறையானே கவனித்து, அணிபெற— அழகுண்டாக, நிலைக்கச்செய்து — நிலைநாட்டி வைத்ததன்றியும், மற்றைய — மற்றுமுள்ளனவாகிய, எழுத்தை — அக்கரங்களை, அவ்வாறே யியற்ற—அம்முறையே உதாத்த முதலியவைகளைக் காட்டி முடிக்க, பெற்றிலாமையினால் — கூடாமையால், பெரிதுளம் வாடினர் — (அவ்வடமொழிக்குரியவர்) மிகவும் மனம் நைந்தனர், இனிய — (தமிழ்மொழிக்கே) சிறந்த, ழகாரம் — ழகரம் என்னும் எழுத்தும், எமக்கு இங்கு உரித்து என—எமக்கு இங்கு உரியதாகுமென்று, கனிவொடு—அன்போடு, காட்டா—காட்டாமல் மறைத்த, கள்ளம்—வஞ்சனையை, என்சொல்வோம்—யாதென்று கூறுவோம்,

வாதிகளாகி – வழக்குத் தொடுப்பவராகி, வழக்குப்பேசும் –வீண் வாதமாடுகின்ற, ஆதிச்செயற்கை மொழியதாம் ஆரியம்–ஆதியில் உதாத்தம் முதலியவைகளைச் செயற்கையாகக்கொண்ட மொழியாகிய ஆரியமானது, சோடசகலையாய் – பதினாறு கலைகளோடு கூடி, துலங்குறு சந்திரன்மாடு – விளங்குகின்ற சந்திரன்போல, அகத்து ஓங்கும் – கற்போரது உள்ளத்தில் விளங்குகின்ற, மாதுருமொழி– தாய்மொழியாகும்.

உதாத்தம் முதலிய என்றது உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என்பன. இவற்றை முறையே தமிழ் நூலோர் எடுத்தல், படுத்தல், நலிதல், உழைப்பு என்பர்.

மதிவாணர் வெண்பா.

முத்தமிழுக்குரிய விலக்கணங்களாமா றுணர்த்துகின்றது.

11. எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு
வழுத்துஞ் சுருதிசுரம் வண்ணம்—அழுத்துந்
தனியொத்துப் பாவம் சரச மிரசம்
பனிரண் டிலக்கணமாம் பார்.

(பதவுரை.) இலக்கணம் – இலக்கணமானது, எழுத்தொடு – எழுத்திலக்கணத்துடன், சொல் பொருள் யாப்பு அணி என்னு– சொல்லிலக்கணம் பொருளிலக்கணம் யாப்பிலக்கணம் அணியிலக்கணம் என்றும், வழுத்தும்–சொல்லப்பட்ட, சுருதி–சுருதியிலக்கணம், சுரம் – சுரவிலக்கணம், வண்ணம் (என்னு) – இராகவிலக்கணம் என்றும், அழுத்தும் – அழுத்துதற்குரிய, தனி – ஒப்பற்ற, ஒத்து – தாளவிலக்கணம், பாவம் – பாவனையிலக்கணம், சரசம்–அலங்காரவிலக்கணம், இரசம் (என்னு)–நவரசவிலக்கணம் என்றும் சொல்லுமாறு, பன்னிரண்டு ஆம் – பன்னிரண்டு வகையினை யுடைத்தாம்.

(பொழிப்புரை.) இயற்றமிழுக்குரிய எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னு மைந்திலக்கணமும்; இசைத்தமிழுக்குரிய சுருதி, சுரம், இராகம் என்னு மூன்றிலக்கணமும்; நாடகத்தமிழுக்குரிய தாளம், பாவனை, அலங்காரம், நவரசமென்னும் நான்கிலக்கணமும் என்று சொல்லுமாறு முத்தமிழுக்குரிய விலக்கணமானது பன்னிரண்டு வகையினை யுடைத்தாம்.

இயல் இசை நாடகமென்னும் முத்தமிழில், முன்னது ஏனையிரண்டினும் சிறந்ததென்பது தோன்ற என்னு வெனு மிடைச்சொற் கொடுத்துப் பிரித்தோதினர்.

நாடகம்.

* இயலிசை யுடன்பா வனையலங் காரம்,
தாள மிரதந் தழைப்பன நாடகம்.

(பதவுரை.) இயல் — இலக்கணம், இசை — சங்கீதம், உடன் — இவற்றுடன், பாவனை — அபிநயம், அலங்காரம் — அழகின் இலக்கணம், தாளம் — தாளவிலக்கணம், இரதம் (ரஸம்) — நவரசவிலக்கணம், (ஆகிய இவை) தழைப்பன — மிகுந்திருப்பன, (எவையோ அவை) நாடகம் — நாடகமெனப்படும்.

விலாசம்.

* நாட கத்திடை வாசகம் வினவிடையாய்,
மேவி நடையுறு வனவிலாச மென்பர்.

(பதவுரை.) நாடகத்திடை — நாடகத்தில், வாசகம் — வசனம், வினவிடையாய் — கேள்வியும் உத்தரமுமாய், மேவி — பொருந்தி, நடையுறுவன — நடைபெற்று வழங்குவன, விலாச மென்பர் — விலாசம் என்று சொல்லுவர் இசைநாடக விலக்கண முணர்ந்தோர்.

வாசகப்பா.

* ஆசிரி யப்பா கலந்த வாசகம்,
வாசகப் பாவென வழுத்தினர் புலவர்.

(பதவுரை.) ஆசிரியப்பா — அகவற்பாவுடன், கலந்த — கூடின, வாசகம் — வசனமானது, வாசகப்பாவென — வாசகப்பாவாகுமென்று, புலவர் — அறிவுடையோர், வழுத்தினர் — சொல்லினர்.

* இம்மூன்று சூத்திரங்களும் அகத்தியனார் செய்தனவென்ப.
மற்ற விஷயங்களை இசைநாடக விளக்கத்திற் கண்டுகொள்க.

சூசிபத்திரம்.

		பக்கம்.
	தற்சிறப்புப் பாயிரம்	17
க.	எழுத்துப் படலம்	18
உ.	எழுத்துற்பத்திப் படலம்	41
ங.	எழுத்து வரன்முறைப் படலம்	47
ச.	பன்மொழியாக்கப் படலம்	63
ரு.	வடமொழிப் படலம்	68
	மேற்கோட் சூத்திரங்கள்	77
	பேரிசைச் சூத்திரம்	81

சூத்திர முதற்குறிப்பு அகராதி.

I. பேரகத்தியம்.

	பக்கம்.
அ ஆ முன் அ ஆ	70
அ ஆ முன் இ ஈ	72
அ ஆ முன் உ ஊ	72
அ ஆ முன் எ ஐ	72
அ ஆ முன் ஒ ஔ	73
அ இ உ எ	22
அ இ உ ம்	23
அஃகேனந்	27
அகரம் இகரம்	61
அகரம் உகரம்	61
அகரமுத	21
அச்சாவி	21
அடிதலை	21
அண்ண முடிநா	44
அண்பல் லடிநா	43
அண்பல் லடியை	44
அண்பன் முதலை	44
அணரி நுனிநா	45
அதுவும் ஆதுவும்	73
அநாதி	19
அவப்பிரஞ் சக	68
அவற்றுள், அ ஆ	42
அவைதாம், ஒற்றொலி	56
அவையே, அகம்	24
அவையே, இயற்கை	34
அளபும்	34
அளபெடை மக்குற	40
அளபெடை மூன்றன்	59
ஆ ஈ ஊ ஏ	23
ஆ ஏ ஓ	25
ஆ ஐ ஔ	76
ஆத னநாதியு	41
ஆய்தக் கிடஞ்	45
ஆய்தங் குறில்	35
ஆய்தமு	38
ஆய்த மெய்	27
ஆரியச்	69
ஆரியந் தமிழ்ப்	70
ஆவி, ஞ ண ந ம ன	55
ஆவி யிடைமை	41
ஆற னுருபே	79
இ ஈ எ ஏ	42
இ ஈ முன்	71
இ உ இரண்டும்	30
இ உக் குறுக்க	60
இகர ஏகார	73
இகரம் யகர	57
இடையிடைமை	30
இடையெழுத்	29
இரண்டன்	78
இரண்டிதழ்	44
இரேகை	19
இலக்கண	17
இலக்கியம்	77
உ ஊ ஒ ஓ	42
உ ஊ ஓ முத	73
உ ஊ முன்	71
உடலுடம்	28
உத்திரி	35
உயிர்நெட்	63
உயிர்நெடி	32
உயிர்முதன்	30
உயிர்மெய், அளபெடை	31
உயிர்மெய் மயக்கிற்	55
உயிர்மெய் யல்லவை	47
உயிர்மெய் யுயிரள	40
உயிரே, குறி	22
உயிரே மெய்யூர்ந்	31
உன்னல் காலே	58
எ ஒவ்வும்	38
எகர வொகர	38
எடுத்தல் படுத்த	46

	பக்கம்.
எதிர்மறை	 74
எல்லா நாட்	 69
எழுத்துப் பெயர்	 57
எழுத்து முதல்	 19
எழுத்தே, இடுகுறி ..	 39
எழுத்தொலி	 19
எழுதப் படுதலா	 18
எழுவாய்ச்	 73
ஏயன் விகுதி	 75
ஏழியன்	 79
ஐந்தொழி	 33
ஐம்பாற்	 24
ஒவ்வல், ...	 39
ஒற்றள பெடை....	 60
ஒற்றுமுன்	 56
ககரமுதன்	 27
ககார ஙகார....	 43
க ச த ந ப ம வ	 64
கசதந பமவுயிர்	 47
க ச த ப வல்லன..	 49
கண்ணிமை....	 57
காலமும்....	 80
காலமும் வினையுங்	 80
காலமொடு	 80
குற்றுயி ரளபீறு	 55
குற்றெழுத் தைந்து	 63
குறிலல்லன	 36
குறிலாண்	 37
குறிலுங்	 22
குறிலொரு மாத்திரை....	 58
குறுகிய மவ்விற்கு....	 60
கூறு படுத்தலாற்	 78
ஙகாரமவ் வேற்றுச்	 49
ஙகர முன்னர்க்....	 50
ஙஞண	 33
சகார ஞகார	 43
சநுக்கிரகஞ் சங்கதந்	 68
சநுக்கிரகஞ் சங்கத மவப்	 68
சுட்டல்	 23
ஞகரம் அ ஆ	 48
ஞகர முன்னர்ச்	 50
டகர முன்னர்க்	 50
டகார ணகார	 43
ணகரமுன்	 50
தத்தமிற் றிரிபே	 46
தலைமையக்	 45
தனித்து	 26
தனிநிலையு	 28
தனிமொழி	 66
தீர்க்கங்	 70
தேசியந்	 70
நகர முன்னந்	 51
நிர் துர்	 75
நெடிலு	 23
பலவி னியைந்தவு....	 73
பன்னீ ருயிரு	 47
பாகதம், தற்பவந்	 69
புல்லல்	 31
பெயர்வினைக் குணங்களை	 66
பெயர்வினை யிடத்துப்....	 65
பெயரிரு	 66
பெயரே	 73
பொதுவெழுத்	 40
பொருளிடங்	 65
மகரம் ணனக்கீழ்	 37
மம்முன் பயவ	 51
மயக்கம் புணர்ச்சி	 49
மற்றுச்சொன்	 80
முதலுயிர்	 20
முதலெழுத்	 20
முதனு முதலண	 44
மூவள பொலித்த	 59
மூன்றிடத்	 36
மெய்க ளகரமே	 62
மெய்ம்மாத் திரையே	 59
மெய்யி னியக்க....	 57
மெய்யொடு மேவினு	 56
மெய்வலி	 28
மெல்லெழுத்	 29
மெலிமென்மை	 29
மேற்பல்லே....	 45
மொழிந்தவெழுத்தான்	 63
மொழிமுத லகரம்	 74
மொழியே, ஓரெழுத்	 67
மொழியே, பெயர்வினை	 65
யகரம், அ ஆ	 48
ய ர முன்	 51
ய ர ழ வீரொற்றுங்	 54

	பக்கம்.		பக்கம்.
யாவென்	 25	வல்லெழுத்	 28
ரகார ழகாரங்	 53	வலிவன்மை	 29
ர ழவல் லன....	 54	வியங்கோள்	 73
லகர முன்னர்க்	 52	விளியிசை	 60
ளவிறு	 37	வினவல்	 26
வகரம், உ ஊ	 48	வினைபல	 65
வகர முன்னர்	 52	ழகர முன்னர்	 52
வடமொழி	 75	ளகர முன்னர்க்....	 52
வயிர வூசியு	 79	றகர முன்னர்க்	 53
வரைமித	 53	னம்முன்	 53

II. பேரிசைச் சூத்திரம்.

	பக்கம்.		பக்கம்.
அம்முதற்....	 83	தமிழினை....	 86
எழுத்தொடு	 83	தெய்வ மறை..	 85
கொல்லா....	 85	மகத்துவ	 84
சித்தெலா	 84	மொழியுளத்	 83
சோதியாங்	 87	மோனையாங்	 84
தமிழ்சிவ	 86		

குறிப்பு.—"உரைநூல்களிற் கண்ட பேரகத்திய மேற்கோட் சூத்திரங்கள்" என்னுந் தலைப்பின் கீழ்வருஞ் சூத்திரங்களுள் மூன்று நாலுட் காணப் படுவனவே. ஆயினும் அவை, எனக்குக் கிடைத்த பிரதிகளிலெல் லாம் இரண்டிடத்தும் இடம் பெற்றிருந்தமையின் அவ்வாறே அச்சிற் பதிப்பிக்கலாயினேன்.

அரும்பத விளக்கம்.

	பக்கம்.
அக்கரக்காலம்—எழுத்துக்களின் உற்பத்திக்காலம்	83
அங்காத்தல்—வாய்திறத்தல்	42
அச்சு—உயிர்	22
அசேதனர்—அறிவிலாதார்	63
அண்ணம்—மேல்வாய்	41
அணரி—அண்ணம்	45
அல்—மெய்	28
இடைமை—இடையெழுத்து	30
இயக்கம்—சஞ்சாரம்	57
இயம்புவல்—சொல்லுவேன்	17
இயலும்—பிறக்கும்	42
இரச்சுவம்—குறில்	22
இரேகை—எழுத்து	19
இறைவன்—தலைமைப்பாடுடையவன்	13
உதானன்—உதானவாயு	41
ஊ—இறைச்சி	63
ஊமை—மெய்	28
ஊர்தி—வாகனம்	47
ஏ—அம்பு	63
ஓ—மதகுநீர் தாங்கும் பலகை	63
காண்டம்—நூலின் பெரும்பிரிவு.	17
கைதை—தாழை	48
கௌவை—பழிச்சொல்	43
சங்கமம்—புணர்ச்சி	49
சிற்சபை—ஞானசபை	86
செப்பம்—நடுவுநிலைமை	54
செயிர்—குற்றம்	79
ஞமலி—நாய்	48
ஞாலம்—பூமி	48
ஞெகிழி—சிலம்பு	48
ஞொள்கிற்று—குறைந்தது	48
தீர்க்கம்—நெடில்	23
தெவ்வர்—பகைவர்	54
தேசியம்—திசைச்சொல்	70
நாதம்—ஒலி	41
நாமுடி—நாவினுனி	43
நே—அன்பு	64
பரிசம்—வல்லினம்	29
பரியாயப் பெயர்—ஒருபொருள் குறித்த பலபெயர்கள்	21
புலுதம்—அளபெடை	34
புன்கு—புனமுருங்கை	53
பூதம்—உயிர்	22
பே—நுரை	64
மஞ்ஞை—மயில்	54
மயன்—கம்மாளன்	79
மாதுருமொழி—தாய்மொழி	88
முதல்நா—அடிநா	42
மொய்ம்பு—வலிமை	55
யவனர்—சித்திரம் எழுதுவோர்	48
யூகம்—படைவகுப்பு	48
வரும்—பிறக்கும்	44
வல்சி—சோறு	52
விகுலம்—குலமின்மை	75
விடுத்தல்—நொடித்தல்	58
வியஞ்சனம்—மெய்	28
விலங்கல்—வருந்திச் சொல்லுதல்	46
விளிம்பு—ஓரம்	42
வேட்கை—ஆசை	49
வையம்—பூமி	49

S. P. C. K. Press, Vepery, Madras—1912.